The "BHARATI" Reg. No. M. 2456.

ஜுலை 1930.




மாலை 2. மணி 7.

ஓர் தேசிய

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணசுவாமி,

ஆசிரியர்.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

TL
N29BH
N30-2.7
198530

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார் & மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்,

17. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

18. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷ்மிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

19. ,, ஆ. ஆத. இராமனாதத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியல் P. O., தேவகோட்டை.

20. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.

21. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், அதங்குடி, புளியல் P. O., தேவகோட்டை.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.



படங்களுடன் வெளிவந் துலாவும் தேசீய மாலிகை.

மாலை 2. மணி 7.

## பொருள் அடக்கம்.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | சத்தியப் போர்—திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ... | 489 |
| 2. | வருங்கால பாரத தேசம்—பாரதியார் ... ... | 490 |
| 3. | கிராமங்களில் வேலை செய்யுங்கள்—ஆசிரியர், "பாரதி." | 492 |
| 4. | தமிழ் நடைப் பயிற்சி—திரு. குமரய்யா அவர்கள், B. A., B. L. | 500 |
| 5. | ஆல்ப்ரெட் நோபல்—ஸ்ரீமான் சி. கு. நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள் ... | 503 |
| 6. | அமெரிக்கா எவ்வாறு சுதந்திரம் பெற்றது?—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) ... | 513 |
| 7. | தோலும் நிறமும்—ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் ... | 526 |
| 8. | தாஞ்சத்து எழுத்தச்சன்—ஸ்ரீமான் என். வேங்கட ரமணன் அவர்கள் ... | 531 |
| 9. | கொரியாவின் சுதந்திர எழுச்சி—ஸ்ரீமான் வி. எ. பெருமாள் அவர்கள் ... | 539 |
| 10. | தமிழ் நாடக மேடை—மொழிபெயர்ப்பு ... ... | 548 |
| 11. | டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம்—ஸ்ரீமான் மாத்ருபூதம் அய்யர் அவர்கள், B. A. ... | 552 |
| 12. | ஆசிரியர் குறிப்புகள் ... ... ... | 555 |

1. புதிய போஷகர்கள், 2. முகமதிய சகோதரர்கள், 3. கிராமங்களின் விழிப்பு, 4. ஜெயகர்—சாப்ரூ ராஜீ முயற்சி, 5. தபால் நிலையங்களில் புஸ்தக விற்பனை, 6. கிறிஸ்துவ சகோதரர்களுக்கு.

படம்.

1. ஆல்ப்ரெட் நோபல்.


# பாரதி

## ஓர் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர்: ரா. நாராயணசுவாமி.


| மாலை 2 | உத்தமபாளையம் 1930-ஞு ஜூலைமீ | மணி 7 |
|---|---|---|


## சத்தியப் போர்.

கத்தியின்றி ரெத்தமின்றி யுத்தமொன்று நடக்குது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும்யாரும் சாருவீர். (கத்தி)

ஒண்டியண்டி குண்டுவிட்டு உயிர்பறித்த லின்றியே
மண்டலத்தில் கண்டிலாத சண்டையொன்று புதுமையே. (கத்தி)

குதிரையில்லை யானையில்லை கொல்லுமாசை யில்லையே
எதிரியென்று யாருமில்லை எற்றுமாசை இல்லதாய். (கத்தி)

கோபமில்லை தாபமில்லை சாபங்கூட சொல்லிடோம்
பாபமான செய்கையொன்றும் பண்ணுமாசை யின்றியே. (கத்தி)

கண்டதில்லை கேட்டதில்லை சண்டையிந்த மாதிரி
பண்டைசெய்த புண்ணியம் பலித்ததேநாம் பார்த்திட. (கத்தி)

காந்தியென்ற சாந்தமூர்த்தி தேர்ந்துகாட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமைகுன்ற வாய்ந்ததெய்வ மார்க்கமே. (கத்தி)

—வெ. இராமலிங்கம் பிள்ளை.

# வருங்கால பாரத தேசம்.

ராகம்—புன்னாகவராளி.

### பல்லவி.

பாரத தேச மென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப் பகை வெல்லுவார்.

### சரணங்கள்.

௧. வெள்ளிப் பனி மலையின் மீதுலவு வோம்—அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்,
பள்ளித் தல மனைத்துங் கோயில் செய்குவோம்—எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்.

௨. சிங்களத் தீவினுக் கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்,
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்.

௩. வெட்டுக் கனிகள் செய்து தங்க முதலாம்
வேறு பல பொருளுங் குடைந் தெடுப்போம்.
எட்டுத் திசை களிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்.

௪. முத்துக் குளிப்ப தொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற் கரையிலே.

௫. சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் னாட்டிளம் பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டி சைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடி வருவோம்.

௬. கங்கை நதிப்புரத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர் தங் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

19853



௭. காசி நகர்ப்புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர் கருவி செய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்க மளிப்போம்.

௮. பட்டினி லாடையும் பஞ்சி லுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்.

௯. ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்.

௰. குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்.

௧௧. மந்திரங் கற்போம் வினை தந்திரங் கற்போம்
வானை யளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத் தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரங் கற்போம்.

௧௨. காவியஞ் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்.

௧௩. சாதி இரண் டொழிய வேறில்லை யென்றே
தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்
நீதி நெறியி னின்று பிறர்க் குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர். (பாரத)

—பாரதி.

# கிராமங்களில் வேலை செய்யுங்கள்.

ரா. நாராயணசுவாமி, ஆசிரியர், "பாரதி."

நமது தேசத்தில் சுமார் 7½ இலட்சம் கிராமங்களும் இலட்சம் ஜனத் தொகைக்கு மேலுள்ள 34 பெரிய நகரங்களும் இருக்கின்றன. மொத்த ஜனங்களில் அதாவது 2865 லட்சம் ஜனங்கள் கிராமங்களிலும் 325 லட்சம் ஜனங்கள் பட்டினங்களிலும் அதாவது 10-க்கு 9 பேர் வீதம் கிராமங்களில் வசிக்கிறார்கள். முற்காலத்தில் கிராமங்களின் நிலை கல்வியிலும் பொருளாதாரத்திலும் சுகாதாரத்திலும் மற்றும் பல விஷயங்களிலும் உயர்ந்து நன்றாயிருந்ததென்று சரித்திரங்களாலும் அறிக்கைகளாலும் அறிகிறோம். இப்பொழுது கிராமங்களின் கஷ்ட நஷ்டங்களைச் சொல்லிமுடியாது. இவைகளைப்பற்றி விவரிப்பதென்றால் கல்லுங் கரையும். பாரத மாதா வாடிவதங்கி இப்பொழுது கிராமத்தில் வசிக்கிறாள். கிராமத் தொண்டே தற்போது தேவி பாரதிக்குச் செய்யும் சேவை என்று சொல்லவேண்டியிருக்கிறது.

உலகில் ஒரு மனிதன் ஜெனித்துவிட்டால் ஜீவனுள்ளவரையில் அவனுக்கு உணவும் உடையும் உறைவிடமும் கிடைக்க வேண்டும். கருப்பையிலிருக்கும் சிசுவுக்கும் கல்லினுள்ளிருக்கும் தேரைக்கும் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் மரஞ் செடி கொடிகளுக்கும் உணவு உண்டாக்கி உதவும் ஈசன், பிராணிவர்க்கத்தில் உயர்ந்த அம்சமான—பகுத்தறிவுள்ள மனிடர்களுக்கும் ஆகாரம் ஏற்படுத்தி நியமித்திருப்பாரல்லவா? உலகத்தில் நடக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் முக்கிய முதற்காரணம் உணவுதான். ஒவ்வொருவரும் தன் தன் முயற்சியால் தனது தனது ஆகாரத்தைத் தேடிக்கொள்ளுமாறு கடவுள் உலகத்தை அவ்வாறு சிருஷ்டித்திருக்கிறார்.



பொது நியதி இவ்வாறிருக்க, இப்பொழுது இந்தியாவில் சென்று பார்ப்போம். இந்தியாவிலுள்ள 32 கோடி ஜனங்களில் சுமார் 10 கோடிப்பேர்கள் ஒரு வேளை உணவு உண்டு அடுத்த வேளை ஆகாரத்திற்காக என்ன செய்வதென்று தெரியாது திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். "புருஷர்களைவிட, ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்குமே போதிய ஆடைகள் இருப்பதில்லை. அதிகத் துணியோடு கூடிய ஸ்திரீகளைக் கிராமங்களில் காண்பதரிது. பகலில் எந்த உடையுடன் இருக்கிறார்களோ அந்த உடையுடனேயே இராக் காலத்தையும் கழிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். குளிர் காலங்களில் பெண்களும் பிள்ளைகளும், பிற் பகல்களிலும் இரவுகளின் முற்பாகங்களிலுமே நித்திரை செய்கிறார்கள். நடு ராத்திரி முதல் விடியற்காலம்வரை வீட்டின் முற்றத்தில் குப்பைகளைச் சேர்த்து அதில் நெருப்பிட்டுக் குளிர்காய்ந்துகொண்டிருக்கிறார்கள்" என்று வில்லியம் க்ரூக் எழுதுகிறார். இன்னும், "சுமார் 300 பேர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தினருடைய சராசரி தின வரும்படியைக் கணக்கெடுத்துப் பார்த்தேன். ஆளுக்குத் தினமொன்றுக்குக் காலணாக்கூடக் கிடைக்கவில்லை. அவர்கள் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்? என்று நான் கூறமாட்டேன். உயிரை வைத்துக் கொண்டிருக்கிறார்களென்றே சொல்வேன். நான் பல குடிசைகளைச் சென்று பார்த்தேன். நான் பலரைப் புகைப் படம் பிடித்திருக்கிறேன். அதிலுள்ளவர்களைப் பார்த்தாலே போதும். ஆயினும் இவர்களிடையே அங்கீகரிக்கப்பட்ட பஞ்ச நிலைமை ஏற்படவில்லையென்றே சொல்லப்படுகிறது" என்று ரெவரெண்ட் நோல்ஸ் கூறுகிறார்.

பிரிட்டிஷார் வருவதற்கு முன்பு ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்று வீதம் நாடெங்கும் கணக்கற்ற பள்ளிக்கூடங்கள் இருந்தன. இவைகளைத் தவிர்த்துச் சிறிய குருகுலங்களும் பெரிய குருகுலங்களும் இருந்தன. இவைகளின் மூலம் தேசியக் கல்வி தேசமெங்கும் நன்றாய்ப் பரவியிருந்தது. இங்கு இப்பொழுது 100-க்கு 95 பேருக்கோ படிப்புக் கிடையாது. சக்கிரவர்த்தினி விக்டோரியா அவர்களின் பேரன் ஆல்பெர்ட் விக்டர் என்னும் இளங்கோ அவர்

கள் இந்தியாவுக்கு விஜயம் செய்த பொழுது, “நாங்கள் சந்தோஷமான பிரஜைகளா யிருக்கிறோம்; ஆனால் 19 கோடி மக்கள் படிப்பில்லாது இருக்கிறோம் என்றும் பாட்டியாரிடம் சொல்லுங்கள்” என்று பெரிய எழுத்துக்களால் ஒரு பெரிய வளைவில் எழுதிக் கட்டிப் புனா நகர் வாசிகள் அவரை வரவேற்றார்களாம். இதைக் கவனியுங்கள், கவனியுங்கள். இந்தியாவில் தினந்தோறும் 21,200 ஜனங்கள் மரணமடைகிறார்கள். ஆனால் இங்கு விஷ பேதியினால் மணி 1-க்கு 886 பேரும் வைசூரியால் நிமிஷம் 1-க்கு 15 பேரும், வயிற்றுக் கடுப்பால் தினந்தோறும் 638 பேரும் ஜுரத்தால் நாள்தோறும் 13,690 பேரும், மலைக் காய்ச்சலால் ஒவ்வொரு நிமிஷமும் 10 பேரும் இறக்கிறார்கள். இந்த பத்து வருஷத்தில் (1915—1924) விஷ பேதி, முறைக் காய்ச்சல் முதலிய தடுக்கக்கூடிய வியாதிகளினால் 625 லக்ஷம் ஜனங்கள் செத்திருக்கிறார்கள். அதாவது நம் நாட்டினரில் 5ல் ஓர் பாகம்—ஆங்கில தேச ஜனத் தொகை முழுவதைக் காட்டிலும் $1\frac{1}{2}$ மடங்கு ஜனங்கள் 10 வருடங்களில் மடிந்தார்கள். நமது தேசத்தில் பிறக்கும் குழந்தைகளில் 3ல் ஒரு பாகம் மாண்டுபோகின்றது. இங்கு இன்னும் சொல்ல முடியாத தாங்க முடியாத எத்தனையோ துன்பங்கள் கிராமத்தார்களை வாட்டிக் கொண்டிருக்கின்றன வென்று சுருக்கமாய்க் கூறிவிடுகிறோம்.

## அங்கும் இங்கும்

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களைக் காட்டிலும் அளவில் 20ல் ஒரு பங்குள்ளதும் 1,42,000 சதுர மைல் விஸ்தீரணத்துடன் சுமார் 300 தீவுகள் கொண்ட ஜப்பான் தேசமானது மிக மிகச் சிறிய தேசமா யிருப்பினும் ஜப்பான் $5\frac{1}{2}$ கோடி ஜனங்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அந்தச் சர்க்கார் ஜப்பானியர்களுக்குத் தரிசு நிலங்களை விநியோகித்துச் செலவில் 40ல் ஒரு பாகத்தைக் கொடுக்கிறது. இன்னும் விவசாயிகளுக்கு 50 ௵ நெடுங்காலக் கடனும் கொடுத்து உதவுகிறதன்றி, கிருஷிகர்களுக்கு எத்தனையோ விதமாகப் பல சகாயங்கள் செய்கின்றது. ஐக்கிய மாகாணங்களில் 100-க்கு 28 பேர்கள் உயர்தர வருமான மிக்க விவசாயிகள். அங்கு விவசாயத்திற்காக ரூ 7,05,80,00,000 பெறுமான உரம் உபயோகிக்கப்



படுகிறது. அமெரிக்க சர்க்கார் ஆறேகால் கோடி டாலரை (சுமார் 19 கோடி ரூபாய்) விவசாய விருத்தியில் செலவிடுகின்றது. விவசாயப் பெருக்காலும் விவசாயச் சிறப்பாலும் உலகில் அமெரிக்கா இன்று உன்னதமாகப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது.

இந்தியாவின் ஜனத்தொகை 32 கோடி. இதில் விவசாயிகள் 28 கோடி. இப்பொழுது இங்கு பயிராகும் நிலம் $22\frac{1}{2}$ கோடி ஏக்கர். இன்னும் பயிர் செய்யக்கூடியது 15 கோடி ஏக்கர் நிலம். நம் நாட்டிற்கு வேண்டிய உரம் 43 கோடி டன். இப்பொழுது உபயோகிப்பது $1\frac{3}{4}$ கோடி டன். இந்திய விவசாயிகளுக்கு ஏராளமாகக் கடனிருக்கிறது. மொத்த வரி வசூல் 90 கோடி. மாகாண சர்க்கார் வரும்படியில் 100-க்கு 1 வீதமும் மத்திய சர்க்கார் அதைக் காட்டிலும் குறைவாகவும் விவசாயத்தில் செலவு செய்கிறார்கள். பயிரிடப்பட்ட ஏக்கர் 1-க்குச் சராசரி 9 பைசா வீதம் செலவு செய்யப்படுகிறது. ஜனத் தொகையைக் கவனித்தால், தலை 1-க்கு 8 பைசா வீதம் செலவு செய்யப்படுகிறது. சுருங்கச்சொன்னால் இன்று உலகில் இந்திய விவசாயிகளே மகா கேவலமா யிருக்கிறார்கள்.

## அவர்களுக்கு வேலை.

நகரத்தார்களும் படித்தவர்களும் தொண்டர்களும் கிராமங்களுக்குச் சென்று, கிராம ஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பல வழிகளில் பாடுபட வேண்டும். முதலாவதாக அவர்களின் செல்வ நிலையைச் சீர்படுத்த மார்க்கங்களைக் கண்டுபிடித்து உழைக்க வேண்டும். புதிய முறை சாஸ்திரீய விவசாயம் செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும். தரகர்களாலும் மத்திய மனிதர்களாலும் விலை குறைந்து போகாதவாறு விளைந்த விளைவை ஐக்கிய சங்கங்களின் மூலமாகவேனும் வேறு வழியிலேனும் நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்க வேண்டும். கடன் தொல்லைகளிலிருந்து அவர்கள் விடுபடுவதற்கு ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். விதைகள் உழவு கருவிகள், மாடுகள் முதலியவற்றைக் கொடுத்து உதவுவதற்கு ஐக்கிய சங்கங்களும் விவசாய—விவசாயிகள் சங்கங்களும் திறக்க வேண்டும். நிலங்களைத் திருத்துவதற்கும் அபிவிருத்தி

செய்வதற்கும் கிணறுகள் வெட்டுவதற்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் சொற்ப வட்டிக்கு இச் சங்கங்களும் சர்க்காரும் நெடுங் காலக் கடனாகக் கொடுத்துதவி, பணத்தை விவசாயிகளிடமிருந்து தவணை தவணையாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இன்னும் விவசாயிகளின் பாங்குகள் ஏற்படுத்தி அவர்களின் அவசரங்களுக்குச் சொற்ப வட்டிக்குக் கடன் கொடுக்க முயலவேண்டும். கல்யாணம், மரணம், திருவிழா முதலியவைகளிலும் வழக்கம் என்ற பெயரால் சில வேண்டாக் காரியங்களிலும் அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்வதை நிறுத்தும்படி செய்யப் பிரச்சாரம் செய்யல் வேண்டும்.

## கல்வி

பண்டைக் காலத்தைப்பற்றி பன்னிப் பன்னிப் பல கதைகளைப் பேசுவதால் இப்பொழுது பயனில்லை. படிக்காதிருக்கும் வயது வந்தவர்களுக்கெல்லாம் இராப் பள்ளிக்கூடங்கள் திறக்க வேண்டும். கிராமங்கள்தோறும் சென்று கல்வியின் அவசியத்தைப்பற்றி எடுத்துக்காட்டி வேண்டிய யிடங்களிலெல்லாம் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டும். கிராமத்தாரின் உதவிகளின் மூலம் புஸ்தகாலயங்களும் வாசகசாலைகளும் கல்விச் சங்கங்களும் ஸ்தாபிக்க வேண்டும். ஒளிப் படங்களின் மூலம் சுகாதாரம், விவசாயம், கைத்தொழில், புஸ்தகசாலை, மது மறுப்பு முதலியவைகளைப்பற்றி வியாக்கியானங்களுடன் போதிக்க வேண்டும். படித்த பெண்மணிகள் வீடு வீடாய்ச் சென்று மாதர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டும். குழந்தை வளர்ப்பு, குடும்பச் சிக்கனம், ஆரோக்கிய சாஸ்திரம் முதலியவைகளைப்பற்றியும் கிராமப் பெண்களுக்குப் போதிக்க வேண்டும். கல்வியில்லாதிருக்கும்வரையில் கிராமத்தார்களுக்கு எதைப்பற்றியும் போதிப்பது கஷ்டம்; அவர்களை எதிலும் திருப்புவதும் கஷ்டம். அவர்களுக்குப் போதனை அவசியம்.

## மதுபானங்கள்

மதுபானங்கள், லாகிரி வஸ்துக்கள் முதலியவைகளை அறவே கிராமங்களில் ஒழிக்கும்படி தீவிரமான பிரச்சாரம் செய்ய வேண்-



டும். இன்னும் சில கிராமங்களில் இத் தீய பழக்கம் முற்றிலும் கிடையாது. சில வறுமையான குடும்பங்களுக்குப் பெரும் பசியையும் பஞ்சத்தையும் கொண்டு வருவது மதுபானங்களே. ஒரு குடிகார மனிதனால் ஒரு பெரிய குடும்பமாயிருப்பினும் கெடுகிறது. இதை முற்றிலும் நமது நாட்டைவிட்டுத் துறத்த வேண்டும்.

## கைத்தொழில்கள்

வேலையற்றிருக்கும் ஜனங்களுக்குப் பல குடிசைத் தொழில்களைக் கற்பிக்க வேண்டும். விவசாய வேலைகளைத் தவிர்த்து மற்ற வேலைகள் கிடையாது திண்டாடிக்கொண்டிருக்கும் இந்திய மக்களுக்கு இராட்டினத்தால் நூல் நூற்பது எவ்வளவோ இலாபகரமாயிருக்கிறது! நூல் நூற்கும் இயக்கத்தைக் காந்தி அடிகள் நம் நாட்டில் அவரது தொண்டர்கள் மூலம் பரப்பி வருவதை அறியாதார் யார்? இந்த வேலையால் நாடு எவ்வளவோ மேன்மையடையப் போகிறது! 1882-ம் வருடத்திற்கு முன்பு ஜப்பானில் ஒரே ஒரு குடும்பத்தார்களே பட்டுப்பூச்சி வளர்த்தார்கள். அக் குடும்பத் தலைவரான கென்ஷிச்சி யூர்சி என்பவர் அவருடைய ஜில்லா முற்றிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, ஜில்லா ஜனங்களெல்லாவருக்கும் பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலைப் போதித்தார். அந்த ஜில்லாவில் பட்டுப்பூச்சி வளர்க்காத வீடே யில்லை. ருசியா-ஜப்பான் யுத்தத்திற்குப் பிறகு ஜப்பானியர்கள் அதிகமாக இத் தொழிலை மேற்கொண்டு இன்று இதில் கீர்த்தி பெற்று விளங்கி அநேக கோடி ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போன்றே இந்திய மக்கள் இந்த இராட்டினத் தொழிலில் பிரவேசித்தால், இந்தியாவுக்கு 66 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். தேவையைக் கவனித்து நாட்டிற்கு வேண்டும் நானாவிதக் கைத்தொழில்களை ஏற்படுத்த வேண்டும். கைத்தொழில்களின் மூலமாகவே நாடுகளனைத்தும் செல்வமாயிருக்கிறது. சகோதரர்கள் இதில் பிரத்தியேகக் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்ற கைத்தொழில்கள் என்ன என்ன? என்று கண்டறிந்து அவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

## சுகாதாரம்

இப்பொழுது கிராமங்களில் சுகாதாரம் கவனிக்கப்படாததற்குக் காரணம் வறுமையும் அறியாமையுமே. கிராமத்தார்களுக்குக் காற்று, வீட்டு வசதி முதலியவைகளிருந்தும் சுத்தம் நன்கு கவனிக்கப்படவில்லை. குடி நீரின் சுத்தத்தைப்பற்றிக்கூட அவர்கள் கவனம் செலுத்துவதே கிடையாது. செல்வக் குறைவும், கல்விக் குறைவும், கவனக் குறைவும், இன்னும் அநேக குறைவுகளும் சேர்ந்து அவர்களை அமுக்குவதால் அவர்களுக்குச் சுகாதாரம் நன்கு ஏற்படவில்லை. கிராமங்களிலும் பட்டிகளிலும் வீதிகளிலும் சுற்றுப் பக்கங்களிலும் மிக மிக அசுத்தமாயிருக்கின்றன. மழைக் காலங்களில் அங்கிருக்கும் அசுத்தங்களைப்பற்றிச் சொல்லி முடியாது. காலரா, பிளேக், வைசூரி முதலிய தொத்து வியாதிகள் கிராமங்களையே வாசஸ்தானமாகக் கொண்டிருக்கின்றன. கிராம ஜனங்களுக்குச் சுத்தத்தைப்பற்றிப் போதிப்பதைக் காட்டிலும் நேரில் செய்து காட்டியே மனதில் பதியும்படி செய்ய வேண்டும். வீதிகளையும், கிணறுகளையும், முற்றங்களையும் சுத்தம் செய்து அவர்களுக்குக் காட்டவேண்டும். மாட்டுத் தொழுவங்கள், ஆட்டுத் தொழுவங்கள், கோழிக் கூடுகள், சாக்கடை முதலியவைகளைச் சரியாய் வைத்திருப்பதைப்பற்றி அவர்களுக்குச் செய்து காட்ட வேண்டும். உடம்புகளைப் பரிசுத்தமாயும் பாதுகாப்பாயும் வைத்திருப்பதின் மேன்மைகளை எடுத்துக் காட்டித் தினந்தோறும் குளிக்கும்படி செய்ய வேண்டும். சிகிச்சா முறைகளைக் காட்டிலும் தடுக்கும் முறைகளை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

## பஞ்சாயத்துக்கள்

முந் நாளில் பஞ்சாயத்துக்கள் இல்லாத கிராமங்களேயில்லை. மறுபடியும் பஞ்சாயத்துக்கள் இல்லாத கிராமங்களில் அவைகளைப் புதுப்பிக்க வேண்டும். கிராமங்களிலுண்டாகும் வழக்குகளையும் வம்புகளையும் பஞ்சாயத்தார்களே விசாரித்து நியாயங்கள் வழங்க வேண்டும். ஒவ்வொரு கிராம முன்னேற்றத்தைப்பற்றியும் அந்தந்த பஞ்சாயங்களே கவனிக்க வேண்டும். கிராமப் பஞ்சாயங்கள் பலமடைந்து விருத்தியாகிவிட்டால், கிராம சுயராஜ்யம் கிடைத்துவிட்டதாகவே நாம் நினைக்க வேண்டும்.



## வேண்டுகோள்

பட்டினவாசிகளே, படிப்பாளிகளே, சீர்திருத்தக்காரர்களே, தொண்டர்களே, இந்தியாவின் உயிர் கிராமங்களிலிருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். கிராமங்களெல்லாம் இப்பொழுது குற்றுயிராய்க் கிடக்கின்றன. ஓடிவாருங்கள்! பாரதத் தாய் இப்பொழுது கிராமங்களில்தான் வீற்றிருக்கிறாள். கிராம ஜனங்கள்—நமது சகோதரர்கள் அபிவிருத்தி யடைந்தாலன்றி நமது தேசம் அபிவிருத்தி யடையப்போவதில்லை. கிராம ஜனங்களுடைய அன்பைக் கவர்ந்தாலல்லாது கிராம சேவை செய்ய இலகுவாயிராது. எல்லாவிதத் தலைவர்களும் கிராமப் புனருத் தாரணத்தைப்பற்றிப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். சர்க்காரும் இதைப்பற்றியே புகல்கிறது. "கிராம வேலை, கிராம வேலை" என்ற தொனியே நாடெங்கும் கேட்கிறது.

இப்பொழுது தேசீய இயக்கத்தால் இந்தியக் கிராமங்கள் விழித்துக்கொண் டிருக்கின்றன. அங்கு உழைப்பதற்கு ஆட்கள் தேவை. கலாசாலையைவிட்டு வெளிவரும் மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று வேலை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம். மாஜி உத்தியோகஸ்தர்களும் வேலை செய்து அலுத்து விலகி நிம்மதியாயிருக்கும் படிப்பாளிகளும் கிராம சேவை செய்ய வேண்டுகிறோம். தேசீயத் தொண்டர்கள் ஒவ்வொரு கிராமத்திற்குக் குறைந்தது இருவரேனும் இருந்துகொண்டு பலவகைக் கிராமத் தொண்டாற்றிக் கிராம நிலையை உயர்த்தக் கேட்டுக்கொள்கிறோம். யுவர்களே! முன்வாருங்கள். நமது நாட்டில் ஒரு மனிதன் கல்வியில்லாமல், தொழில் இல்லாமல் தாழ்ந்த நிலையிலிருக்கும்வரையில் நமது தேசத்தை அபிவிருத்தி அடைந்தது என்று நாம் சொல்ல மாட்டோம். நமக்காக உழைத்து உழைத்து விளை பொருள்களை உற்பத்தி செய்யும் சோதரர்கள் துன்பங்களும் துயரங்களும் பட்டுக்கொண்டிருக்க, நாம் கவனியாமலிருப்பது நியாயந்தானா? அழகுதானா? தொண்டர்களே! கிராம ஜனங்களின் அறியாமையை வறுமையை கஷ்டங்களை நஷ்டங்களை பரிதாபமான நிலையை எண்ணி எண்ணிப் பார்த்து ஏகமனதுடன் அவர்களுக்கு உண்மையாக உழைக்க உடனே ஓடிவாருங்கள்.

# தமிழ்நடைப் பயிற்சி

திரு. குமரய்யா அவர்கள், B. A., B. L.

சொல்ல வேண்டிய விஷயத்தைத் தெளிவாகவும் பிழையில்லாமலும் தெரிவித்துக் கொள்வார், மொழியில் நல்ல நடையுடையவர்கள். ஆனால், விஷயத்திற்கும் அவ் விஷயத்தைப் பற்றிச் சொல்லுகிற நடைக்கும் மிகவும் நெருங்கிய சம்பந்தம் இருக்கின்றது. ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல வருபவன், தான் சொல்ல நினைப்பது இன்னது தான். என்பதைத் தெளிவாக அறிந்திருப்பானால், அதைத் தெரிவிக்கின்ற சொற்களும் தெளிவாக அமையும். அப்படியில்லாமல் அவனுக்கே அது தெளிவில்லாமற் போனால் அவனது சொல் நடையும் தெளிவில்லாமல் குழம்பும். சிலர், தம் மனதிற்குத் தெரிந்திருக்கிறதென்றும் ஆனால் அதைத் தெளிவாக மாத்திரம் சொல்ல முடியவில்லை என்றும் பேசக் கேட்டிருக்கின்றோம். இது நம்பத் தகுந்தது அன்று. அவர் மனதிற்கே அவ்விஷயம் அரை குறையாய்த் தெரிந்திருக்கிறது என்பதுதான் இதன் இரகசியம். ஆதலின் விஷயத்தை எவ்வளவுக்கு எவ்வளவு நுட்பமும் தெளிவுமாக அவர் அறிந்திருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவர் நடையும் நுட்பமும் தெளிவுமாக அமையும். விஷயங்களின் புதிய புதிய பொருள்களை அறிந்திருப்பாரானால் அவர் நடையும் புதியதாயிருக்கும். ஆர்வத்தோடு தாம் கண்டதை மற்றவர்களுக்கு தெரியப் படுத்த வருவாரானால் அவர் நடையிலும் ஆர்வம் இருக்கும். தாம் அறிந்த விஷயங்களின் சுவைகளை அநுபவித்திருப்பார்களானால் அவர் சொல் நடையும் சுவை உடையதாயிருக்கும். ஆதலால், தமிழில் ஆகட்டும் மற்ற எந்த பாஷையிலாசட்டும் சொல் நடை பயிற்சி என்ற பயிற்சி ஒன்றும் உண்மையில் இல்லை என்றே சொல்லலாம். ஒவ்வொருவனுடைய மொழிநடையும் அவனையே பிரதிபிம்பிக்கின்றது. எனவே, தன்னை பயிற்சி செய்து கொண்டால் தன் நடையும் தானே பயிற்சி பெற்றதாகின்றது. கல்வியாலும் கேள்வியாலும் சிந்தனையினாலும், தூய்மையாலும், சுவைகளைத் தெரிந்துகொள்ளக் கூடிய நுண்ணிய உணர்வினாலும் ஒருவன் எவ்வளவிற்கு எவ்வளவு உயர்ந்து விளங்குகின்றானோ அவ்வளவிற்கு அவ்வளவு அவன் நடையும் அழகும் சுவையும் தெளிவும் பயனும் உடையதாய் விளங்கும்.



எனவே, எளியநடை கஷ்டமான நடை என்று சொல் நடையை வேறு படுத்துவதும் இயற்கை ஆகாது. எளிமையும் கஷ்டமும், சொல்கின்ற விஷயத்தின் தன்மையையும் கேட்கின்றவர்களுடைய தன்மையையும் பொருந்தினவே அல்லாமல் உண்மையை நோக்கினால் நடையின் தன்மை அல்ல. நடையின் கஷ்டம்போல் மேல் பார்வைக்குத் தோன்றுகிற கட்டுரைகளை ஆழ்ந்து நோக்கி ஆராய்வோமாயின் பெரும்பாலும் அது விஷயத்தின் நுட்பமே தவிர நடையின் கஷ்டம் அன்று என்பது புலப்படும். ஆனாலும் மற்ற விஷயத்தை வேண்டுமென்றே வழக்கற்ற சொற்களால் வீணுக்கு எழுதுவது பாராட்டத் தகுந்ததன்று. "பால் வைத்திருந்த பாத்திரத்தை நக்கவந்த பூனையை நான் அடித்தேன்" என்பதற்குப் பதிலாக, பயமதுயெய்கல னக்குவான் புக்கென் முன்றோன்று பூசையைப் புடைத்தேனியான்" என்பதால் என்ன பயன். சிற்சில சமயம் ஓசை நயமும் சொற்செறிவுங்கருதி இரண்டொரு அரும் பதங்களை உபயோகிக்க நேரினும் நேரலாம். அப்பொழுது பொருள் தெரிவது கஷ்டமானால் அது படிப்பவர் குறையாகுமே அன்றி நடையின் பிழை ஆகாது. தாய் பாஷை ஆயிருந்தாலுந் தான் என்ன? அதினிலும் அரிய விஷயங்களை எழுதுவதென்றால், எழுதுபவர் படிப்பவர் ஆகிய இருத்திறத்தவர்க்கும் சிறிதேனும் பயிற்சி இருக்கவேண்டுமென்பதை அநேகர் மறந்து விடுகின்றனர். "இது பொய்யன்று" என்று எழுதினால் சிலருக்குத் தெரிவதில்லை. பொய்யல்ல என்று பிழையாய் எழுதினால் தான் அவர்களுக்குத் தெரியும். அதற்காகப் பிழையை எழுதி விடுவதா?

தமிழைப் பிழையில்லாமல் எழுதுவதற்கு ஓரளவு இலக்கணப் பயிற்சி அவசியம் வேண்டும். ஒன்றுமே தெரியாமல் மூன்று வரிக்குள்

முப்பது பிழை வைத்து எழுதி விடுவதற்குப் பலர் துணிகிறார்களானாலும் அந்தத் துணிவு அழகன்று. இடையின வல்லின ரகர றகரங்கள் எங்கு வரும் என்பது தெரியாமலும் வல்லின மெய்கள் மிகுந்து புணர்கின்ற விதிகள் இருக்கின்றன வென்பதும் உணராமலும், "சேழ்க்கவில்லை" என்றும் "சுவற்றில்" என்றும் "கார்த்தான்" என்றும் "காக்ஷி" என்றும் சொற்களை இன்னவை யென்றும் தெரியாமலும் இருப்பவர் ஒரு விஷயத்தைப்பற்றிக் கட்டுரை யெழுதப் புகுந்தால் அதனால் யாருக்கு என்ன பயன் விளையக்கூடும். கல்வி யென்பது இவ்வாறு எழுதும் ஒருவனுக்குச் சிறிதளவேனும் இல்லை யென்பதற்கு இந்தப் பிழைகளே சான்றாகும். அப்படிப்பட்டவர் நாவல்களும் கட்டுரைகளும் எழுதிப் பிரசுரஞ்செய்ய நினைக்காமல் தாமே கற்க முயல்வது நலம்.

நல்ல நடை யென்பது பிழையில்லாமலும் தெளிவாகவும் இருப்பதோடு படிப்பவர் கவனத்தைக் கவரக் கூடியதாகவும் அமைய வேண்டும். இப்படிக் கவர்கின்ற சக்தியைத்தான் சுவை என்று கூறுவர். இந்தச் சுவையானது ஓசையின் நயத்தினாலும், வாக்கியங்களின் அமைப்பினாலும், அணி முதலியவைகளின் உதவியினாலும் ஏற்படுகின்றது. எப்படிச் சுவையூட்டுவது என்று ஒருவராலும் வகுத்துச் சொல்ல இயலாது. அது, எழுதுகின்றவர்களது கல்வியின் அகலத்தையும் மனப்பான்மையையும் பொருந்தியதொன்றாகும். மேலான காவியங்களில் ஆழ்ந்த பயிற்சி இருக்குமானால் சுவையுடைய நடை தானாகவே வந்து அமையும். ஆதலின் நடை பயில்வதென்ற தனியான பயிற்சி ஒன்றும் வேண்டியதில்லை என்றே சொல்லலாம். கல்வி வளர வளர சொல் நடையின் தூய்மையும் தெளிவும் இனிமையும் கூடவே வளர்ந்து வரும்.

இதுவே உண்மை. உயர்ந்த பொருள்களை உரைப்பதற்கு உரிய உயர்ந்த நடை வருவதே இயற்கை சிலர் கடினமான நடைதான் உயர்ந்த நடை என்றெண்ணி, அரும் பதங்களையும் வழக்கற்ற விகுதிகளையும் பயின்று புணர்த்தி எழுதி விடுகின்றனர். சிலர் எளிய நடைதான் உயர்ந்ததென்றெண்ணி இலக்கணஞ் சிதைந்த சொற்களையும் தொடர் பிறழ்ந்த வாக்கியங்களையும் எழுதி விடுகின்றனர்.

# ஆல்ப்ரெட் நோபல்.

## ஸ்ரீமான். சி. கு. நாராயணஸ்வாமி முதலியாரவர்கள்.

தற்காலம் கவிச் சக்ரவர்த்தி யென்று புவி யெங்கும் புகழப்படும் டாக்டர் ரவீந்திரநாத் தாகூர் தாமெழுதிய "கீதாஞ்சலி" என்ற காவியத்திற்கு 1913-ம் வருஷம் ஸ்வீடன் தேயத்து அபிமானி நோபல் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட பரிசு நிதியிலிருந்து 8000 பவுன் பரிசு அளிக்கப்பட்டார் என்பது யாவருக்கும் நன்கு தெரியும். அங்ஙனம் தெரிந்திருப்பினும் நோபல் என்பாரின் ஜீவிய சரிதையைப்பற்றி இந் நாள்வரை ஒருவரும் வெளியிடாமைபற்றி நான், எனக்கு கிடைத்த இவரது ஜீவிய சரிதத்தைப் பற்றிச் சில விஷயங்களை வெளிப்படுத்த முன்வந்துளேன்.

ஆல்ப்ரெட் நோபல் என்பவர் 1833-ம் வருஷம் அக்டோபர் மீ 21உ ஸ்வீடன் தேயத்துத் தலை நகரான ஸ்டாக்ஹோமில் பிறந்தவர். இவரது தகப்பனார் இம்மானுவேல் நோபல் அக் காலத்தில் மிக்க செல்வாக்கும் கீர்த்தியும் படைத்திருந்தார். தன் பெயரால் ஓர் கம்பெனியை

---

இவை யிரண்டும் பிழையே. உரைக்கவரும் விடயம் உயர்ந்ததானால் அதற்கு ஏற்ற நடை எவ்வாறு இயற்கையாக அமைகின்றதோ அதுவே பிழையற்றது அழகும் உடையது. ஒரு விஷயத்தை உரைக்க வரும்போது அவனுடைய மனத்தில் அவ்விடத்தைப்பற்றிய கருத்துக்கள் எந்தச் சொற்களால் உருப்பெற்று எப்படி அமைகின்றதோ அப்படியே இயம்புவது இயற்கை அழகு வாய்ந்த நடையாகும் என்பதும், அது எளியதோ கடியதோ என்றெல்லாம் பார்த்துப் பார்த்து மாற்றுவது செயற்கைச் சிதைவடைந்த நடையே ஆகும் என்பதையும் மறத்தலாகாது.

ஸ்தாபித்தார். என்றாலும் அத் துறையில் அவர் மனம் அதிகமாகச் செல்லவில்லை. மிக்க உழைப்பும் சாமர்த்தியமுமுடைய இம்மானுவேல் சிறு வயதில் சிற்ப சாஸ்திரத்தைக் கற்றுப் பின் இருபத்து ஒன்று வயதுகூட நிறையப்பெறாத காலத்தில் க்ஷேத்திர கணிதப் போதகராய் ஓர் கல்லூரியில் நியமிக்கப்பட்டார். இவ் வேலையிலும் பற்றின்றித் தன் மனப் போக்கை அறியாராய்க் கடைசியாக ருஷியா தேசத்துத் தலைநகரான ஸெயிண்ட் பீடர்ஸ்பர்க்கில் கப்பல் செப்பனிடவும் கப்பல் செய்யவும் வேறு மராமத்து வேலை செய்யவும் ஓர் பெரிய தொழிற்சாலையை ஸ்தாபித்தார். அங்கே சுமார் இருபது இருபத்தைந்து வருஷம் தன் தொழிலில் அபிவிருத்தியடைந்து வந்தார். ருஷியாவில் இவர் இருந்த இருபது இருபத்தைந்து வருஷ காலமெல்லாம் ருஷியா தேசத்து அதிகார வர்க்கத்தினர்கள் நோபலுக்குப் பல விதங்களாலும் உதவி புரிந்து வந்தனர்.

கடைசியாக, கிரிமியா யுத்தம் நடந்த பின் ருஷியா கவர்ன்மெண்டார் இம்மானுவேலுக்கு முன்போல் உதவி செய்யாததால், தான் அவ்விடம் இருப்பது அவ்வளவு உசிதமல்லவென்றெண்ணி அத் தொழிற்சாலையைத் தன் இளைய குமாரனான லூயி என்பவரிடம் ஒப்புவித்துவிட்டுத் தன் குடும்பத்துடன் மறுபடி ஸ்டாக்ஹோமுக்குச் சென்று, அங்கு வெடி மருந்து செய்யும் முறைகளைக் கற்றுணர்ந்தார். அக் காலத்தில் ஜனங்கள் உபயோகித்து வந்த வெடி மருந்து மிக்க அபாயகரமானதாயிருந்தது. இம்மானுவேலின் மூத்த குமாரரான ஆல்ப்ரெட் தன் தகப்பனாருடன் வெடி மருந்து முதலியவைகள் செய்யும் முறைகளைக் கற்று வந்தார். இவர் அநேகவிதமான நூதன வெடி மருந்துகளைக் கண்டுபிடித்தார். அவை யாவும் அபாயகரமாகவே இருந்தமையால் ஆல்ப்ரெட் அபாயகரமில்லாத ஓர் வெடி மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று மிக்க ஆவல் கொண்டார். தன் ஆராய்ச்சியினாலும் பரிசோதனையினாலும் ஆல்ப்ரெட் 1867-ம் வருஷம் தனது 34-வது வயதில் "டைனமைட்" எனும் வெடி மருந்தைக் கண்டுபிடித்தார். இதன் பிறகு அபாயமில்லாத வேறு சில வெடி மருந்துகளைக் கண்டுபிடித்து அவைகள் யாவையும் சர்க்கார் மூலமாய்த் தனது உரிமையாக்கிக் கொண்டனர். இவர் கண்டுபிடித்த வெடி மருந்துகள் ஐரோப்



பாவில் பரவவும் சண்டை செய்யும் விதங்களில் அநேகம் மாறுதல்கள் உண்டாயின.

இவர் இங்ஙனம் வெடி மருந்துகளைக் கண்டுபிடித்ததில் பொருள் சேதமும் உயிர்ச் சேதமும் அதிகமாய் உண்டாயின. இவ் வெடி மருந்துகளைப் பரீக்ஷிக்கும் பொழுது, அம் மருந்துகள் வெடித்துக் கட்டடங்களும் பாழாயின. இவரது இளைய சகோதரரான ஆஸ்கர் எமில் என்பவர் இவ் வெடிமருந்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யுங்காலை மருந்து வெடித்து அதனால் உயிர் துறந்தார். பல விதங்களாலும் நோபலுக்கு நஷ்டம் ஏற்பட்டும் அவர் தனது ஊக்கத்தையும் தைரியத்தையும் கைவிடாமல் தனது ஆராய்ச்சிகளை நடத்தி வந்தது மிகவும் பாராட்டத்தக்கது.

தற்காலம் டைனமைட் எவ்வளவு செலவாகிறது என்பது நோபல் கம்பெனியில் வேலை செய்து வரும் வேலையாட்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலே தெரியவரும். நோபல் இறப்பதற்குப் பத்து வருஷம் முதல் அவர் தொழிற்சாலையில் 12,000 ஜனங்கள் வேலை செய்து வந்தார்களென்றும், ஒவ்வொரு வருஷமும் கோடிக் கணக்கில் மதிக்கக் கூடிய டைனமைட் செய்து வந்தார்கள் என்றும் தெரியவருகிறது.

இவரது கைத்தொழில் விருத்தியடையவே அதன் நிமித்தம் இவர் ஐரோப்பா முழுவதும் சஞ்சாரம் செய்து வந்தார். சொற்ப காலம் பாரீஸில் வசித்திருந்து பின்பு ஸான் ராமோ என்ற விடத்தில் வசித்து வந்தார். அங்கே தனக்கு வசதியான ஓர் வீட்டையும் வெடி மருந்து பரிசோதனை செய்வதற்காக ஓர் கூடத்தையும் கட்டினார். இவருக்கு வெடிமருந்து செய்யும் சாஸ்திரத்திலல்லாமல் மற்றவைகளிலும் அதிகத் தேர்ச்சியும் ஆசையும் உண்டு. அவர் தனது ஆராய்ச்சியால் செயற்கை ரப்பர் (Artificial guttapercha) கண்டு பிடித்தார். மோட்டார்கள் அதிகரிக்கும் இக் காலத்தில் அதன் உபயோகம் அதிகமாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. இவர் வெடி மருந்தல்லாமல் பீரங்கிகளையும் செய்து வந்தார். காகஸஸ் பிராந்தியத்தில் பாகு எனுமிடத்தில் மண்ணெண்ணெய் எடுக்கும் தொழிலில் தன் சகோ

தாருடன் நோபல் அதன் அபிவிருத்தி நிமித்தம் உழைத்தும் வந்தார். கடைசியாக அம் மண்ணெண்ணெய் எடுக்கும் வேலையைத் தன் இளைய சகோதரரான லூயி என்பவரிடம் ஒப்புவித்துவிட்டார். வட துருவத்திற்கு ஆகாய மூலமாய்ப் புகைக் கூண்டில் பிரயாணம் செய்த ஆண்ட்ரீ என்பவரின் செலவுக்காக, நோபல் அச் செலவின் அரைப் பங்கு நன்கொடை யளித்து உதவினார். ஆயினும் அப் பிரயாணம் முடிவில் அனர்த்தமாய் முடிந்தது.

நோபல் தன் வாழ் நாள் முழுதும் தன் வியாபார விஷயமாய் ஓய்வில்லா ஊக்கத்துடன் இடாலியிலிருந்து ஸ்வீடனுக்கும், ஸ்வீடனிலிருந்து பிரான்ஸுக்கும் தேசத்திற்கு தேசம் பிரயாணம் செய்து வந்ததும், தன் பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனையிலேயே ஆழ்ந்து ஆலோசித்துத் தன் வாழ் நாளைக் கழித்ததும் இவை எல்லாம் இவருக்கு அத்யந்த சந்தோஷத்தை உண்டுபண்ணினவே யன்றிக் குடும்ப வாழ்வில் இவருக்கு இச்சையை உண்டுபண்ணவில்லை. ஆகவே அவர் மணம் செய்து கொள்ளவில்லை.

இவர் தன் தாயின் மேல் அதிக அன்பும் வாஞ்சையும் காட்டி வந்தார். அம் மாதை அவர் புத்திரர் யாவரும் அன்புடனே நடத்தி வந்தார்கள். எந்த விஷயத்திலும் புத்திரர் யாவரும் தமது தாயின் நற்குணங்களைக் கைப்பற்றி நடக்க முயன்றனர். அம் மாது 1886-ம் வருஷம் தனது 86-வது வயதில் இறந்தனர். அவரது மூத்த குமாரரான ஆல்ப்ரெட் நோபல் ஏழு வருஷத்திற்கப்புறம் தனது 63-வது வயதில் ஸான் ராமோ என்றவிடத்தி லிறந்தார்.

நோபல் மெலிந்த தேகம் படைத்தவர். ஓர் விதமான ஆடம்பரமும் அற்றவர். எப்பொழுதும் தனிமையா யிருப்பதையே விரும்பும் சீலர். இவர் கைத்தொழில் அதிக விருத்தியடைந்து வியாபாரமும் அதிகரிக்கவே, இவரது செல்வமும் அதிகரித்தது. இவர் இறந்த காலத்தில் இவரது செல்வம் 45 கோடி பிரான்க் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இப் பெருஞ் செல்வத்தை எவ்விதத்தில் உபயோகிப்பது என்பதிலேயே, தனது கவனத்தைக் கடைசி காலத்தில் செலுத்தினார். இவருக்குக் குழந்தையே யில்லாததால் இப் பெருஞ் செல்வத்



தைத் தனது பந்துக்களுக்குக் கொடுப்பது அவ்வளவு திருப்திகரமல்லவென்று எண்ணினார். இவரது 60-வது வயதில் இவரிடத்தில் இரண்டு கோடி பவுன் கையிருப்பிருந்தது. அதைத் தான் செலவிடத் தயாரா யிருந்தாலும் உலகத்திற்கும் ஜன சமூகத்திற்கும் உதவும்படி எவ்விதம் அதை உபயோகிப்பது என்ற எண்ணம் இவர் மனதில் குடிகொண்டிருந்தது. தான் கஷ்டப்படாமல் பிறர் சம்பாதித்த பொருளை வேறொருவன் அனுபவிப்பதை நோபல் மறுத்தார். ஒருவன் தான் தன் தகப்பனாருக்குப் பிள்ளை என்றெண்ணியாவது அல்லது தன் மாமனுக்கு மருமகன் என்றாவது எண்ணி அன்னாரின் செல்வத்தை அனுபவிக்கப் பாத்தியம் பாராட்டக் கூடாது என்றும் நோபல் தன் நண்பர்களுக்கும் பந்துக்களுக்கும் அடிக்கடி சொல்லி வந்தார். தானாகச் சம்பாதியாமல் பிறர் சம்பாதித்த பொருளை அனுபவிப்பதில் அங்ஙனம் அனுபவிப்பவன் ஓர் விதமான உத்திரவாதத்தை அறியாமல் சோம்பேறியாய் விடுவானென்று அவர் அபிப்பிராயப்பட்டார். அவர் தனது கடைசி காலத்தில் தனது பந்துக்களைப் பார்த்துச் சொன்னதாவது. "என் செல்வத்தின் மேல் உங்களுக்கு ஆசை வேண்டாம். நான் இறந்த பிறகு அது உங்களுக்குச் சேராது. பிதுரார்ஜித சொத்து எப்பொழுதும் ஒருவனுடைய புத்தியை மழுங்கச் செய்கிறதென்றும் அங்ஙனம் அதிக செல்வம் படைத்தவன் தனது செல்வத்தில் சொற்ப பாகம் மாத்திரம் தனது வார்சுகளுக்கு வைத்துவிட்டு மீந்ததைப் பொது ஜன சௌகரியத்தின் பொருட்டுச் செலவு செய்ய வேண்டுமென்றும் சொல்லிவந்தார்.

தானாகச் சம்பாதியாத ஒருவனுக்குப் பெருத்த செல்வத்தை வைத்துவிட்டுப் போவதினும் மதியீனம் வேறொன்றுமில்லை யென்றும் அங்ஙனம் வைத்துவிட்டுப் போன செல்வம் ஒருவனது புத்தி தீக்ஷண்யத்தையும் இயற்கைக் குணங்களையும் விருத்தி செய்யவிடாமல் தடுக்கின்றது என்றும் பலதடவைகளிலும் தனது நண்பர்களுக்கு வற்புறுத்துவார்.

தான் இறப்பதற்குச் சொற்ப காலத்திற்கு முன்பு இவர் தன் நண்பர் ஒருவரிடம் தன் செல்வத்தை விநியோகம் செய்யும் வகையைப் பற்றிப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"சாதாரணமாய் இவ் வுலகில் எவன் தனது ஊக்கத்தாலும் படிப்பினாலும் தன் வேலையைச் சரிவரச் செய்து வருகிறானோ அவனுக்கு யான் என் செல்வத்தில் கொஞ்சமும் கொடுக்க முடியாது. அப்படி அவன் தன் உதர நிமித்தம் வேலை செய்து பணம் சம்பாதிப்பதினும் சம்பாதியாமலிருப்பது நலம். ஆனால் யான் எப்பேர்ப்பட்டவர்களுக்குப் பொருளுதவி செய்வேனென்றால், யோகிகள் போல் தங்களது யூக சக்தியால் பல நூதன எண்ணங்களை எண்ணுபவர்களுக்கும், அவ்வெண்ணங்களின் உண்மைகளை நிலைநாட்டும் பொருட்டு ஆராய்ச்சி செய்து கஷ்டப் படுவோர்களுக்குமே நான் எனது செல்வத்தைக் கொடுப்பேன்."

இவர் கூறிய உண்மையை விளக்கத் தற்காலம் நமது தேயத்தில் இயற்கை சாஸ்திரத்தின் ஒரு பாகமாகிய தாவர சாஸ்திரத்தில் (Botany) மிக்க தேர்ச்சி பெற்ற ஸர். ஜகதீச சந்திர போஸ் என்பவரைப் போன்றவர்க்கேதான் திரவிய சகாயம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்.

தன் எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தனது திரவியம் முழுவதையும் சேர்த்து ஓர் நிதி ஏற்படுத்தி அம் மூலதனத்தின் மேல் ஏற்படும் வருஷாந்திர வட்டியை ஐந்து பாகமாகப் பங்கிட்டு அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வருஷமும் ஐந்து விதத் துறைகளில் நூதனமான சில உண்மைகளைக் கண்டுபிடித்து ஸ்தாபிக்கும் விற்பன்னர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஓர் உயில் எழுதி வைத்தார். இவ்விதப் பரிசையளிக்க அவர் தனது உயிலில் ஏற்படுத்திய நிபந்தனைகள் பின்வருமாறு:—

"மூலதனத்தின் மேல் ஏற்படும் வருஷாந்திர வட்டி ஐந்து சம பாகமாகப் பிரிக்கப்பட்டுப் பின் குறிக்கப்படும் ஐந்து பேர்களுக்குக் கொடுக்கப்படும்.

1. இயற்கை சாஸ்திரம் (Physical Science) சிரேஷ்டமான நூதன உண்மைகளைக் கண்டுபிடித்தவருக்கு ஒன்று.

2. இரசாயன சாஸ்திரம் (Chemistry).



3. வைத்திய சாஸ்திரம் (Medicine), மானிட சாஸ்திரம் (Physiology) நூதனமான மருந்துகளையும் வியாதிகளின் காரணங்களையும் மானிட உருவ அமைப்பில் நூதன விஷயங்களை அறிந்து, அவைகளை ஸ்தாபிப்பவர்களுக்கு ஒன்று.

4. ஒப்புயர்வற்ற காவியம் எழுதுபவர்க்கு ஒன்றும், கடைசியாக 5-வது இவ் வுலகத்தில் ஒரு தேசத்தாருக்கும் மற்றொரு தேசத்தாருக்கும் சகோதரத்வத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு தேசத்தின் சைனியங்களையும் குறைத்து இவ் வுலகில் சமாதானத்தைச் சங்கங்கள் மூலமாயும் மஹா நாடுகள் மூலமாயும் ஸ்தாபிப்பவர்க்கு ஒன்றும் ஆக ஐந்து பரிசுகள் அளிக்கப்படும்.

இயற்கை சாஸ்திரத்திற்கும் ரசாயன சர்ஸ்திரத்திற்கும் (*Physical Science and Chemistry*) பரிசு (Swedish academy of Science) ஸ்வீடன் தேயத்து சாஸ்திரீய பரீஷத்தாலும் 2-வது வைத்ய சாஸ்திரம் மானிட சாஸ்திரம் இவைகளுக்கு ஸ்டாக்ஹோமிலிருக்கும் (Caroline Iinstitute) கேரோலின் கலாசாலையிலும் காவியத்திற்கு (Swedish Academy) ஸ்டாக்ஹோம் பரீஷத்தாலும் சமாதான நிலை நிறுத்தத்திற்கு நார்வே தேச சட்ட சபையாரால் (The Norwegian Storthing) தெரிந்தெடுக்கப்பட்ட 5 பேர் கூடிய சபையாராலும் பரிசுகள் அளிக்கப்படும்.

இப் பரிசுகளை அளிப்பதில் ஒருவிதமான ஜாதி தேச மத வித்யா சம் பாராட்டாமல் யார் அருகர்களாயிருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பது எனது எண்ணம்."

தனது செல்வம் முழுவதையும் இம்மாதிரி விநியோகம் செய்ததின் காரணம், அவர் தான் தேச சஞ்சாரம் செய்து வந்த காலத்தில் அனுபவத்தில் அவர் கண்ட சில சாக்ஷிகளே என்று சொல்லலாம். தமது வாழ் நாள் முழுதையும் சாஸ்திர ஆராய்ச்சியில் கழித்து நூதன உண்மைகளைக் கண்டுபிடித்த சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் அநேகர் நன்கு மதிக்கப்படாமலும் சொல்ப ஊதியமும் பெற்று வந்தார்கள். தான் கண்டுபிடித்த உண்மைகளைச் சர்க்கார் மூலமாய்ச் சுதந்திரப்படுத்திக்கொண்டு அவைகளின் மூலமாய்க் கைத்தொழில் முதலிய செய்து

மிகுந்த திரவியத்தை இச் சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் சேர்க்கலாம். ஆனால் இவ்விதமான ஆராய்ச்சிகளைச் செய்பவர் பெரும்பாலும் ஏழைகளே. ஆகையால் அவர்கள் தாங்கள் கண்டுபிடித்த உண்மைகளைக் கொண்டு திரவியம் சம்பாதிக்கும் சக்தியற்றவர்களா யிருக்கின்றனர். ஆகவே இம்மாதிரி ஆராய்ச்சிக்கென்றே தங்கள் வாழ்நாளை அர்ப்பணம் செய்து உழைத்து வரும் விற்பன்னர்களுக்குச் சகல வித சுதந்திரமும் கிடைக்கும் பொருட்டு அவர்களுக்குத் திரவிய சகாயம் செய்ய முன் வந்தார். அவ் விற்பன்னர்களுக்கு ஆராய்ச்சியால் ஏற்பட்ட செலவை அவர்களுக்குக் கொடுத்ததுமல்லாமல் அவர்கள் மேலும் மேலும் அத் துறையிலேயே உழைத்து நூதன உண்மைகளைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு மிக்க திரவியம் அளித்து உதவி வந்தார். நூதன உண்மைகளைக் கண்டுபிடித்ததனால் உண்டான லாபங்கள் யாவும் அவ் வுண்மைகளைக் கண்டுபிடித்தோருக்குக் கொஞ்சமும் சேராததைப்பற்றி அவர் மிக்க வருத்தப்படுவார். தான் இயற்கை சாஸ்திரத்திலும் ரசாயன சாஸ்திரத்திலும் தேர்ச்சியடைந் திருந்தாராதலால் அவர் முதன் முதல் இவ்விரண்டு சாஸ்திரங்களுக்கும் பரிசளிக்கவந்தது அதிசயமல்ல.

நாய் கடிக்கு மருந்து கண்டுபிடித்த பாஸ்சர் (Pasteur) என்பவரின் மேல் நோபலுக்கு அளவற்ற அன்பும் அபிமானமும் உண்டு அவர் இயற்கையாகவே மிக்க மெலிந்த தேகமுடையவராதலால் தான், தன் தேக ஸ்திதியை விருத்தி செய்து கொள்ளும் பொருட்டுத்தானே வைத்யம் முதலியவற்றைக் கற்று வந்தமையால் வைத்திய சாஸ்திரத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று எண்ணி மூன்றாவதாக வைத்ய சாஸ்திரத்திற்காகப் பரிசு வைத்தார். நான்காவதான காவிய விஷயமாய் நோபலின் சிநேகிதரான மிஸ்டர் ஹென்றி என்பவர் சொல்லுவதாவது: “நோபல் தனது கடைசி காலத்தில் காவியங்களை வாசித்து வந்தார். அக் காவியங்களுள் அவர் முக்கியமாய் ஆங்கில கவியான லார்ட் பைரன் (Lord Byron) என்பவரின் காவியத்தை வாசித்தானந்தித்தார். இதுவே அவர் காவியத்திற்குப் பரிசளித்த காரணம்.”

சமாதானத்தைப்பற்றி அவர் ஏற்படுத்திய பரிசைப்பற்றி உலகம் முழுதும் அறியும். அவர் இதைப்பற்றி சொன்னதாவது: ‘‘யாரொரு



வர் ஐரோப்பாவில் எங்கும் சமாதானத்தை நிலை நிறுத்திச் சகோதர பாவத்தை ஸ்தாபிக்கிறார்களோ அவர்களுக்கு என்னுடைய செல்வத்தைக்கொண்டு ஒரு நிதி ஏற்படுத்தி அதன் வட்டியைப் பரிசாக அளிக்கப் பிரியப்படுகிறேன். இச் சமாதானப் பரிசைப் பெற்ற ஒருவரை நாமறிவோம். அமெரிக்கா ஐக்கிய ராஜ்யங்களின் தலைவரா யிருந்த காலஞ் சென்ற கனம் தியடோர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) என்பவர் 1906-ம் வருஷம் ருஷியா—ஜப்பான் யுத்தத்திற்கு முன் அப் பரிசைப் பெற்றார். அதுகாலம்வரை உலகத்தில் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கு ரூஸ்வெல்ட் காரணமாயிருந்தாரென்று அவருக்கு அப் பரிசு அளிக்கப்பட்டது.

காவியத்திற்காகப் பரிசு பெற்ற மூவரை நாமறிவோம். நமது தேசத்தில் காவியத்திற்காக டாக்டர் நவீந்திரநாத் தாகூரும் பிரான்சில் ரோமெய்ன் ரோலண்டு என்பவரும் நார்வே தேசத்தில் க்னட் ஹாம்ஸன் என்பவரும், மற்றும் சிலரும் இப் பரிசு பெற்றிருக்கிறார்கள்.

சொற்பகாலத்திற்கு முன்பு ஆஸ்திரேலியாவிலுள்ள ஸிட்னி சர்வகலாசாலையில் ஓர் மாணவர் இயற்கை சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்து சில நூதன உண்மைகளைக் கண்டுபிடித்ததற்காக ஓர் பரிசையும் அடைந்தாரென் றறிகிறோம்.

ஒவ்வொரு வருஷமும் டிசம்பர்மீ 10உ அந்தந்த விஷயத்திற்கென்று தனிமையாய் நியமித்திருக்கும் சங்கத்தார் ஓர் கூட்டம் கூடி ஒவ்வொரு சங்கத்தாரும் பரிசு பெற்றவர்களுக்கு அப் பரிசுத் தொகைக்காக ஓர் செக்கும் ஓர் நற்சாட்சிப் பத்திரமும் நோபல் உருவப் படம் ஒரு பக்கத்திலும் மற்றொன்றில் யாருக்கு எதற்காக அளிக்கப்பட்டது என்பதை எழுதினதுமான ஓர் தங்கப்பதக்கமும் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அளிக்கின்றனர். அங்ஙனம் பரிசு பெற்றவர்கள் வேறு எவ்விதத்திலாவது தடுக்கப்பட்டாலன்றி பரிசு பெற்ற 6 மாதத்திற்குள் ஸ்டாக்ஹோமுக்குச் சென்று தாங்கள் எவ் விஷயத்திற்காகப் பரிசு பெற்றனரோ அதைப் பற்றி அச் சங்கத்தார் முன் பிரசங்கம் செய்ய வேண்டுமாம்.

இவரைப் போன்றவர்கள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ளார் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இங்கிலாந்தில் ஸிஸில்

ரோட்ஸ் என்பவரும், அமெரிக்காவில் ஆண்ட்ரூ கார்னகி, ராக்பெல்லர், பியர் பாய்ண்ட் மார்கன் என்பவர்களும் அநேக நன்கொடை யளித்திருக்கிறார்கள்.

நமது நாட்டிலும் தாரகநாத் பாலிட், ப்ரேம் சந்த ராய் சந்த், டாட்டாக்கள், ராஷ் பிஹாரி கோஷ், ராஜா சர். அண்ணாமலை செட்டியார், ராஜா ஸர். ராமநாத செட்டியார் போன்ற தனவான்களும் வித்தியா விஷயமாய் செய்துள்ள நன்கொடைகள் யாவருக்கும் தெரிந்த விஷயம்.

ஆல்ப்ரெட் நோபல் மெலிந்த தேகமுடையவரென்று முன்னமேயே சொன்னோம் தன் கடைசி கால முழுதும் இவர் ஸான் ராமோ என்ற விடத்தில் மனச் சமாதானத்துடன் வசித்து வந்தார். கடைசியாக இவர் 1896-ம் வரு டிசம்பர்மீ 10உ யன்று இவ் வுலகைவிட்டு விண்ணுலகுக் கேகினார்.

இவரது ஜீவிய சரிதம் சில லக்ஷியங்களை நமக்குப் புகட்டுகின்றது.

1. எவ்விதமான இடுக்கண் நேர்ந்திடினும் நாம் ஓய்வில்லா ஊக்கத்துடன் மேலும் மேலும் கஷ்டப்படுவோமாயின் நமது காரியம் நிறைவேறும்.

2. அதிகச் செல்வம் படைத்தோர் அச் செல்வத்தைப் பொதுஜன சௌகரியத்தின் பொருட்டு விநியோகம் செய்து அறிவைப் பரவச் செய்ய வேண்டும்.

3. அறிவும் படிப்பும் யாரிடத்திலிருந்தாலும் சரி, அவர்களை நாம் மரியாதையாயும் சமமாயும் வித்தியாசமில்லாமலும் நடத்த வேண்டும்.

இதை வாசிக்கும் அன்பர் நோபலைப்போல் தங்கள் ஊக்கத்தாலும் செல்வத்தாலும் பாரத மாதாவுக்கு உதவி புரிவார்களென்று மனப்பூர்வமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.



# அமெரிக்கா எவ்வாறு சுதந்திரம் பெற்றது?

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

இந்நாளில் எந் நாட்டிலும் பொன்னுடையும், சகல கலைகளிலும் சாலப் பயின்றும், தேசங்களுக்கோர் திலகம் போன்றும், பார்ப்போர் தன்னைப் போற்றவும், பின் பற்றவும் சுதந்தரக் கொடியுடன் சீர் பெற்று விளங்குந் தேசமே அமெரிக்கா தேசமாம். ஆனால் 15-ம் நூற்றூண்டில் சகல சம்பத்தும் செவ்வனே வாய்க்கப் பெற்று ஊரெல்லாம் பொன் மயமாய்ப் பிரகாசித்துக் கிளிகள் கீதம் பாடவும், குயிலினங்கள் ஆனந்தக் கூத்தாடவும் எங்கும் ஆனந்தம் பொங்கி, ஏராளமான மழை பெய்து சகல விளைவுப் பொருட்களும் சாங்கோபசாங்கமாய் விளைந்து ஐரோப்பிய தேசத்து முக்கிய துறைமுகப் பட்டணங்களுக்கு வாசனைத் திரவியங்கள், தேயிலை முதலியவைகளைக் குவியல் குவியலாய்க் கொட்டி யனுப்ப அதனால் ஐரோப்பியர் பலர் தேனீக்கள் போல் திரண்டு திசை நோக்கி ஓடி வரவும், சிலர் சீக்கிரஞ் சேர சுருக்கமான மார்க்கங்களைக் கண்டு பிடிக்கவும் காரணமா யிருந்த தேசம் நம் இந்தியா தேசமாம். இந்தியாவானது அக் காலத்தில் அமரர் தேசமோவென அனைவரும் அதிசயிக்கத் தக்கதா யிருந்தபோது அமெரிக்கா தேசம் இவ் வவனியின்கண் தோன்றவே யில்லை. இந்தியாவை நாடி யோடிப் பலவிதப் பொருள்களைத் தேடித் திரட்டித் தங்கள் சுய நாடு சீக்கிரந் திரும்ப ஓர் சுருக்க வழி இந்தியாவுக்குக் கண்டுபிடிக்க முயன்றவர்களில் கிறிஸ்டபர் கொலம்பஸ் என்பவரும் ஒருவர். உலகம் உருண்டையா

யிருப்பதால் மேற்கு திசை நோக்கிச் சென்றாலும் இந்தியாவைப் போயடையலாம் என்றெண்ணி ஸ்பேய்ன் தேசத்திலிருந்து புறப்பட்டுப் போன மார்க்கத்தில் 1492-ம் வருடம் அக்டோபர்மீ 12-ம் தேதி அமெரிக்காவைக் கண்டு இந்தியா தேசம் என்று தவறாக நம்பி அங்கிருந்த ஜனங்களை "இந்தியர்கள்" என்றழைத்தார். பிறகு அமெரிகோ என்பவரால் அத் தேசத்தை அமெரிக்காவென்று பெயரிடப்பட்டது. பிற் காலத்தில், அத் தேசத்து ஜனங்கள் "சிவப்பு இந்தியர்" என்று அழைக்கப்பட்டனர்.

## குடியேற்றம்

இங்கிலாந்து தேசத்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் புதிய "புரோடெஸ்டண்ட்" மதத்தில் சேர்ந்த எல்லாருக்கும் இராஜாங்க மூலமாய் 15,16-ம் நூற்றாண்டுகளில் சகிக்க முடியாத இன்னல்கள் விளைய, இவர்கள் தங்கள் சுய ஊர்களில் உயிருடனிருப்பதைப் பார்க்கிலும் புதிதாய்க் கண்டு பிடித்த தேசத்திலாவது போய் இம்சைக்குத் தப்பி தங்கள் இஷ்டம் போல் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிறப்போமென்று துணிந்து கப்பல்களில் ஏறிச் சென்றனர். இங்கிலாந்தில் 1555-ம் வருஷம் (இராணி மேரியின் காலத்தில்) லாட்டிமர், ரிட்லி என்ற இரண்டு முக்கிய புது மதப் பெரியார்கள் இராணியின் உத்திரவால் உயிருடன் நெருப்புக் கிரையானார்கள். ஏறக்குறைய 300 ஆண், பெண் குழந்தைகளும் இவ்விதமாக இம்சை செய்யப்பட்டனர். பின்பு ஜேம்ஸ் 1 அரசன் காலத்திலும் அநேக "ப்யூரிட்டன்ஸ்" என்ற மதக் கூட்டத்தார் சுயேச்சையாய் வாழ வழியில்லாது வெகு கஷ்டப்பட்டனர். தங்கள் மத வழிபாட்டினால் உண்டான இடையூறுகளைத் தாங்க முடியாது இங்கிலாந்திலுள்ள பிலிமத் என்ற முகத்துவாரத்திலிருந்து மே பிலவர் (May Flower) என்ற பெரிய படகுக் கப்பலில் 1620-ம் வருஷம் செப்டம்பர்மீ 6-ம்உ ஏறி அநேகர் அமெரிக்காவுக்குப் புறப்பட்டு வெகு காலத்திற்குப் பின் கரட் என்ற முனைக்கருகில் வந்து சேர்ந்தனர். இப்படியே ஹாலண்ட், ஜெர்மனி, பிரான்சு தேசங்களிலிருந்தும் வந்து அமெரிக்காவின் கீழ்க்கடலோரமாகக் குடியேறி சுயேச்சையுடன் காட்டை நாடாக்கி வாழும்



போது பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களைத் தொடர்ந்து வந்து அப்பாகங்களைத் தங்கள் வசமாக்கிக் கொண்டது. அத் தருணத்தில் அங்கு குடியேறிய டச்சு, ஜெர்மன், ப்யூரிட்டன் முதலிய முக்கிய இனத்தார்கள் வெவ்வேறு தேசங்களிலிருந்து வந்ததாலும், பழக்க வழக்கங்களும் வேற்றுமையாயிருந்ததாலும் ஒற்றுமை சீக்கிரம் ஏற்படவில்லை. இவர்கள் தங்கள் தாய் நாடாகக் கொண்ட தேசத்தை விருத்தி பண்ண எவ்வித உதவியையும் இங்கிலாந்திலிருந்து பெற முடியவில்லை. வெகு தூரத்திலிருந்து சமுத்திரங் கடந்து வந்து தங்கள் வியாபார விருத்திக்காக அடக்கியாளும் இங்கிலாந்து தேசத்தின் கொடூரத்தைக் கண்டு சகிக்க முடியாது 'சுதந்தரம்' என்னும் உணர்ச்சி உள்ளத்தே உதிக்க ஒவ்வொரு இனத்தாரிடமும் வேற்றுமை விலகி ஒற்றுமை உயர்ந்தது.

1588-ம் ஆண்டில் ஸ்பேய்ன் தேசம் எலிஜபெத் இராணியின் காலத்தில் இங்கிலாந்து தேசத்தோடு ஆர்மடா (Spanish Armada) என்ற போர்க் கப்பல் கூட்டத்தைச் சேர்ந்து யுத்தஞ் செய்ய வந்தது. அத் தருணத்தில் இங்கிலாந்தில் பலவித மதக் கொள்கை வேறுபாட்டால் ஜனங்கள் ஒற்றுமையின்றிக் குரோதம் பாராட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் ஸ்பேய்ன் தேசம் தங்கள் தேசத்தோடு போர் செய்ய வருவதைக் கேட்ட ஒவ்வொருவரிடத்திலும் தேசாபிமானம் பொங்கி, ஒற்றுமை ததும்பி வேற்றுமையை அதமாக்கி வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும் தங்கள் வேலைகளைப் போட்டுவிட்டு கத்தி கேடயங்களுடன் 'மாற்றானுக்கிடங் கொடேல்' என்னும் முதுமொழியைச் சிரமேற் கொண்டு தங்கள் தேசத்திற்கு வந்த ஆபத்தைத் தீர்க்க பல பாகங்களிலிருந்து புறப்பட்டு எப்படி ஒற்றுமையுடன் ஓடோடியும் வந்து ஸ்பேய்ன் தேசத்துக் கப்பல்களோடு யுத்தஞ் செய்தனரோ அப்படியே அமெரிக்கா ஜனங்கள் இங்கிலாந்து தேசத்தோடு போர் செய்து தங்கள் தாய் நாட்டிற்குப் பூரண சுதந்தரத்தைப் பெற்று சுமார் 500 வருஷங்களுக்குள், காட்டை நாடாக்கி எவ்வகையாலும் குறைவின்றிப் பெருஞ் செல்வாக்குடன், உலகத்தில் உயர்ந்த கட்டடங்களுடன் உன்னத பதவியை வகித்து வருவதை நாம் காண்

கிறோம். இப்பொழுது அமெரிக்கா எவ்வாறு சுதந்தரம் பெற்றது? என்பதை இவண் சுருக்கமாக ஆராய்வோம்.

## சுதந்திர வித்து

அமெரிக்காவில் குடியேறிய ஜனங்கள் இங்கிலாந்து தேசம் பல விடங்களில் தன் வியாபார விர்த்திக்கும், தேச விரிவுக்கும் யுத்தங்கள் செய்வதற்கு ஏராளமான திரவியங் கொடுத்துதவி வந்தார்கள். அதற்குப் பிரதி உபகாரமாக எவ்வித அநுகூலங்களையும் பெறாமல் தயங்கி, சுதந்திர வாழ்க்கையே சுந்திர வாழ்க்கையெனச் சகலரும் சிந்திக்க லாயினர். எப்படி ஒரு காட்டில் ஓர் சிங்கமானது நான்கு எருதுகள் ஒற்றுமையுடன் எப்பொழுதும் சேர்ந்துகொண்டே மேயும்போது அவைகளைக் கொல்லச் சக்தியற்று பின்பு தன் தந்திரத்தால் அவைகளின் சிநேகத்தைக் கெடுத்துத் தனித் தனியாய்ப் பிரித்துவிட்டு ஒவ்வொன்றையும் வெகு சுலபமாய் அடித்துத் தின்றதோ, அப்படியே ராஜாங்க அதிகாரிகள் அமெரிக்காவிலுள்ள பல இனத்தாருக்குள் வேற்றுமை யுண்டாக்குவதைப் பெரிதுங் கைகொண்டு அந்தோ! சுதந்தர உணர்ச்சியை அடியோடு அழிக்க முயன்றனர். ஆனால் சுதந்தர வித்து இம் முறைகளுக்கு இடங் கொடாது முளைத்துத் தளிர்த்து ஒற்றுமை யென்னுங் காற்றில் தாண்டவமாடத் தொடங்கிற்று.

## “பிரதிநிதியுமில்லை, வரியுமில்லை”

இச் சமயத்தில் பிரான்சு தேசத்திற்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் ஆங்காங்கு யுத்தங்கள் நடந்து வந்தன. அமெரிக்காவின் வட பாகமாகிய கானடாவில் பிரான்சுக்காரர்கள் வசித்து வந்தனர். தன் அமெரிக்கா இராஜ்யத்தைக் காப்பாற்ற வேண்டிய சைனியங்கள் வைத்துக்கொள்ள இங்கிலாந்துக்குச் செலவு ஏற்பட்டதால் அச் செலவுக்குப் பாவம்! அமெரிக்கா ஜனங்களே பொறுப்புடையவர்களென்று ‘எரிகிற நெருப்பிலே மெழுகு வார்ப்பது போல்’, 1765-ம் வருஷம் கிரேன்வில் என்னும் பிரிட்டிஷ் முதல் மந்திரி அமெரிக்கா தேசத்தில் முத்திரைச் சட்டம் (Stamp Act) ஒன்றையுண்டாக்கி முத்திரை யொட்டிய காகிதங்களுக்கு வரி வசூலிக்க



ஆரம்பித்தார். எத்தனையோ வழிகளில் இங்கிலாந்து தேசம் முன்னணியில் வர உதவி செய்தும் அதைப் பெரிதாக யெண்ணாது தங்கள் காரியம் சித்திபெற என்று மறியாத புதிய உள் நாட்டு வரியை உண்டுபண்ணி வசூலித்ததால், அமெரிக்கா ஜனங்களுக்கு மனக் கொதிப் புண்டாயிற்று. மேலும் அமெரிக்காவின் குறைகளை யெடுத்தோத இங்கிலாந்துப் பார்லிமெண்டில் தங்களுக்கோர் பிரதிநிதி ஏற்படுத்தாத குறையொன்று அமெரிக்கா ஜனங்களை அநேக நாள் அதிருப்தி பண்ணிக்கொண் டிருந்தது. இப்பொழுது வரி வசூலிக்கத் தொடங்கியதும், “பிரதிநிதியுமில்லை, வரியுமில்லை” யென்று வரி கொடா இயக்கத்தைப் பரப்பி வந்தனர். வரி வசூலிக்க வந்தவர்களின் வீடுகளை இடித்தனர். முத்திரைகளைத் தீக்கிரை யாக்கினர். “முத்திரையை விற்பவன், முத்திரையுடைய காகிதத்தை உபயோகப்படுத்துவோனெவனா யிருந்தாலும் அவன் தன்னையும், தன் வீட்டையும் மற்ற சொத்துக்களையும் பத்திரப்படுத்திக் கொள்ளட்டும்,” என்ற விளம்பரங்களை முக்கியமான இடங்களில் ஒட்டிவைத்தனர். இவ்விதமான கிளர்ச்சிகள் அதிகரித்த தருணத்தில் கிரேன்வில் மந்திரி ஸ்தானம் நீங்கி ராக்கிங்காம் என்பவர் முதல் மந்திரியாகி 1766-ம் வருஷம் இராஜ தந்திரத்தால் முத்திரைச் சட்டத்தை நீக்கிவிட்டு ஜனங்களைச் சமாதானப் படுத்தினார்.

## பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரமும் கலகமும்

அமெரிக்காவின் எதிர்ப்பும் இங்கிலாந்தின் வெறுப்பும் ஆறியடங்குமுன் கிராப்டன் கவர்ன்மெண்டில் மெம்பரான சார்லஸ் டௌன்செண்ட் என்பவர் அமெரிக்காவில் கண்ணாடி, சிவப்பு வெள்ளை ஈயம், காகிதம், தேயிலை முதலிய இறக்குமதியாகும் சாமான்களில் தீர்வை வாங்கும்படி சிபார்சு செய்தவுடன் அது அமுலுக்கு வந்து தீர்வை வசூலிக்க ஆரம்பித்தனர். அப்பொழுது அமெரிக்க ஜனங்களுக்குக் கடைசியாகச் சுதந்தரம் அடையவேண்டுமென்ற நோக்கம் பூரணமாயேற்படாவிட்டாலும், பிரிட்டனுடைய வரி வசூலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்பதையே முக்கிய நோக்கமாகக்கொண் டிருந்தனர். பாஸ்டன் என்ற நகரமே முதலாவ

தாகப் பிரிட்டிஷாருடைய இறக்குமதிகளைப் பகிஷ்கரிக்க வெகு தீவிரமாய் ஆரம்பித்தது. இப் பகிஷ்காரம் அதிகம் பயமுறுத்தியதால் பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்கள் அநேகம் அமெரிக்காச் கரையோரத்திற்கு அனுப்பப் பட்டன. அமெரிக்காவில் ஆங்காங்கு எதிர்ப்புக் கூட்டங்கள் பல உண்டாயின. மசசூசெட்ஸ் மாகாணக் கூட்டம் தீவிரமாய் எதிர்த்துப் போராட மற்றக் கூட்டங்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டது. எல்லாரும் ஒரே மனதாய் ஒன்று சேர்ந்து சர்க்காரை எதிர்க்க ஆரம்பித்தது இதுவே முதல் தடவையாம். ஆனால் வழக்கம்போல் பிரிட்டன் இப் பெருந் தேசீய மணங் கமழுங் கூட்டத்தையும், அதனோடு கலந்துகொள்ளத் தயாரா யிருந்தவர்களையும் களைத்துவிட ஆரம்பித்தது. இதனால் கலகங்கள் உண்டாயின. 1770-ம் வருடம் பாஸ்டன் நகரத் தெருவில் கலகக்காரர்கள் பிரிட்டிஷ் யுத்த வீரர்களைத் தாக்க வந்ததால் அவர்கள் அநியாயமாய்ச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இப் படுகொலை "அணையும் நெருப்புக்கு அகிற் கட்டை" சேர்ந்தது போல, ஜனங்களை அதிக ஒற்றுமைப் படுத்தித் தீவிர வேலைக்கு உற்சாகப்படுத்தி விட்டது. இந் நெருக்கடியான சமயத்தில் லார்ட் நார்த் என்பவர் முதல் மந்திரியாக ஏற்பட்டு நன்றாய் வியாபாரம் நடந்து கொண்டிருந்த தேயிலை தவிர மற்ற இறக்குமதிச் சாமான்களின் தீர்வையை நீக்கி ஜனங்களின் மனதைச் சிறிது சமாதானப்படுத்தினார்.

இச் சமாதான சமயத்தில் ரோட் என்ற தீவிலுள்ள கள்ளச் சரக்குக்காரர்கள் தங்களைத் பிடிக்க வந்த காஷ்பி என்ற பிரிட்டிஷ் கப்பலைத் தாக்கி நெருப்பு வைத்து அதன் மாலுமிகளையும் காயப் படுத்தி பட்டப் பகலில் பயமின்றி வீட்டுக்கும் திரும்பி வந்தனர். ஒற்றுமையின் காரணத்தால் அங்குள்ள ஜனங்கள் இத் தீயச் செய்கையைச் செய்தவர்களைக் காட்டிக்கொடுக்க வில்லை இதனால் பிரிட்டனுக்கு அளவற்ற ஆத்திரமும், அடங்காக் கோபமும் ஏற்பட்டது. இச் சமயத்தில் அமெரிக்காவில் மிகச் செல்வாக்குடைய பிராங்லின் (Franklin) என்பவர் இங்கிலாந்தில் தன் தேசத்துக்குத் தபால் அதிகாரியா யிருந்தார். அப்பொழுது



மசசூசெட்ஸ் மாகாணத்திற்குக் கவர்னராயிருந்த ஹச்சிசன் என்பவர் அமெரிக்கா ஜனங்களை அடக்கும் முறைகளை எழுதி இங்கிலாந்துக்கு அனுப்பிய கடிதத்தை பிராங்லின் உடைத்து வெளிப்படுத்தி விட்டதால் அவரை வேலையினின்று விலக்கி அதிக நஷ்டப்படும் படியான நிலையில் வைத்துவிட்டனர். இப் பெரியார் தன் தாய் நாட்டின் கடமைக்காக தான் செய்த நம்பிக்கைத் துரோகத்தையும், தான் அடைந்த பெரும் நஷ்டங்களையும் ஒரு பொருட் படுத்தாது மேன்மேலும் தேசாபிமானம் ஏற்பட்டு "தாலியில்லாக் கழுத்துக்குத் தங்கக் காசுமாலை யெதற்கு?" என்றபடி விடுதலை யடையா ஜனங்களுக்கு வீண் வேஷம் எதற்கு? என்று தன் தாய் நாட்டின் விடுதலைக்குத் தீவிர வேலை செய்ய ஆரம்பித்தார்.

## பாஸ்டன் தேயிலைக் கொள்ளை

பிராங்லின் விஷயமாய் அமெரிக்கா ஜெனங்களுக்கு ஏற்பட்ட மனவெழுச்சி அடங்குமுன் தேயிலையை யேற்றி அநேக பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் பாஸ்டன் துறை முகத்திலும் மற்ற அமெரிக்கத் துறைமுகப் பட்டணங்களிலும் வந்து சேர்ந்தன. லார்ட் நார்த் தேயிலைத் தீர்வையை மாத்திரம் நீக்காமல் விட்டு விட்டதால் அநேக மாகாணங்கள் தேயிலைக் கசாயம் அருந்தும் பழக்கத்தை நிறுத்தி விட்டன. அதனால் இங்கிலாந்திலிருந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் பண்டசாலையில் ஏராளமான தேயிலை குவிந்து கிடக்க நேரிட்டது. இப்படியாகத் தேயிலை வியாபாரத்திற்குக் கஷ்டமுண்டாகவே கம்பெனியார்கள் அநேக கப்பல்களில் தேயிலையை ஏற்றி அதற்குண்டான சர்க்கார் தீர்வையை வேண்டுமானால் தாங்களே செலுத்தி விடுவதாக யோசித்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அமெரிக்கா ஜனங்களோ பல துறைமுகங்களில் தேயிலைக் கப்பல்களை இறக்குமதி செய்யவிடாது திருப்பி அனுப்பி விட்டனர். வேறு சில விடங்களில் தேயிலை இறக்குமதியாகி பண்டசாலைகளில் தேடுவாரின்றி பழுத்துப் புழுத்துக் கிடந்தது. ஓரிரவு (1773) நகரவாசிகள் சிவப்பு இந்தியர்களைப் போல மாறு வேடம் பூண்டு தேயிலைக் கப்பல்களிலேறி மாலுமிகளைக் கயிற்றால் கட்டிவிட்டு 18,000 பவுன் விலை பெறுமான தேயிலையைக்

துறை முகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தனர். இக் கொள்ளை இங்கிலாந்து பார்லிமெண்டில் அநேகருக்குக் கோபத்தை மூட்டிற்று. ஜெனரல் கேஜ் என்பவர், "நாம் ஆட்டுக் குட்டிகளா யிருந்தால் அமெரிக்கா ஜனங்கள் சிங்கமா யிருப்பார்கள்; நாம் நிர்ணயமுள்ள வேலைகள் செய்தால் அவர்கள் சந்தேகமின்றிச் சக்தியற்றவர்களா வார்கள்" என்று அரசனுக்கு எடுத்தோதினர். சார்லஸ் பாக்ஸ் (Charles Fox) என்னும் வாலிப மந்திரிகளில் ஒருவர்தான் இக் கண்டிப்பான ஏற்பாடுகளுக்கு நேர் விரோதமா யிருந்தார். இராஜனும் அடக்கு முறையில் ஆவல் கொண்டதை லார்டு நார்த் கண்டு, தன் அந்தரங்கக் கருத்து வேறாயிருப்பினும், அரசன் எப்படியோ தானும் அப்படியே யென்று பேசாதிருந்தார்.

பாஸ்டன் நகரின் துறைமுகம் முற்றுகை போடப்பட்டது. ஜெனரல் கேஜ் என்பவர் மசசூசெட்ஸ் மாகாணத்திற்கு கவர்னராக்கி, அம் மாகாண தேசியக் கூட்டம் செய்யும் தீர்மானங்களை விலக்கும் (To Veto) படியான அதிகாரமும் அளிக்கப்பட்டார் மேலும் கவர்ன்மெண்ட் அதிகாரிகளின் மீது யாரும் குற்றம் சாட்டினால் அக்குற்றங்களை வடக்கே வெகு தூரத்திலுள்ள நோவாஸ்கோஸியா என்ற இடத்திலும், இங்கிலாந்திலு மட்டுமே கேட்டுக் கொள்ளப்படுமென்று ஏற்பட்டது. ஆதலால் எவ்விதக் குற்றங்களையும் ஜனங்கள் கவர்மெண்டிடம் தெரிவித்துக் கொள்ளப் பணச் செலவு செய்து அவ்வளவு தூரம் போக முடியாமல் போகவே சர்க்கார் அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் நடக்க ஆரம்பித்தனர். இந் நெருக்கடியான சமயத்தில் வியாதியஸ்தரா யிருந்த மூத்த பிட் (Elder Pitt) அல்லது லார்ட் சேதம் என்பவர் சிறிது சௌக்கியப் பட்டுப் பார்லிமெண்டுக்குத் திரும்பி வந்து சர்க்கார் செய்யும் சகிக்க முடியாச் செய்கையைக் கண்டித்து ஆத்திரமாய்ப் பேசினர். அவர் பின் வருவதை முன்றிந்து "வெகு தூரத்திலிருக்கும் சிநேகிதர்களின் (பிரிட்டிஷ் இராஜ்ஜியங்களின் உதவியை விரும்பி நிற்க இங்கிலாந்துக்குச் சமயம் வந்துவிட்டது" என்றும் அமெரிக்கா ஜனங்களைக் கோபமூட்டும் நடத்தைகள் கூடாதென்றும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் பயன் படவில்லை.



1760-ம் ஆண்டில் கானடா என்ற அமெரிக்காவின் வடபாகம் இங்கிலாந்தின் ஆதீனத்திற்குட்பட்டது. இங்கே பிரான்சுக்காரர்களே அதிகமாயிருந்தனர். இவர்களெல்லாம் "ரோமன் கத்தோலிக்" மதத்தினர். பிரிட்டன் குபெக் ஆக்ட் என்ற சட்டமுண்டாக்கி கானடாவில் கத்தோலிக்க மதத்தையும், பிரான்சு பிரிட்டிஷ் சட்டங்களையும் ஸ்தாபித்தது. இதைக் கண்ட அமெரிக்காவின் புதிய இங்கிலாந்து மாகாணத்திலுள்ள அநேக "ப்யூரிட்டன்" வகுப்பினர், தங்கள் மதக் கொள்கைக்கு இடையூறுகள் வந்துவிட்டனவென்று மிகவும் கலக்கமுற்றனர். "சரியாக நடத்தத் தெரியாத குறுகிய நோக்கத்தின் அரசு முறையை யுடைய, முதல் தரமான சக்தி வாய்ந்தவரொருவருமற்ற அமைச்சர் கூட்டம், ஆழ்ந்த யோசனையற்ற, பிடிவாதமான அரசரின் நோக்கப்படி நடந்து கொண்டதே அமெரிக்காவின் அமைதியைக் கெடுத்ததற்கு உண்மையான காரணம்." *

## தேசியக் காங்கிரஸும் சுதந்திரப் போரும்

'பீனல் ஆக்ட்ஸ்' என்ற தண்டனை விதிக்கிற சட்டங்களை மசசூசெட்ஸ் மாகாணத்திலும், மற்ற முக்கிய நகரங்களிலும் அமுலுக்குக் கொண்டுவந்த வுடன் பிலடெல்பியா (Philadelphia) என்ற நகரில் ஒரு பெரிய பொதுக் காங்கிரஸ் ஒன்று கூடிற்று. இப் பெருங் கூட்டத்திற்கு எல்லா அமெரிக்க மாகாணங்களும் (ஜ்யார்ஜியா மாகாணந் தவிர) தங்கள் பிரதிநிதிகளை அனுப்பின. இந்தக் காங்கிரஸில் "பீனல் ஆக்ட்டு"களும், நிலத் தீர்வைகளும் அநீதமானவைகளென்று தீர்மானித்தனர். ஆனால் அமெரிக்கா இங்கிலாந்தைவிட்டுப் பிரிந்து போகக்கூடாது என்று காங்கிரஸ் மிகவும் அழுத்தமாகவும் கூறிற்று. மசசூசெட்ஸ் மாகாணத்தில் 12,000 மனிதர்கள் யுத்தத்திற்கு ஒரு நொடியில் ஆயுதங்களுடன் தயாராயினர். சுதந்திரக் கொடியுடன் மற்றொரு கூட்டமுங் கூடிற்று. அமெரிக்காவின் சுதந்திரப் போர் தொடங்கலாயிற்று.

* E. M. Wilmont Buxton, an English historian.

இச் சுதந்திரச் சண்டையை நான்கு பகுதியாகப் பிரிக்கலாம். முதலாவதாக (1775–1778) அமெரிக்காவின் குடியேறிய மாகாணங்களுக்கும், இங்கிலாந்துக்கும் அநியாயமான வரிகளை நீக்குவதற்கு மாத்திரம் போர் நடந்தது. அநேக விடங்களில் பிரிட்டிஷார் வெற்றி யடைந்தனர். ஏனெனில் அமெரிக்க யுத்த வீரர்கள் யுத்தத்தில் பழக்கமற்றவர்களும், காட்டு வேலைகளிலேயே பெரிதும் ஈடுபட்டவர்களும், சரியாக உண்ணாதவர்களுமா யிருந்தனர். முதன் முதலாக அமெரிக்க ஜனங்கள் இரண்டு சண்டை மருந்துகளை கான்காட் என்ற இடத்தில் சேர்த்து வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டதும் ஜெனரல் கேஜ் அந்த இடங்களை அழிக்கும்படி தன் படைக்கு உத்தரவு கொடுத்ததில் 1775-ம் வருஷம் லெக்ஸிங்டன் என்ற இடத்தில் பெருஞ் சண்டை நடந்தது. இதில் சுதந்திரப் போர் வீரர்கள் தங்கள் எதிரிகளை 10 மைல் தூரத்திலுள்ள பாஸ்டன்வரை ஓடி யோடித் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். அதே தருணத்தில் காங்கிரஸ் போர் வீரர்களை ஜ்யார்ஜ் வாஷிங்டன் என்ற வீரசிகாமணியின் அதிகாரத்தின் கீழ் தயாரித்தனர். இங்கிலாந்திலிருந்து நான்கு படைக் கூட்டங்களும் பாஸ்டன் நகரில் வந்து சேர்ந்தன. வாஷிங்டன் பாஸ்டனுக்குப் போகு முன்னேயே பங்கர்ஸ் ஹில் என்ற விடத்தில் பெரிய யுத்தம் நடந்துவிட்டது. இதில் பிரிட்டிஷாருக்கு ஜெனரல் ஹோவ் என்பவர் அதிக நஷ்டத்துடன் வெற்றியை யுண்டாக்கினர். புதிதாய் வரும் பிரிட்டிஷ் படையைத் தடுப்பதற்கு வாஷிங்டன் தன் படையுடன் பாஸ்டனுக்கு வெளிப்புறமாகச் சகிக்க முடியாத பனியில் காத்துக்கொண்டிருந்தார். பனியில் ஆகாரமின்றி யுத்தப் பயிற்சியுமில்லாத ஜனங்களைச் சிதறவிடாமல், தைரியஞ் சொல்லிக் கூட்டிவைத் திருந்தது, வாஷிங்டனுடைய மனோ வல்லமையையும், போர் வீரன் ஆற்றலையும், பலருக்கு அறிவுறுத்தின. அமெரிக்க ஜனங்கள் கோழைகள் என்று இலேசாய் நினைத்து இங்கிலாந்திலிருந்து பலமில்லாத கொஞ்சம் போர் வீரர்களை அனுப்பியதால் ஹோவ் என்பவர் தன்னால் நிர்வகிக்க இயலாது 1776-ம் ஆண்டில் பாஸ்டன் நகரை விட்டுத் தன் படையுடன் வெளியேறிவிட்டார். அதிலிருந்து பிரிட்டிஷாருக்கு வட பாகத்தில் உறுதியான நிலை யில்லாமற் போய் விட்டது.



இதனால் இங்கிலாந்து அரசன், பிரிட்டனில் படை சேர்க்க முடியாமல் உடனே ஜெர்மனி தேசத்திலிருந்த சிறு சிறு அரச குமாரர்களுக்குப் பணமுதவி அமெரிக்கக் "கலகக்காரர்களை" அழித்துவிட ஜெர்மனிப் போர் வீரர்களை அனுப்பினர். அமெரிக்காவில் குடியேறி யிருக்கும் பிரிட்டிஷ்காரர்களை அழிக்க அயல் நாட்டுப் படையை அனுப்பியதால் அமெரிக்க ஜனங்களின் யுத்தத்தின் நோக்கம் வேறு விதமாக மாறிவிட்டது. 1776-ம் ௵ ஜூலை ௴ 4௳ தேசியக் காங்கிரஸ் கூடி, அமெரிக்கா இங்கிலாந்து தேசத்திலிருந்து பூரணமாய்ப் பிரிக்கப்பட்டு எல்லா மாகாணங்களையும் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் என்ற பெயருடன் சுதந்திர மடைந்துவிட்டதாகத் தெரியப்படுத்தினது. இதே வருஷக் கடைசியில் ஹோவ் என்பவர் நியூயார்க் நகரைப் கைப்பற்றினர். ஆகவே வாஷிங்டன் உடனே பிலடெல்பியாவுக்குப் போக நேர்ந்து மிகக் கஷ்டமான நிலைமையிலிருந்தார். இச் சமயத்தில் பிரிட்டிஷ் யுத்த அதிகாரிகள் ஒன்று சேர்ந்து உடனே சண்டை செய்திருந்தால் வாஷிங்டன் படையைப் பறக்கவிட் டிருப்பார்கள். 1777-ம் வருஷம் பனிக் காலத்தில் ஹோவ் படையெடுத்து வாஷிங்டனை தோற்கடித்து பிலடெல்பியா நகரையும் பிடித்துக் கொண்டார். இச் சமயத்தில் அமெரிக்காவின் வட பாகத்தில் ஜெனரல் கேட்ஸ் என்றவரின் கீழ் அமெரிக்கப் படை அதிகம் சேர்ந்து, வடக்கிலிருந்து வந்த ஜெனரல் பர் கோய்ன் அதிகாரத்திற்குட்பட்ட பிரிட்டிஷ் படையை சரட்டோகா என்ற விடத்தில் ஜெயித்து எல்லாரையும் அப்படியே கைப்பற்றிக் கொண்டது. இந்த வெற்றியே அமெரிக்காவுக்குப் பின் வெற்றியைக் கொண்டுவந்தது.

இதே சமயங்களில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் எங்கு பார்த்தாலும் யுத்தங்கள் நடந்துகொண் டிருந்தன. ஆதலால் பிரான்சுக்காரர்கள் சரட்டோகா யுத்தத்திற்குப் பின் அமெரிக்காவோடு உடன்படிக்கை செய்து கொண்டு அதற்கு உதவி செய்யக் காத்துக் கொண் டிருந்தார்கள். இதைக் கண்ட பிரிட்டனும் கலக்கமுற்றது. லார்ட் நார்த் சுதந்திரந் தவிர மற்றெல்லா வகைக்கும் உடன்படுவதா யிருந்தார். ஆனால் ராக்கிங்காம் கூட்டத்தார் பிரான்சு தன் கடற்

படையுடன் தயாரா யிருப்பதாலும், தாங்களும் சண்டை செய்து களைத்துவிட்டதாலும், சுதந்திரத்தையுங் கொடுத்துவிடும்படி வற்புறுத்தினார்கள். பார்லிமெண்டிலும் அமெரிக்காவின் சுதந்திரத்தை ஒப்புக்கொள்ளும்படி ஓர் பிரேரபணை கொண்டு வரப்பட்டது. இப்பிரேரபணையை எதிர்த்துப் பேச அப்பொழுது சாகுந்தருவாயிலிருந்த லார்ட் சேதம் சுமந்து கொண்டு வரப்பட்டார். இவர் அமெரிக்காவை எப்படியும் இழந்துவிடக் கூடாதென்று எதிர்த்துப் பேசி முடிக்குமுன் சன்னியால் பீடிக்கப்பட்டு அவரை வீடுகொண்டு சேர்த்தவுடன் இறந்துபோனார். இவ் விஷயங்கள் முற்றுப் பெறுமுன் பிரான்சு தேசத்தின் எதிர்ப்பைக் கவனிக்க நேர்ந்துவிட்டது.

பிரிட்டிஷ் கப்பல்களை அமெரிக்கா தேசம் செல்லவிடாது வழியில் சண்டை இழுத்துக் கொண்டால் அமெரிக்கா ஜனங்கள் இலேசாய் யுத்தஞ் செய்து ஜெயிப்பார்களென்று பிரான்சு தேசம் யோசனை செய்தது. 1779-ம் ௵ ஜூன் ௴ ஸ்பெயின் தேசமும் பிரான்சு தேசத்தோடு சேர்ந்து பிரிட்டிஷ் கப்பல்களைத் தாக்க ஆரம்பித்தது. இதை இங்கிலாந்து சகிக்க முடியவில்லை. ஜிப்ரால்டர், மைனார்கா என்ற இடங்களை ஸ்பெயின் கைப்பற்றிக் கொண்டது. 1780-ம் ஆண்டில் பிரிட்டன் பல சங்கடங்களுக் குட்பட்டது. ருசியா, ஸ்வீடன், டென்மார்க் தேசங்கள் ஒன்று சேர்ந்து பிரிட்டனுக்குக் கடைசிக் காலம் வந்துவிட்டதென்று எண்ணி பிரிட்டனின் எதிரிகளுக்குச் சாமான்கள் ஏற்றிச் செல்லும் வெளிக் கப்பல்களைக் கைப்பற்றிக் கொள்ள விடாது தடுக்க ஆரம்பித்தன. ஹாலண்டு தேசமும் சேர்ந்து கொண்டது. ஆகவே பிரிட்டன் அவ் வருஷத்தில் தன் குடியேற்ற நாடுகளோடும், பிரான்சு, ஸ்பெயின் முதலிய ஐரோப்பிய தேசங்களோடும் யுத்தஞ் செய்ய நேரிட்டதோடும் இந்தியாவில் ஐதர் அலி சூறையாடிக்கொண் டிருந்தான். அயர்லாந்து தேசமும் அமெரிக்காவைப் போலச் சுதந்திரமடைய சமயம் பார்த்துக்கொண் டிருந்தது. இப்படியாகப் பிரிட்டிஷ் இராஜ்யம் ஆட்டமுற்றுக்கொண் டிருந்தது.

1781-ம் வருஷத்து வசந்த காலத்தில் இங்கிலீஷ் ஜெனரல் கான்வாலிஸ் அமெரிக்காவிலுள்ள யார்க் டவுன் என்ற இடத்தி



லிருந்து கொண்டு நியூயார்க்கிலுள்ள படைக்குச் சமுத்திர மார்க்கமாய்ச் செய்திகள் அனுப்பிக்கொண் டிருந்தான். டி கிரஸே என்ற அதிகாரத்தின் கீழ் பிரான்சு சண்டைக் கப்பல்கள் வந்து கார்னவாலிஸ் செய்திகளனுப்பிக்கொண்டிருக்கும் சமுத்திர மார்க்கத்தைத் தடுத்துவிட்டார். அதே சமயத்தில் வாஷிங்டன் தரை மார்க்கமாய் யார்க் டவுனை நோக்கிச் சென்றான். கான்வாலிஸ் தப்பிக்க இடமில்லாமல் எதிரிகள் வசம் தன்னையும் தன் படையையும் ஒப்புக் கொடுத்து விட்டார். யார்க் டவுனில் அடைந்த ஜெயத்தோடு சுதந்திரப் போர் அமெரிக்காவில் முடிவடைந்ததென்றே கூறவேண்டும். ஆனால் சமுத்திரத்தில் பிரான்சும், ஸ்பெயினும் சேர்ந்து பிரிட்டிஷோடு யுத்தஞ் செய்து வந்தன. மற்றத் தேசத்தார்கள் இதில் தலையிட்டுக்கொள்ள வில்லை 12 வருஷ காலமாய் ஓயாக் கவலைக்கிடமா யிருந்த முதல் மந்திரி ஸ்தானத்தை லார்ட் நார்த் இராஜிநாமா செய்துவிட்டார்.

## பூரண சுதந்திரம்

பல வருஷங்களாகத் தரையிலும், சமுத்திரத்திலும் சண்டைகள் செய்து ஒவ்வொரு தேசமும் (இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்சு) தளர்ந்துவிட்டது. ஆகவே ஒவ்வொரு தேசமும் சமாதானத்திற்குத் தயாரா யிருந்தது. 1783-ம் ௵ ஜனவரி ௴ வார்சேல்ஸ் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் பூரண சுதந்திரம் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஸ்பெயின் தேசம், மைனார்கா என்ற தீவை மாத்திரம் எடுத்துக் கொண்டது. யுத்தத்தில் கைப்பற்றிய மற்றவைகள் அவரவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த யுத்தங்களில் பிரிட்டன் தன் இராஜ்யத்தில் ஓர் பெரும் பகுதியை இழந்ததுமன்றி 10 கோடி பவுனுக்கும் உள்நாட்டுக் கடனாளியாயிற்று.

தற்போதுள்ள முன்னேற்றத்திற்கு வெகு சீக்கிரத்தில் வர அமெரிக்காவுக்குச் சுதந்திரமே மிகவும் அத்யாவசியமா யிருந்தது. 1789-ம் ௵ ஜனவரி ௴ 7௳ அமெரிக்காவின் சுதந்திரத்துக்குத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் பண்ணிய

198530

# தோலும் நிறமும்.

ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

## தோலின் அதிசயங்கள்

சரீரத்தின் தோல் இரண்டு வெவ்வேறு அடுக்காக இருக்கிறது. வெளியிலிருக்கிற தோல் பொய்த் தோல் அல்லது புறத்தோல் என்று சொல்லப்படுகிறது. உள்ளே இருக்கிற தோல் மெய்த் தோல் அல்லது அகத்தோல் என்று சொல்லப்படுகிறது. தோலானது நரம்புகளையும் இரத்த நாடிகளையும் ஏராளமாகக்கொண் டிருக்கிறதை நாம் எல்லாரும் நமது தோலின் வேதனை அநுபவத்தால் அறிகிறோம். அந் நரம்பு நாடிகளால் தான் ஸ்பரிஸ உணர்ச்சியும் வேதனை உணர்ச்சியும் உண்டாகின்றன. அது, சுவாசாசயத்தையும் மூத்திரப் பிண்டத்தையும்போல இரத்தத்தைச் சுத்தி செய்யும் ஓர் உறுப்பு. அதனுடைய வேலைகள் இருபத்தெட்டு மைல் நீளமுள்ள கழிகால்கள் அல்லது குழாய்கள் மூலமாகச் செய்யப்படுகிறதாகக் காலஞ்சென்ற ஸர். இராஸ்மஸ் வில்ஸன் என்பவர் கணக்கிட் டிருக்கிறார். இக் கீர்த்தி பெற்ற

---

ஜ்யார்ஜ் வாஷிங்டன் என்பவரை அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கு முதல் பிரெஸிடெண்டாக நியமித்தனர். அமெரிக்க தேசப், அத்லாந்து சமுத்திரக் கரையோரம் சில மாகாணங்களை மாத்திரம் உடையதோடு நில்லாமல் கீழ்மேலாய் அத்லாந்து சமுத்திரத்திலிருந்து பெஸிபிக் சமுத்திரம் வரையிலும், தென் வடக்காய் மெக்ஸிகோவிலிருந்து கானடா வரைக்கும் மாகாணங்களையுடையதாய் முன்னேற்றத்தில் முன்னணியிலிருந்து, செல்வத்தில் சீர்பெற்று, உலகத்தில் முக்கிய தேசமாய் விளங்கா நிற்பதின் காரணம் அதை அடக்கி ஆண்டவர்களிடமிருந்து காலாகாலத்தில் விடுதலையடைந்ததாலன்றோ?



சர்ம சாஸ்திரி ஒரு சதுர அங்குலத்தில் 2800 குழாய்கள் இருப்பதாகவும் ஒவ்வொரு குழாயும் கால் அங்குலம் நீளம் இருப்பதாகவும் கண்டு அவருடைய ஆச்சரியமான கணக்கை வெளியிட் டிருக்கிறார். இக் கணக்குப்படி நமது சரீரத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்திற்கும் 700 அங்குல நீளம் குழாய்கள் இருக்கின்றன. சாதாரண அளவுள்ள ஒரு மனிதனுடைய சரீரத்தில் சுமார் 2500 சதுர அங்குலங்கள் இருக்கின்றன. ஆதலால் 1,750,000 அங்குலம் நீளமுள்ள (2800+2500) 7,000,000 கழி குளாய்கள் இருக்குன்றன. 1,750,000 அங்குலம் அல்லது 145,833 அடி; அல்லது 48611 கெஜம்; அல்லது சிறிது குறைய இருபத்தெட்டு மைல் ஆகின்றது.

## தோலிற்கும், அழகு ஆரோக்கியங்களுக்கு முள்ள சம்பந்தம்

தோல் சரீரத்தின் மிக மிக முக்கிய உறுப்புகளில் ஒன்று. அது செய்கிற பல வகையான வேலைகள், ஆரோக்கியமும் ஆயுளுமாகிய இரண்டிற்கும் இன்றியமையாதவை. நாம் ஜீவித்திருத்தற்குத் தோலைப் போல இரைக்குடலும் சுவாசாசயமும் மூளையுங்கூட அவ்வளவு அவசியமானதல்ல. மனிதர் சாப்பாடில்லாமல் ஒரு வாரத்திற்கு மேல் ஜீவித்திருக்கக்கூடும். சுவாசாசயம் தனது வேலையைச் சிறிதும் செய்யாது நின்றுவிட்ட பின்னரும் பல நாள் மனிதர் சாவாமல் இருக்கக் கூடும். ஆனால், தோலின் வேலைகளைக் கெடுத்துவிட்டால், ஒரு சில மணிகளுக்குள் மரணம் வந்துவிடும். பத்தாம் லியோ, ரோமாபுரியின் குருவான சமயத்தில் பிளாரன்ஸ் நகரின் தெருக்களில் ஒரு பெரிய ஊர்கோலம் நடந்தது. அப்பொழுது பொற் பருவம் என்பதைக் காட்டும் பொருட்டு ஒரு குழந்தையின் சரீரம் முழுவதையும் பொன் இலையால் போர்த்துவைத் திருந்தார்கள். அக் குழந்தை, பார்த்தவர்கள் திகில் அடையும்படி பலமான வரிப்புகளால் ஒரு சில மணிகளுக்குள் இறந்துவிட்டது. தோலின் துவாரங்களை அடைத்து வியர்வையின் வெளியேற்றத்தை நிறுத்திவிட்டதாலேயே இக் குழந்தை மரணம் அடைந்த தென்பதற்குச் சந்தேகம் இல்லை ஸ்நானத்தால் அல்லது சரீரப் பயிற்சியால் தோலைச் சுத்தமாக வைத்தலை நாம் அசட்டை செய்வோமாயின், முன் சொல்லிய இருபத்தெட்டு மைல் நீளமுள்ள கழி

குழாய்களையும் நாம் அடைத்துவிடுகிறோம். இச் செயலிற்குச் சிக்ஷை யில்லாமல் போகாது. இச் செயலின் நேரான பலன்களாக ஆரோக்கிய மின்மையையும் மரணத்தையும் உண்டுபண்ணும் அபாயகரமான வியாதிகள் உண்டாகின்றன. தோலின் வெண்மையும், ஒளியூடுருவலும், நிறமும் அழகிற்கு முக்கிய அம்சங்களாக எப்பொழுதும் கருதப்படுகின்றன. முகத்தின் உறுப்புக்கள் எவ்வளவு பூரணமாக அமைந்திருந்தபோதிலும் தோல் நிறம் கெட்டதாகவாவது தேமல்கொண்டதாகவாவது இருக்கும் பக்ஷத்தில் சகல வசீகரமும் நீங்கிவிடுகின்றது. தோல் சிலந்திகளாலும் பருக்களாலும் சுருங்கல்களாலும் மறுக்களாலும் பழுதாக்கப்பட்ட பொழுது அழகும் சற்றேறக்குறைய நீங்கிவிடுகின்றது. தோலின் தன்மையும் நிலைமையும் நிறத்தை ஆள்கின்றது. தோற்றத்தின் அழகைப் பெரும்பாலும் நிறம் ஆள்கின்றது. அழகிய நிறத்தோடு கூடியுள்ள ஒரு அவலக்ஷணமான முகத்தை யாராவது எப்பொழுதாவது பார்த்திருப்பதுண்டா? தெளிவான நிறத்தையும் சிவந்த கன்னங்களையுமுடைய சாதாரண முகங்களும் உண்டு. ஆனாலும் அவை பார்ப்பதற்கு எப்பொழுதும் இன்பகரமா யிருக்கின்றன. முக்கிய உறுப்பாகிய தோலைப் பாதுகாக்கும் பொறுப்பு விலை மதிப்பற்ற புறத் தோலைக் கொண்டுள்ள ஒவ்வொருவரையும் சேர்ந்தது. அழகை அடைவதற்கு ஆசிக்கிறவர்கள் அதனை இடைவிடாது கவனித்துக் கொண்டு வரவேண்டும்.

## மனோ சலனம் தோலிற் செய்யும் காரியம்

சில மனோசலனங்கள் குளிர்போலவே தோலைத் தளர்ச்சியாக்கி அதன் தொழில்களையும் பாதிக்கின்றன. தளர்ச்சியை உண்டு பண்ணும் வியசனம், பயம் முதலிய மனோசலனங்கள் சுவாச ஓட்டத்தையும் இரத்த ஓட்டத்தையும் குறைக்கின்றன; தோலின் நிறத்தை மங்கச் செய்கின்றன; வியர்வையைத் தடுக்கின்றன; நரம்பின் தொழிலைக் கெடுக்கின்றன. கோபமும் மற்றைய கொடிய மனோ சலனங்களும் சுவாஸ ஓட்டத்தையும் இரத்த ஓட்டத்தையும் விரைவு படுத்தித் தோலின் சூட்டை அதிகமாக்கிக் கோபக் குறிகளான முகச் சிவப்பையும் முகக் கனப்பையும் முக விறைப்பையும் உண்டுபண்ணுகின்றன. மனோ சலனங்கள் தோலிற் செய்யும் காரியம் சில வேளைகளில் வியாதி



களைக்கூட உண்டுபண்ணத் தக்க அவ்வளவு பெரிதா யிருக்கின்றது. பலத்த மனோசலனங்கள் முக்கியமாக வியசனமும் பயமும் தோலின் ஒழுங்கீனங்களையும் வியாதிகளையும் உண்டாக்குகின்றன. சில சமயங்களில் பயத்தாலும் வியசனத்தாலும் ஜன்னியும் சுரமும் உண்டாகின்றன. வில்க்கின்ஸன் தோலைப்பற்றிப் பின் வருகிறபடி சொல்லுகிறார்: அன்பானது தனது சிவப்பு நிறத்தை உண்டுபண்ணுகின்றது. அன்போடு பொருந்திய நாணம் பிரகாசத்தை நல்குகின்றது. தாழ்ந்த வெட்கம் மண்ணின் நிறத்தைக் கொடுக்கின்றது. வெறுப்புத் தனது மங்கல் நிறத்தை உண்டுபண்ணுகின்றது. பொறாமை தனது பச்சை நிறத்தை நல்குகின்றது. கோபம் கறுப்பு நிறத்தை உண்டுபண்ணுகின்றது. ஏக்கம் இறந்துபோனவர்களது வெளுத்த நிறத்தை அளிக்கின்றது. கபடம் மற்றைய நல்லனவற்றை யெல்லாம் கவர்ந்துகொண்டு தீயனவற்றை யெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகக் கொடுக்கின்றது. துக்கமும் துன்பமும் தோலை முரடாக்குகின்றன. விவேகமும் அறிவும் தமது அழியாத கிரணங்களால் தோலிற்குப் பரிசுத்தமான ஒளியை நல்குகின்றன. சுருக்கமாகச் சொல்லின், தோலின் எண்ணிறந்த தோற்றங்களில் ஒவ்வொன்றும் மனித சுபாவத்தைக் காட்டுங் கருவியேயாகும்.

## சீதோஷ்ணங்களும் அவற்றின் மாற்றங்களும் தோலிற் செய்யும் காரியம்

நல்ல அழகிய நிறத்தை விரும்புகின்றவர் சூரியனுடைய மிக உஷ்ணமான கிரணங்கள் நேரில் தம் மீது விழாதபடி தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். எரிகின்ற சூரியனது சக்தியால் தோல் உலர்ந்தும் முரடாகியும் போம்; சில சமயங்களில் தடித்தும் வெடித்தும் போம். சீதம் முதலில் தோலில் செய்யும் காரியம் சுருங்கல்களை உண்டுபண்ணுதலே. தோல் சுருங்கிய வுடன் இரத்தக் குழாய் நாடிகளுக்குள் எவ்வளவு இரத்தம் இயல்பிற் செல்லுமோ அவ்வளவிற்குக் குறைந்து செல்கின்றது; உஷ்ணத்திற்கும் உயிருக்கும் ஆதாரமான பெரிய மத்திய ஸ்தலங்களிலிருந்து தூரத்திலுள்ள பாகங்களுக்குச் செல்கின்ற இரத்தத்தின் அளவும் குறைகின்றது; அவற்றால் நம்மெல்லோருக்கும் அநுபவமாயுள்ள நரம்புத் திமிர் உண்டாகின்றது. ஆனா

லும் இக் காரியங்கள் ஸ்திரமானவையல்ல. சிறிது காலங் கழித்து இவற்றிற்கு எதிரான காரியங்கள் நிகழ்கின்றன. அப்பொழுது முன் தடை செய்யப்பட்ட இரத்தம் அதிக விரைவாகத் திரும்புகின்றது. அது தோலில் ஒரு பளபளப்பான சிவப்பு நிறத்தை உண்டுபண்ணுகின்றது. இந் நிறம் பனிக் காலத்தில் மிகத் தூரம் நடந்தவர்களுடைய முகத்தில் தோன்றும் பளபளப்பான சிவப்பு நிறத்தை ஒத்திருக்கும். சீதம் வாயு மண்டலம் உலர்ந்திருக்கும் பொழுது ஆரோக்கியமுள்ள மனிதருக்கு, முக்கியமாக அதிகத் தேக அப்யாசம் செய்தவருக்கு, மிக லாபகரமானது. ஆனாலும் நனைந்த வாயு சரீரத்தில் வேறு விதமான வேலை செய்கின்றது. அது சரீரத்தில் படுங்காலையில் சரீரம் அதிக அளவு ஈரத்தைக் கவர்ந்து அதிகக் கனமாகின்றது. அதன் சக்தியால் தோலின் நிறம் மிசுதியும் பாதிக்கப்படுகின்றது. உலர்ந்து தேய்ந்து ஜனங்களின் நிறத்தைப் போன்றதாகின்றது. நனைந்த சீதம் சகல சீதோஷ்ணங்களினும் மிக மிகக் கெட்டது. அது சகல சரீரப் பிரகிருதிகளுக்கும் இளையோரானாலும் சரி, முதியோரானாலுஞ் சரி தீங்கை விளைக்கின்றது. மழை காலத்தில் ஒவ்வொரு தினமும் வாயு நனைவில்லாதிருக்கும்போது திறந்த வெளியிடங்களில் சரீராப்பியாசங்கள் செய்ய வேண்டும். சீதோஷ்ண மாற்றங்கள் தோலிற் செய்யுங் காரியங்களில் ஒன்றினின்று மற்றொன்றிற்கு விரைந்து செல்லும் மாற்றமே—எப்பொழுதும் அபாயகரமானது. சீதத்திலிருந்து உஷ்ணத்திற்கு மாறுதல், உஷ்ணத்திலிருந்து சீதத்திற்கு மாறுதலைப் போல அவ்வளவு அபாயகரமானதன்று. உஷ்ணத்திலிருந்து சீதத்திற்கு மாறுதல் வியர்வையை வெளியேற்றும் தோலின் வேலையைத் தடைப்படுத்துகின்றது. அதனால் சில சமயங்களில் நாசி தொண்டை முதலியவற்றின் ஜவ்வுகளில் எரிச்சல் உண்டாகின்றது. நாமாக உண்டு பண்ணிக்கொள்ளும் சீதோஷ்ண மாற்றங்களை, உதாரணமாக ஒரு உஷ்ணமான படுக்கை அறையிலிருந்து ஒரு குளிர்ந்த இராத்திரியில் வெளியில் செல்லல்போன்றவைகளை, நாம் அதிக ஜாக்கிரதையோடு நீக்க வேண்டும். அவை உண்மையில் வாயு மண்டலத்தின் இயற்கை மாற்றங்களைப் பார்க்கிலும் அதிக அபாயகரமானவை. உஷ்ணத்திலிருந்து சீதத்திற்கும் உலர்ந்த காற்றிலிருந்து நனைந்த காற்றிற்கும் மாறி மாறிச் செல்கின்ற ஒரு மனிதனுடைய சரீரத்தின் புறத்தோல் முரடாகும் அல்லது வெடித்துப் போகும்.

---

# துஞ்சத்து எழுத்தச்சன்.

## ஸ்ரீமான் என். வேங்கடரமணன் அவர்கள்.

### முன்னுரை

ஒரு மொழி (பாஷை) எவ்வளவு தூரம் வளர்ச்சியுற்றிருக்கிறதென்பதற்கு அம் மொழியில் தோன்றிய இலக்கியங்களையே சான்று கூறவேண்டும். எனவே ஒரு மொழியில் இலக்கியங்கள் எவ்வளவு தூரம் பெருக்கமடைகின்றனவோ அவற்றிற் கேற்பவே அம் மொழியும் வளர்ச்சியடையும். ஒரு மொழி நீண்ட நாட்களாக மக்களிடையில் வழங்கி வரலாம். ஆயினும் அம் மொழிக்கு வரி வடிவும், அவ்வழியே இலக்கிய நூலணிகளும் ஏற்படாவிடின் அம் மொழிக்கு எக்காலத்துஞ் சிறப்பில்லை. ஒரு மொழி நேற்று அல்லது இன்று தோன்றியதாகவிருக்கலாம். அதற்கு எழுத்தேற்பட்டு, இலக்கியங்கள் பெருக்கமடையுமாயின் அம் மொழியே மற்றையவற்றினும் சிறந்ததாகக் கூறப்படும். இன்று ஆங்கில மொழியில் ஏற்பட்டுள்ள இலக்கிய நூற் பெருக்கத்தாலேயே அம் மொழிக்கு முற்பட்ட பிற ஐரோப்பிய மொழிகளனைத்தினும் அஃது சிறந்ததாகப் பாராட்டப்படுகிறது. இன்று இந்தியாவில் மக்கள் வழக்கத்தினின்றும் மறைந்திருக்கும் வட மொழிக்குப் பிற மொழிகளைவிட ஒரு தனிச் சிறப்பேற்பட்டிருப்பதன் காரணம் யாது? அம் மொழியில் தோன்றியுள்ள இலக்கிய நூற் செல்வப் பெருக்கினாலன்றோ? வட மொழி (சமஸ்கிருதம்)யில் எண்ணற்ற இலக்கியங்கள் காணப்படுகின்றன! எத்தனை காப்பியங்கள்! எத்தனை சாத்திரங்கள்! எத்தனை நீதி நூல்கள்! எத்தனை ஆராய்ச்சி யுரைகள்! எத்தனை நாடகங்கள்! எத்தனை கீதங்கள்! இன்னு மெத்தனை யெத்தனையோ! அவ் விலக்கியச் செல்வங்களனைத்துமே இன்று வட மொழியை யரண் செய்து காத்து நிற்கின்றனவெனக் கூறல் வேண்டும். இன்றேல் மக்கள் பேச்சு வழக்கற்ற அம்

மொழி சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆரியா வர்த்தத்தில் அடியோடு அழிவுற்றிருக்கு மென்பதற்கு ஐயமில்லை. இதனால் ஒரு மொழியின் வளர்ச்சிக்கே யன்றி அதன் இருப்புக்கும் அம் மொழிக்குரிய இலக்கியங்கள் எத்துணை இன்றி யமையாதன வென்பது பெறலாம். ஆகவே ஒரு மொழி குறுகி நின்ற காலத்தில் அம் மொழியில் இலக்கியங்களை யமைத்து அதை வளர்க்க முயன்ற பெரியோர்கள் உலகில் பாராட்டப்பட வேண்டியவராவர். வட மொழியில் காளிதாசர், பாணர் முதலிய பண்டிதர்களும், தென் மொழியாந் தமிழ் மொழியில் சங்கநூற் புலவர்கள், சேக்கிழார், கம்ப நாடர் முதலிய கவியரசர்களும் அவ்வம் மொழியில் உயரிய இலக்கிய நூல்களை யியற்றி அவ்வம் மொழியை வளர்த்திருக்கும் பெருமைதா னென்னே! சமீப காலத்தில் வங்காளி மொழிக்கு வித்யா சாகரரும், தெலுங்கு மொழிக்கு வீரேச லிங்கமும் இலக்கியச் செல்வங்களை யீட்டி யுபகரித்தமையாலேயே இன்று வங்காளமும், தெலுங்கு நாடும் இந்தியாவில் இத்துணை முதன்மை யடைந்து விளங்குகின்றன. காலத்திற் கேற்பச் சமீபத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உழைத்து நமக்குப் பேருதவி புரிந்த ஆறுமுக நாவலர், பரிதிமாற் கலைஞர் முதலிய தமிழ்ச் செல்வர்கள் தமிழர்களால் போற்றப்படுகின்றன ரன்றோ? அது போலவே பஞ்ச திராவிட மொழிகளி லொன்றாகிய மலையாள மொழிக்கு இலக்கியச் செல்வத்தினைக் கொடுத்து அம் மொழிக்கு உயரிய சிறப்பை யுண்டாக்கித் தனிப் பெருமை பெற்ற மலையாள மா பெருங் கவிஞராம் துஞ்சத் தெழுத்தச்சன் அவர்கள் மலையாள மக்களால் இன்று போற்றிக் கொண்டாடப்படுகின்றார். உயர் குலத்திற் பிறந்த மக்களுக்கே கல்விச் செல்வம் வாய்க்கிற தென்பதும், அவர்களுக்கே மதி நுட்பம் உரிய தென்பதும் நம் நாட்டில் நிலவிய ஓர் அபிப்பிராயமாகும். அஃது தவறான தென்பதற்கு எடுத்துக் காட்டாகவும் நம் துஞ்சத் தெழுத்தச்சன் அவர்களைக் கூறலாம். அவர் மலையாள மொழியில் மகா கவியென மலையாள மக்களால் என்றும் மதித்துப் போற்றப் பெறும் பேறு பெற்றுள்ளார். அதனாலேயே "எழுத்து + அச்சன்" என்ற காரணப் பெயரால் அவர் விளங்குகிறார். அவரது உண்மைப் பெயர் இராமாநுஜன் என்பதைக் கேட்பவர்கள் வியப்புறாமலிரார். அந் நாட்டு வழக்கப்படி தம் குடிப் பெயராகிய (வீட்டுப் பெயர்) துஞ்சம் என்ற பெய



ரோடு 'துஞ்சத்து இராமாநுஜன்' என்றே ஆதியில் அவர் அழைக்கப்பட்டார். எனினும் நாளடைவில் அவர் மலையாள மொழியின் மாண்புக்குழைத்த மகத்துவத்தால் "எழுத்து + அச்சன்" எனவே இலக்கியத்திற்குப் பிதா என்ற காரணப் பெயர் பெற்றுத் "துஞ்சத் தெழுத்தச்சன்" என்று அழைக்கப்படலானார். பிற் காலத்தில் அவரது காரணப் பெயரன்றி உண்மைப் பெயர் வழக்கில் மறக்கப்படலாயிற்று. அத்தனைப் பெருமை யுற்ற மலையாளக் கவியரசரின் சரித்திரச் சுருக்கத்தினை "பாரதி"யின் வாசகர்களுக் கிங்குத் தருகின்றோம்.

## பிறப்பும் கல்வியும்

நம் நாட்டின் முற் கால வழக்கப்படியே துஞ்சத் தெழுத்தச்சன் அவர்களுடைய சரித்திரமும் அவர் காலத்தில் எழுதப்படாமையால் நாட்டில் கர்ண பரம்பரையாக அவரைப்பற்றிய கதைகள் பலவாறு வழங்கி வருகின்றனவே யன்றி, அவரது காலமும், இடமும், வரலாறுகளும் நிர்ணயமாக அறியச் சாத்தியமில்லாம லிருக்கின்றன. எனினும் அறிஞர் பலர் ஊகித்து நிர்ணயித்தவாறே நாமும் கூறுவாம். அவர் இற்றைக்குச் சுமார் முன்னூற் றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மலையாளத்தில் திருவப் பாண்டி யென்கிற ஊருக்குச் சமீபமான திருக்கணியூரிற் பிறந்தார். அவரது தந்தை ஒரு நம்பூதிரிப் பிராமணரெனவும், தாயார் எண்ணெய் ஆட்டும் ஒரு வாணியப் பெண்ணெனவுங் கூறப்படுகிறது. எனவே அவர் ஒரு தாழ்ந்த குலமென்பதிற் பிறந்தாரெனத் தெரிகிறது. ஆயினும் அவர் சிறு வயதிலேயே புத்தி நுட்பமும், விவேகமும் வாய்ந்து கண்டோர் யாவரும் அதிசயிக்கும் வண்ணம் நடந்து வருவாராம். இள வயதிலேயே பள்ளிக்குச் சென்று வட மொழி, தென் மொழி (மலையாளம்) ஆகிய இரு மொழிகளையுங் கற்கப் புகுந்தார். விரைவில் அம் மொழிகளில் போதிய அனுபவம் பெற்று உயர்தரக் கல்வியைக் கற்க விரும்பினார். தக்க ஆசிரியர்களை யடுத்துக் காவியம், அலங்காரம், நாடகம், சரித்திரம் முதலிய கலைகளைக் கற்க முற்பட்டார். அக் காலத்திற் றேர்ந்த பண்டிதரெனத் திகழ்ந்த பாலராம நம்பூதிரி என்ற ஆசிரியரிடத்தில் மாணவராக வமர்ந்து காவியங்கள் கற்றுத் தேர்ந்தார். நாராயணீயமென்ற பெருங் காப்பிய மியற்றிப் புகழ் பெற்ற மேம்பத்தூர் நாராயண

பட்டேத்திரியை அடைந்து அவரிடத்தில் தத்துவ சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலியவற்றைக் கற்று ஞானோபதேசம் பெற்றுப் பண்டிதராயினார். பிற் காலத்தில் எழுத்தச்சன் அவர்கள் இயற்றிய நூல்களில் ஆங்காங்கே பல விடங்களில் இவ் விரு ஆசிரியர்களையும் துதித்துப் பாடியுள்ளார். அவ்வாறு அவர் தமது கல்விப் பயிற்சியை முடித்துக்கொண்டு, தம்மூர் வந்து சேர்ந்தார்.

## உத்தியோகமும் உழைப்பும்

அவர் வீடு வந்து சேர்ந்தவுடன் அருகாமையில் ஒரு பாடசாலையைத் துவக்கி நடத்த ஆரம்பித்தார். அப்பொழுது பள்ளிச் சிறுவர்களுக்காக வேண்டி பாலபாடமாக மலையாளத்தில் கணபதி ஸ்தவம், சரஸ்வதி ஸ்தவம், கணபதி யஷ்டகம், சரஸ்வதி யஷ்டகம், முகுந்தாஷ்டகம், மங்களாஷ்டகம் முதலிய பாடல்களைப் புதிதாகப் பாடி அவற்றைக் குழந்தைகளுக்குப் பாடங்களாகக் கற்பித்து வந்தார். சாதி வித்தியாசங்களின்றி குழந்தைகள் பலரும் அவரது பள்ளியிற் சேர்ந்து ஊக்கத்தோடு படிக்க முற்பட்டனர். இயல்பாகவே சாதிப் பூசல்களுக்கும், சாதிக் கர்வங்களுக்கும் நிலைக்களனாகிய மலையாளத்தில் வகுப்புத் திமிர் படைத்த நம்பூதிரிப் பிராமணர்களிற் பலர், சூத்திர குலத்திற் பிறந்த எழுத்தச்சன் உயர்தரப் பண்டிதனா யிருப்பதைக் கண்டு வயிறெரிந்ததோடு, மேலும் அவர் பல சூத்திரக் குழந்தைகளுக்குப் பள்ளியில் கல்வி கற்பிக்க ஆரம்பித்ததால் அவரை வெறுத்துப் பகைக்க முற்பட்டனர். அதனால் நம்பூதிரிப் பிராமணர்கள் அவருக் கிழைத்த கொடுமைகள் பலவாம். நம்பூதிரிப் பிராமணனொருவன் ஒரு நாள் அவரது பள்ளிக் கருகாமையில் செல்லுகையில், அவர் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கும் ஓசையைக் கேட்டு மனம் பொறாதவனாகி, அவரது எண்ணெய் ஆட்டும் குலப் பிறப்பைக் குறிப்பிட்டு இகழக் கருதியவனாய், "அடே துஞ்சா! இங்கே எவ்வளவு ஆடும்?" என்று கேட்டனனாம். அதற்கு எழுத்தச்சன் தமது வித்தியா சாலையில் நான்கு வேதங்களும், ஆறு சாஸ்திரங்களும் கற்பிக்கப் படும் என்ற கருத்தை யடக்கி, "இங்கே நாலும் ஆறும் ஆடும்" என்று விடை யிறுத்தாராம். அவ்வாறு நம்பூதிரிகள் அவர்



மீது பகை கொண்டு வந்து நாளடைவில் அவரை யொழிக்கக் கருதி மரந்திரீகத்தால் அவர் மீது பல ஏவல்களை ஏவினாராம். அதனால் ஒரு விதப் பைத்தியம் அவருக் குண்டாகவே அது காலை அவரது தந்தையாரின் யோசனைப்படி மதுபானம் செய்ய முற்பட்டு அப் பைத்தியத்தை யொருவாறு தகைந்து கொண்டாராம். எனவே அவர் மரணம் வரையில் மதுபானத்தைக் கைக் கொண்டிருந்தா ரெனக் கூறப் படுகிறது. மற்றுஞ் சில அறிஞர்கள் சாக்த மதப் புலவர்களின் சகவாசத்தால் அம் மத வழக்கப்படி மது பானத்தை எழுத்தச்சன் அவர்கள் கையாண்டு வந்தா ரெனக் கருது கின்றனர். மேலே கூறியவாறு நம்பூதிரிப் பிராமணர்கள் பலர் அவரைப் பகைத்து வந்தன ராயினும் உதார குணம் படைத்த நம்பூதிரிப் பிராமணர்கள் சிலர் அவர் மீது அன்பு கொண்டு அவரது கல்வி யறிவின் ஆற்றலுக்கு மகிழ்ந்து அவரது நண்பர்களா யிருந்து வந்திருக்கின்றனர். மேலும் அவரது ஆசிரியர்களா யிருந்து கல்வி கற்பித்த இரு பெரும் பண்டிதர்களும் நம்பூதிரிப் பிராமணர்களே யாவர்.

## காவிய மியற்றிக் கனமடைதல்

எழுத்தச்சன் அவர்கள் தமது இருபதாவது வயதில் முதலாவதாகச் சிவ புராணம் என்ற பெரும் நூலினை மலையாளத்தில் பாடினார். அஃது வட மொழியிலுள்ள சிவ புராணத்தின் மொழிபெயர்ப்பாக விருப்பினும், மலையாளத்தில் பக்தி மார்க்கத்தைப் பிரதி பாதிக்கும் ஓரரிய நூலாகத் திகழ்கிறது. மேலும் அவர் தேவீ மகாத்மியம், ஸ்காந்த புராணம் என்ற இரு பெரும் வட மொழி நூல்களையும் சுருக்கி மலையாளத்தில் பாடி வெளியிட்டார். நாளடைவில் அவர் மலையாளத்தில் எண்ணற்ற பாடல்களைப் பாடி வந்திருக்கிறார். மேலும் தமது முப்பதாவது வயதுக்கு மேல் அவர் அத்யாத்ம ராமாயணக் கிளிப் பாட்டென்னும் ஓரரிய காப்பியத்தை யியற்றினார். அதனாலேயே அவரது புகழ் மலையாள நாடெங்கும் பரவலாயிற்று. அந் நூலில் அவர் காட்டியுள்ள சொல்லழகும், விஷயப் பொலிவும், கல்வித் திறமும் தெவிட்டாத அமுதமாக விருப்பதை இற்றைக்கும் மலையாள மொழி யுணர்ந்த அறிஞர்கள் பருகி யானந்திக்கின்றனர். எழுத்தச்சன் அவர்களது ஆசிரியராகிய நாராயண பட்டேத்திரி யவர்கள் அக்

காலத்தில் அம்பலப் புழையில் அரசு செலுத்தி வந்த செம்பகச்சேரி யரசனுடைய அவைக் களத்தில் ஆஸ்தான வித்வானாக இருந்து வந்தாராம். ஒரு நாள் அவ்வரசனது அவைக்களத்திற்கு வாரணாசி (காசி)யி னின்றும் வந்திருந்த வைதிகப் பிராமண ரொருவர் வடமொழியிலுள்ள அத்தியாத்ம ராமாயணத்தைப் படித்துக் காட்டினாராம். அதன் அருமை பெருமைகளை யுணர்ந்த அவ் வரசன் அவ் வத்தியாத்ம ராமாயணத்தைத் தமது பாராயணத்திற்காக மலையாள எழுத்தில் பெயர்த் தெழுதிக் கொடுக்கும்படி தமது ஆஸ்தான பண்டிதராகிய நாராயண பட்டேத்திரியிடம் கொடுத்தாராம். அதை அப் பண்டிதர் தமது சீடராகிய எழுத்தச்சன் அவர்களிடம் கொடுத்து மலையாள எழுத்தில் பெயர்த் தெழுதுமாறு பணித்ததோடு, தமது சீடன் ஆற்றல் விளங்க அந்நூலை மலையாள மொழியில் கிளிப்பாட்டாகப் பாடும் படியும் உத்தரவிட்டாராம். அதுவே காரணமாகக் கொண்டு நமது எழுத்தச்சன் அவர்கள் அத்தியாத்ம ராமாயணக் கிளிப் பாட்டென்னும் பெருங் காப்பியத்தைச் சின்னாட்களுக்குள் பாடி முடித்து அரசன் திருமுன் சேர்த்தனராம். அந் நூல் வட மொழி நூலின் மொழி பெயர்ப்பாகச் சொல்லப்படுகிறதே யன்றி உண்மையில் அஃது வட மொழி நூலின் கதையை யாதாரமாகக் கொண்டு சுதந்திரமாக இயற்றிய பெரும் நூலெனவே அறிஞர் கூறுகின்றனர். மேலும் அஃது இன்றும் மலையாள மொழிக்கே தலைமையான காவியமாகப் பாராட்டப் படுகிறது. எனவே பொருள் நயமும், சொல் நயமும், புதிய கற்பனைகளும் செறிந்து நிற்க, நவரச அலங்காரங்களோடு பாடி முடிக்கப் பெற்றிருந்த அவ் வரிய நூலினைக் கண்ணுற்ற செம்பகச்சேரி யரசர் அவ் வெழுத்தச்சனை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டிப் பல பரிசுகளை யளித்து ஆதரித்தாராம். அதனால் கவிஞரின் பெயரும் புகழும் முன்னிலும் பன்மடங்கு ஓங்கி யொளி வீசலாயின. அதைக் கேள்வியுற்ற கள்ளிக்கோட்டை யரசர் முதலிய பிற அரசர்களும் அவரைத் தங்கள் சபைகளுக்கு வரவழைத்து அவரது புலமைத் திறத்தை நேரிற் கண்ணுற்றுப் பல பரிசுகள் வழங்கி யுபசரித்தனர். அவ்வாறு அரச சபைகளின் ஆதரவு பெற்று வந்த நம் கவிச் சக்கிரவர்த்தியார் மேன்மேலும் பல காவியங்களை யியற்றி மலையாள மொழி நங்கைக்கு அழகு செய்வதானார். வட மொழியிலிருந்து பாரதம், பாகவதம் வேதாள சரித்திரம்

போன்ற பல நூல்களையும் மொழி பெயர்த்து மலையாள மொழி இலக்கியச் செல்வத்தை மேன்மேலும் வளர்த்து வரலானார். அவராலேயே முதலில் மலையாள மொழியில் வட மொழிச் சொற்கள் விரிவாகக் கலந்து வழங்க முற்பட்டன. மொழி பெயர்ப்புகளே யன்றிச் சுதந்திரமாகவும் பல நூல்களை யியற்றியுள்ளார். அவற்றுள் சிந்தாரத்ன மென்னும் வேதாந்த நூல் முதலியனவும் அடங்கும். அவர் பக்திச் சுவையிற் பாடியுள்ள ஹரி நாம கீர்த்தனம், இராமாயண இருபத்து நான்கு விருத்தம் முதலிய பாடல்களும் வெகு இனிமையானவையாம். அவற்றிற் சில பாட்டுகள் நம்பூதிரிப் பெண்கள் கொண்டாடும் திருவாதிரைக் களியென்னும் ஒரு வகைக் குரவைக்கூத்திற் கேற்றவிதமாகப் பாடியிருக்கிறாராம்.

## புலவர்கள் நட்பு

முற்காலத்திற் கற்றுணர்ந்த புலவர்கள் ஒருவர்க்கொருவர் பொறாமைகொண்டு ஒற்றுமை யின்றி வாழ்ந்து வந்தார்களென்றே கதைகளில் படிக்கின்றோம். ஆனால் நமது எழுத்தச்சன் அவர்களோ அப்படி நடந்தவரன்று. அக் கவிச் சிரேட்டரின் புலமைத் திறத்தின் புகழைக் கேள்வியுற்ற பண்டிதர்கள் பலரும் அவரது நட்பை நாடி அவரைத் தேடி வருவார்கள். அவ்வாறு வரும் புலவர்கள் பலரிடத்தும் அவர் சற்றுங் கர்வமற்றவராய் அன்போடு அவர்களுடன் அளவளாவி நட்புப் பாராட்டுவார். இக் காலத்திற் பெரிய உத்தியோகஸ்தர்களின் தயவால் ஒரு கலாசாலையில் பண்டிதரா யமர்ந்த ஒருவர், (எனவே ஒரு ஸ்தாபனத்தில் சம்பளம் பெறும் வேலை) உத்தியோகம் பெறாத சாதாரண பண்டிதர்களை மதிக்காமல் அவர்களிடத்து நடந்துகொள்ளும் மாதிரியைக் கவனித்திருப்பவர்கள், அக் காலத்தில் ராஜ சபைகளில் சன்மானங்கள் பெற்றுப் பெயரும் புகழும் ஆற்றலும் வாய்ந்து விளங்கிய எழுத்தச்சன் அவர்கள் பிற புலவர்களிடத்துச் சாமானியராய் அன்போடு அளவளாவி நின்றாரென்பதைக் கேட்டு வியப்புறாமலிருக்க முடியுமோ? அக் காலத்தில் திருவல்லா கண்ணச்சப் பணிக்க ரென்னும் ஒரு பண்டிதர் எழுத்தச்சன் அவர்களைக் காணவேண்டுமென்னும் விருப்பத்தைப் பல நாள் கொண்டிருந்தாராம். எனினும் அவருக்குச் சாவகா

சம்—எனவே அவரிருப்பிடத்திற்குச் சென்று காணும் சந்தர்ப்பமில்லாமலிருந்தது. ஒரு முறை ஆலவாய் என்ற ஊரிலுள்ள சிவாலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி உற்சவத்தின் போது அங்குக் குழுமி அவ்விரவை ஆற்றங்கரை மணலிற் றங்கிக் கண் விழித்துக் கழிக்க முற்பட்ட ஏராளமான மக்கள் கூட்டத்தினிடையில், நமது எழுத்தச்சன் அவர்கள் வந்திருக்கிறாரென்ற செய்தியை ஆங்கு சென்றிருந்த ஷை பண்டிதப் பணிக்கர் கேள்வியுற்று, அக் கும்பலில் அவரைக் காணத் தேடிச் சென்றாராம். அவ்வாறு ஜனக் கூட்டத்தினிடையில் அவர் புகுந்து செல்லுகையில் தமது கால்கள் யார்மீதேனும் பட்டால் கோபித்துக்கொள்ளலாகாதென்ற குறிப்புக்காக வேண்டி "கால் பட்டால் குரு பாதமென் றெண்ணுங்கள்" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே ஜனக் கும்பலினிடையில் புகுந்து சென்றுகொண் டிருந்தாராம். அப்பொழுது ஓரிடத்தில் பணிக்கர் ஷை வாக்கியத்தைச் சொன்னவுடன் அங்கிருந்த ஒருவர் கால் பட்டதன் காரணமாக யாராவது அடித்தாலும், வைதாலும் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்ற குறிப்பாக "திரும்பித் தருவதைக் காணிக்கையாகவும் எண்ணுங்கள்" என்று கூறினாராம். அவ்வாறு கூறியவரே எழுத்தச்சன் அவர்கள் என்பதை யறிந்த பண்டிதப் பணிக்கர், அவரை யணுகித் தமது வரலாற்றைக் கூற ஒருவர்க்கொருவர் சந்தோஷித்து நட்புக் கொண்டு தழுவிக் கொண்டனராம். அவரைப்பற்றிய இது போன்ற சிறு கதைகள் பல மலையாளத்தில் வழங்குகின்றன.

## தனிமையும் முடிவும்

எழுத்தச்சன் அவர்களுக்கு விவாகம் நடைபெற்று ஒரு புத்திரி பிறந்திருந்தாளெனவும், அவ் வம்மையும் கல்வியில் தேர்ச்சி யடைந்து தன் தந்தை பாடிய பல நூல்களையும் தன் கையாலேயே எழுதி வந்தாளெனவும் தெரிகிறது. மலையாள மொழிக்கு இலக்கியச் செல்வத்தினைத் தந்தருளி அம் மொழி மங்கையை யழகுபடுத்தி, அவளைப் பிற மொழி மங்கையரிடையில் ஓர் அரியாசனத்தில் அமர்த்தி உலகில் ஒளிரச் செய்த நம் மலையாளக் கவியரசராம் துஞ்சத் தெழுத்தச்சன் அவர்கள் தமது பிற்காலத்தில் நம்பூதிரிப் பிராமணர்கள் இடைவிடாது செய்து வந்த இன்னல்களை முன்னிட்டு அந் நாட்டையே விட்டகலக் கருதிய



# கொரியாவின் சுதந்திர எழுச்சி.

ஸ்ரீமான் ஸி. ஏ. பெருமாள் அவர்கள்.



வாயிரம் வருடங்களாக நாகரீகத்தில் முதன்மை பெற்று விளங்கிய கொரியா தேசம் 1905-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இருபத்தி மூன்றாம் நாள் ஜப்பான் தேசத்தின் அதிகார ஆட்சி முறைமைக்கு இலக்காகியது. ருஷியா—ஜப்பானியப் போர், சர்வ சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்த பழம் பெரும் கொரியா நாட்டை ஜப்பானுக்கு அடிமைப்படச் செய்தது. அந்தோ! அந்நாள் முதற்கொண்டு ஒரு குற்றமுமறியாத கொரியா நாடு, ஆதிக்க வலிவும் அதிகாரச் செருக்கும் ஒருங்கமைந்த "கிழக்குப் பிரித்தானியம்" என்று சொல்லப்படும் ஜப்பானின் இராணுவ பலத்தின் கீழ் பட்டுப் பாடெல்லாம் பட்டுழல்கின்றது.

---

வரிய் கண்டியில் கள்ளிக்கோட்டை யரசரின் ஆதரவைக் கொண்டு பாலக்காட்டுச் சேரியை யடைந்து தெக்கேப்புழை என்னும் நதிக்கரையிலிருந்த புழைக்கல் என்ற கிராமத்தில் கோவில்கள், மடங்கள் சிலவற்றை யேற்படுத்திக்கொண்டு சந்நியாசியாக அங்கே சின்னாள் வாழ்ந்திருந்து நற்பதவி யெய்தினார். நமது தமிழ்க் கவியரசராகிய சுப்பிரமணிய பாரதியார் உயிரோ டிருக்கையில் அவருடைய பெருமையைத் தமிழுலகம் அறிந்து அவரை யாதரிக்கவில்லை. ஆங்கில மொழிக்கு அழகு கொடுத்த ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலக் கவியரசரை ஒரு காலத்தில் ஆங்கிலேய தேசம் நாடு கடத்த முற்பட்டது. இவ்வாறு பண்டிதர்கள் பலரும் உயிரோ டிருக்கையில் உலகத்தோரால் மதிக்கப்படாமற் போயினும், அவர்கள் தங்கள் மொழிகளுக்குச் செய்துள்ள அரிய ஊழியத்தால் அவர்கள் உலகில் மறைந்த பின்னர் உலகம் அவர்களின் அருமை பெருமைகளை யுணர்ந்து பாராட்டுகிறது. அப்படியே இன்று துஞ்சத் தெழுத்தச்சன் அவர்களின் பெயர் மலையாளம் முழுமையுமே நம்பூதிரிகளாலும் போற்றப்படுவதாயிருக்கிறதென்பதில் அதிசயமொன் றில்லை.

கொரியா தேசம் சீனாவைச் சேர்ந்த மஞ்சூரியாவின் கீழ் பாகத்தில் 600 மைல் நீளமும், 135 மைல் அகலமும், ஏகதேசம் 85,156 சதுர மைல் பரப்பளவுங் கொண்டு ஜப்பானியக் கடலை நோக்கி எண்ணிறந்த தீவுகளோடு அமைந்து கிடக்கும் ஓர் அழகிய தீபகற்பமாகும். இந் நாடு நீர் வளம் நில வளமும் நேர்பட அமையப்பெற்றது. சீதளம் சிறந்தும் கதிரவன் உஷ்ணம் குறைந்தும் விளங்குவது. பருத்தி, புகையிலை, நெல் ஆகிய விவசாயப் பொருள்களும் பொன் இரும்பு நிலக்கரி ஆகிய உலோகப் பொருள்களும் மலிந்து விளைவதால் மக்களின் பொருளாதாரத்திற்கு இங்கு யாதொரு குறையும் நேரிடுவதில்லை. இந் நாட்டின் ஜனத்தொகை 1,95,19,927 பேர். ஜப்பானிலிருந்து வந்து குடியேறியவர்களின் தொகையோ 3,86,493 (Whitaker's Almanack 1930 Page 804). எனவே செல்வச் செழிப்பும் சீதோஷ்ண நிலைமையின் சீரிய சிறப்பும் செவ்வனே அமையப்பெற்ற கொரியா நாடு, அதிகாரத் திமிர் கொண்ட ஓர் அந்நிய ஆட்சிக்கு ஆட்பட்டது உண்மையில் ஆச்சரியமன்று. ஜப்பான் இதற்கு மிகச் சமீபத்திலிருப்பதால் களங்கமற்ற கொரியாவை இலகுவில் கௌவிக் கொண்டது.

## ஜப்பானின் பராமரிப்பு

ஜப்பான் தனது நாட்டுப் பாது காவலுக்கென கொரியா தேசத்தைத் தன் கைவசப் படுத்தியதென்று 1905-ம் வருடத்தில் நிறைவேறிய "போட்ஸ்மௌத்," உடன்படிக்கை கூறுவதாகும். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல ஜப்பான் தனது சுய நல எண்ணங்களுக்காகவும் சுக போக வாழ்விற்காகவும் கொரியாவை மனம்போல் சூறையாடத் துணிந்து, நாட்டையும் நாட்டு மக்களின் தேசீய உணர்ச்சியையும் கெடுத்துவிட்ட தென்பது அதன் அரசாங்க நடை முறைகளிலிருந்து வெளிப்படுகின்றது. கொரியா மக்களும் இந் நுட்பம் அறிந்துகொள்ளவே தனது நாட்டை ஜப்பானின் நின்றும் விடுவிக்கும் பொருட்டுப் பலவித உபாயங்களைத் தேடுவாராயினர். தேசமெங்கும் இரகசிய சங்கங்களும் இராணுவ வீரர்களின் கழகங்களும் அமைத்து ஜப்பான் அரசாங்கத்திற்கு விரோதமாகப் பெருங் கிளர்ச்சிகள் செய்து பார்த்தனர். பார்த்தும் பலம் பொருந்திய ஜப்பானிடம் தமது காரியம் பலிக்கவில்லை. அப்பால் ஜப்பானிய ஸ்தானாதிபதியாக விருந்த இளவரசர் "இற்றோ" என்பார் சதியாலோசனைக் கூட்டத்தாரால் கொல்லப்பட்டதும், ஜப்பான் கடுங் கோபம்கொண்டு 1910-ம் ஆண்டு முதல் தனது இராணுவ ஆட்சி முறையை அந் நாட்டில் நிலைநாட்ட முயன்றது. மனிதர் விரும்பத் தகாத அடக்கு முறைகளையும் அதிகாரத் தோரணைகளையும் பிரயோகித்து அந் நாட்டு மக்களை அடாது செய்து படாது படுத்தி இந் நாள் வரையும் அரசியலில் அம்



மக்களுக்கு யாதொரு வாக்குச் சுதந்திரங் கூடக் கொடாது மடக்கி வைத்திருக்கிறதென்றால், ஜப்பான் கொண்டுள்ள அதிகாரச் செருக்கை என்னென்று சொல்வது?

## அடக்குமுறை அநீதங்கள்

ஆகவே கொரியா, ஜப்பான் அரசாங்கத்தின் கோபத்திற்கு ஆளாகிவிட்டது. ஜப்பானும் அத் தேசத்தில் மிக இழிவான அரசியல் முறைகளைக் கையாளச் சிறிதேனும் தயங்கவில்லை. அரசாங்கத்தின் குறைகளைப்பற்றிக் கூறுவதற்கும்கூடக் கொரியா மக்கள் விதி யிழந்துவிடலானார்கள். மக்களின் பொதுக் கூட்டங்கள், பொது ஸ்தாபனங்கள் யாவும் சட்ட விரோதமெனத் தடுக்கப்பட்டன. மத சம்பந்தமான கூட்டங்கள் கூட வேண்டுமாயின் இடம், காலம், பேசப்படும் விஷயம் ஆகிய யாவும் குறிப்பிடப்பட்டு போலீஸ் அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டுமென்ற நியதி ஏற்படுத்தப்பட்டது. கொரியாவிலுள்ள கிறிஸ்தவ சமயாச்சாரிகளும் தங்கள் சாதாரணக் கூட்டங்களைக் கூட்டுவிப்பதற்கும் போலீஸ் அனுமதி பெறக் கட்டாயப் படுத்தப்படலானார்கள். கொரீயர்கள், என்ற பொழுதெல்லாம் ஜப்பானியர்களுக்குச் சொல்லொணுக் கோபமும் துவேஷமும் கொழுந்துவிட் டெரிய ஆரம்பித்தன. ஆனால் கொரியா நாட்டில் மட்டும் அவர்களுக்கு வெறுப்புத் தோன்றவே யில்லை. அதனைக் கைவிட மனமும் இசையவில்லை. தேசத் தலைவர்களும் தேசாபிமானிகளும் போலீஸ் அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டுப் பெருங் கொடுமைகளுக்கு ஒவ்வொரு நாளும் ஆளாகி வந்தனர். அந்நிய தேசங்களிலிருந்து வந்த கிறிஸ்தவ பாதிரிமார்களும் குருமார்களும் கொரியாவின் இலக்கியங்களிலும் கலைக்கியானங்களிலும் பற்றுடையவர்களா யிருப்பது கண்டு, அவர்களில் அநேகரை அரசாங்கக் குற்றத்திற்காளாக்கிச் சிறைப்படுத்தி வைத்தனர். இவ்வித முறைகளைக் கைக்கொள்ளவே சிறிது காலத்திற்குள் கொரியாவிலுள்ள தேசீய இயக்கங்கள் தேசீய சங்கங்கள் யாவும் தோன்றியவுடனேயே சட்ட விரோதமெனக் கூறப்பட்டு அழிக்கப்படலாயின. ஆகவே கொரியாவில் பொது மக்களால் நிர்வகிக்கப்படும் அரசியற் சங்கங்கள் ஒன்றேனும் இந் நாள்வரை நிலவி வருவதாகத் தெரியவில்லை.

## கேள்வியுமில்லை முறையுமில்லை

இவ்விதம் அடக்கு முறை அரசாங்கம் போலீஸ் அதிகாரிகளுக்கு அளவற்ற அதிகாரங்களைக் கொடுத்துவிடவே, நாடெங்கும் ஒற்றர்களும் உழவர்களும் மலிந்து தங்கள் மனம்போல் மக்களை வருத்தி வரலானார்கள். பெரும்பான்மை அரசாங்க அனுமதியின்றி, பொறுப்பற்ற போலீஸ் புலிகள் நினைத்திரா வேளைகளில் பரிசோதனை செய்வதற்கெனப் பாசாங்கு செய்து, பெண்கள் வாழும் அந்தப்புரங்களிலும் நுழைந்து படு மோசங்கள் செய்து வந்தனர். மக்களுக்கு இவ் வனி

யாயங்களை வெளியிடுவதற்கும் விதியில்லை. முறையிட்டாலும் கேட்பாரில்லை. பாதுகாவலுக்கென நியமிக்கப்பட்டிருக்கும் போலீஸ்பதர்களே இப் பாதகத் தொழில் புரிந்தால் வேறு யாரிடம் முறையிட்டுக்கொள்வது? தவிரவும் அரசாங்கம், மக்களின் சிறு வழக்குகளை விசாரிப்பதற்குப் போலீஸ் கோர்ட்டுகளையே நியமித்திருந்ததால், போலீஸ்காரர்களுக்கு விரோதமாகக் கொண்டு வரப்படும் வழக்குகள் யாவும் மக்களுக்குப் பாதகமாகவே முடிகிறதன்றி உண்மைகள் வெளிப்படுவது மிகவும் அருமையாகிவிட்டது. கொரியா அரசாங்க அறிக்கை 1916 முதல் 1917-ம் ஆண்டுவரை போலீஸ் கோர்ட்டுகளில் தொடரப்பட்ட 82121 வழக்குகளில் 81139 சிறைவாசக் குற்றத்திற்கும் 952 மன்னிப்புக்கும் 30 நிரபராதத் தன்மைக்கும் இலக்காகியதென வெளியிட்டிருக்கிறது. இதிலிருந்து மக்கள் கோர்ட்டுகளிலும் நியாயம் கிடையாது, வழக்குகளில் பெரும்பாலும் தோல்வியே யுற்றனரென்பதும் வெளிப்படையாகும்.

## பத்திரிகைகளின் நிலைமை

ஆகவே நீதி கிடையாது தவிக்கும் கொரியா மக்கள், தங்கள் துன்பங்களையும் துயரங்களையும் மிகப் பொறுமையுடன் சகித்துவரலானார்கள். உண்மை நிலையை உலக மக்களுக்கு எடுத்தோதுவதற்குக்கூடச் கொரியாவில் அம் மக்களுக்குச் சொந்தமான பத்திரிகைகள் கிடையாது. 1916-ம் ஆண்டில் கொரியாவில் இருபது பத்திரிகைகளே இருந்தனவென்றும், அவைகளிலும் பதினெட்டு ஜப்பானிய பாஷைகளிலும், ஒன்று ஆங்கிலத்திலும், மற்றொன்று அரசாங்க ஆதரவில் கொரியா பாஷையிலும் வெளியிடப்பட்டனவென்று அரசாங்க அறிக்கையிலேயே கூறப்பட்டிருக்கிறது. ஜப்பானிய அரசாங்கம் கொரியா பாஷையை அழிப்பதற்கும் கொரியா இலக்கியச் செல்வங்களை நாசமாக்குவதற்கும் கொரியர்களின் உண்மை நிலையை உலகமறியாது மறைத்து வைப்பதற்குமே கருதிக்கொண்டு தேச பாஷைப் பத்திரிகைகளை வெளியிட மறுத்ததென்று சொல்லப்படுகிறது. எவ்விதமாயினும் கொரியா மக்கள் இக்கொடுமையைப் பொறுக்க இயலாது இராக் காலங்களில் இரகசியமாகப் பத்திரிகைகளை அடித்துப் 'போஸ்டாபீஸ்' உதவியின்றி நாடெங்கும் ஒருவருக்கொருவர் பரப்பி வருவதில் மிகுந்த ஊக்கங் காட்டி வந்தனர். இந் நிலைமையைக் கண்ட போலீஸ் அதிகாரிகள், தேசமெங்கும் ஆயிரக் கணக்கான ஒற்றர்கள் நியமித்துப் பத்திரிகாசிரியர்களைக் கைது செய்வதற்குத் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தலுற்றார்கள். பத்திரிகாசிரியர்களோ ஓடி மறைந்து தங்கள் உயிர்களுக்கு ஆபத்து வருவதையும் கவனியாது மிகத் தைரியமாக இடம்விட்டு இடம் பெயர்ந்து பத்திரிகைகளைக் கள்ளத்தனமாக வெளியிட்டு வரலானார்கள்.



## இராஜ நிந்தனை வழக்குகள்

இவ்விதம், எவ்வளவு காலம் மறைந்து வெளியிட முடியும்? சிறிது காலத்திற்குள் அரசாங்கம், இரகசிய வெளியீடுகள் யாவற்றையும் பறிமுதல் செய்துவிட்டது. ஆசிரியர்கள் பிடிக்கப்பட்டுப் பெருந் துன்பங்களுக் காளாகினார்கள். பெரும்பான்மை வழக்குகளின்றியே தேசத் தலைவர்கள் சிறை புகுத்தப்படலானார்கள். சாதாரண மக்கள் பேரிலும் ஜப்பானிய அரசாங்கம், ராஜ நிந்தனை வழக்குகள் தொடர்ந்து குற்றப்படுத்திவரும் விபரங்களை ஸி. டப்ளியூ. கென்டால் என்னும் ஓர் ஆசிரியர், தாம் எழுதிய "கொரியாவைப்பற்றிய உண்மைகள்" என்ற நூலில் மிகத் தெளிவாக விவரிக்கிறார். அவைகளி லொன்றை புரொபஸர் என். என். கோஷ் அவர்கள் மாடர்ன் ரெவியூவில் (Modern Review 1929 August) கையாண்டுள்ளதைக் கீழே தருகிறோம்.

'பிங்யாங் என்னுமிடத்திலுள்ள "கில்" பாதிரியார் சிகரட் குடிக்கும் கொடிய வழக்கத்தைப்பற்றிச் சிறு பிள்ளைகளுக்கு உபதேசித்துப் பிள்ளைகளைத் தடுத்து வந்தார். அரசாங்க அதிகாரிகள் இவ் வுபதேசம் செய்த 'கில்" பாதிரியார் பேரில் இராஜ நிந்தனை வழக்குத் தொடர்ந்தார்கள். வழக்கின் விவரம் வருமாறு:— கில் பாதிரியார் சிகரட் குடிக்கும் வழக்கத்திற்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார். 'சிகரட் தொழிற்சாலைகள் யாவும் அரசாங்கத்தைச் சேர்ந்தது. அதனை உபயோகிக்கக் கூடாதென்று கூறுவது அரசாங்கத் தொழிற்சாலைகளுக்குக் கெடுதல் விளைவிப்பதாகும். அரசாங்கத் தொழிற்சாலைகளுக்குக் கெடுதல் விளைவிப்பதென்பது அரசாங்கத்திற்கு விரோதமாக வேலை செய்வதோடு இராஜநிந்தனை. ஆகையால் 'கில்" பாதிரியார் இராஜ நிந்தனையின் பேரில் குற்றவாளியே."

## அரசியல் மாற்றம்

இத்தகைய நீதியும் நியாயமுமே கொரியாவில் 1910-ம் ஆண்டு முதல் பத்து வருட காலம் ஜப்பானிய நாகரீக அரசாங்கம் நடந்தேறியது. அப்பால் 1920-ல் ஜப்பான், கொரியாவைச் சிறிது அனுதாபத்துடன் அரசாளுவதற்கு ஒருப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இம் முறையிலும் அந் நாட்டு மக்கள் கொண்டுள்ள கருத்துக்களை புரொபஸர் கோஷ் அவர்கள் பாகுபடுத்தித் தருவது கவனிக்கத்தக்கது. அதாவது 1. அரசாங்கத்தில் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமல் வரி வசூலித்தல். 2. பத்திரிகைகளுக்கும் பிரசங்கங்களுக்கும் தடை ஏற்படுத்துதல், 3. கொரியா பாஷையை நிர்மூலப்படுத்துவதற்குப் போதிய சிரமம் எடுத்தல், 4. பாரபக்ஷமான கல்வியளித்தல், 5. மத விஷயங்களில் அனாவசியமாகத் தலையிடுதல். 6. போலீஸ் அதிகாரிகளுக்கு அளவற்ற அதிகாரம் கொடுத்தல், 7. கொடூரமான

சட்டங்களைப் பெருக்கி அவைகளை அமுலுக்குக் கொண்டு வருதல், 8. பொது நிலங்களைப் பாழ் படுத்துதல், 9. பொருளாதாரத்திற்குக் கேடு செய்தல், 10. தேசத் தலைவர்களை ஹிம்சித்தல், 11. நீதி நெறியறியாத அரசாங்கத்தின் ஜப்பானிய அதிகாரிகளது இரக்கமற்ற செய்கைகளைக் கவனியாதிருத்தல், 12. சமூகத்திலும் அரசாங்கத்திலும் வகுப்பு வேற்றுமை பாராட்டுதல் ஆகிய இவைகளே 1920-ம் ஆண்டு முதல் கொரியாவில் "சீர்திருத்த முறை" என்று சொல்லப்படும் ஜப்பான் அரசாங்கத்தின் புதிய கொள்கைகளாகும்!

## மாணவர்கள் இயக்கம்

அந்தோ! குடியரசும் பொது வுடைமை யரசும் உலக மக்களது உள்ளத்தில் பதிந்து வரும் இந் நாளில் சுய நலமே பிரதானமாகக் கொண்ட ஓர் அந்நிய நாட்டின் அதிகார அரசாங்கத்தின் கீழ் தனது பண்டைச் சுதந்திரத்தைப் பறிகொடுத்த கொரியா மக்கள், எவ்வளவு காலம் துன்பம் சகித்துச் சமாதானமின்றி வாழ்வார்கள்? சுதந்திரமிழந்த வாழ்வும் ஓர் வாழ்வெனப்படுமோ! கொரியாவில் தேசத் தலைவர்கள் யாவரும் அநீதமாக அடக்கப்பட்டு விடவே சமீப காலத்தில் கொரியாவின் தேசீய உணர்ச்சி திடீரென அந் நாட்டிலுள்ள மாணவர்களிடைப் புகுந்துகொண்டது. அநீதம் பொறுக்க வொண்ணாது ஏற்கெனவே கொதிப்படைந்திருக்கும் கொரியா மாணவர்கள் இப்பொழுது ஜப்பானியர்களை எதிர்க்கும் பொருட்டு ஒன்று சேர்ந்து பெரும் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். சீனாவிலுள்ள ஷாங்கே நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "கொரியா கமிற்றி" இவ் விஷயமாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இதுவரை 78 மாணவர்கள் கொல்லப்பட்டும் ஆயிரக் கணக்கானவர்கள் சிறை புகுத்தப்பட்டு முள்ளார்களெனக் கூறப்படுகிறது. ஜப்பானிலுள்ள டோக்கியோ நகரத்துப் போலீஸ் அதிகாரிகளின் அறிக்கையோ, கொரியாவின் மாணவர் குழப்பம் சென்ற நவம்பர் மாதம் 3-ம் தேதி நடந்தேறிய ஜப்பான் மன்னர் பெருமான் "மீஜி" என்பவரின் பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது கொரியா தேசத்தின் தென் பாகத்திலுள்ள ஓர் ரயில்வே நிலையத்தில் கொரியா மாணவர்களுக்கும் ஜப்பான் மாணவர்களுக்கு மிடையில் நேர்ந்த சிறு வாக்குவாதமே காரணமென்றும், அதில் வியாபாரிகளும் தொழிலாளர்களும் கலந்துகொண்டதால் நாடெங்கும் குழப்பம் உண்டாயிற்றென்றும், ஜப்பானிலும் இது சம்பந்தப்பட்ட 300 மாணவர்களும் தொழிலாளர்களும் சிறை புகுத்தப் பட்டிருக்கிறார்களென்றும் தெரிகிறது. எவ்விதமாயினும் கொரியா குழப்பத்திற்கு ஜப்பானிய அரசாங்கத்தின் அநீத அடக்கு முறைகளே காரணமாகுமென சீனாவிலுள்ள கொரியா கமிற்றியின் அறிக்கையிலிருந்து தெளிவாகப் புலப்படுவது அறியலாம்.



## கொரியா அறிக்கை கூறுவது

மாணவர்களியக்கம் திடீரென வலுப்பட ஏதுவாகி யிருந்த காரணங்களைக் கொரியா அறிக்கை விளக்குவது நன்கு கவனிக்கற்பாலது. கொரியாவில் கலாசாலைகளினுள் தொழிலாளர்கள் எவரும் சொல்லக்கூடாது. ஏழைகளின் பிள்ளைகளும் ஜப்பான் பாஷையை விரும்பாதவர்களும் கலாசாலைகளில் சேர்க்கப்படுவதில்லை. புரட்சி இயக்க சம்பந்தமான கருத்துக்கள் இல்லாமலும் 6000 ரூபாய்க்குக் குறையாத சொத்துடைய பெற்றோர்களின் மக்கள் மட்டுமே நடுத்தரக் கல்வி பெற அனுமதிக்கப்படுகிறார்கள். உயர் குலம் என்று கருதப்படுகிற பிரபுக்களின் பிள்ளைகளாகவும் நாட்டின் சுதந்திர இயக்கத்தில் சேராதவர்களாகவும் இருந்தால் மட்டுமே உயர்தரக் கல்வி பயின்று வரலாம். ஜப்பான் தேசத்தைத் தவிர அந்நிய நாடுகளுக்கு உயர்தரக் கல்வி பெறும் பொருட்டுக் கொரியா மாணவர்கள் ஒருபோதும் செல்லக் கூடாது. கொரியாவில் தற்போது (1929) அரசாங்கத்தின் கீழும் இதர பொது ஸ்தாபனங்களின் ஆதரவிலும் நடத்தப்பட்டு வரும் கலாசாலைகளின் தொகை 2993. இவைகளில் கொரியா மாணவரின் தொகை 4,56,902 அதாவது கொரியா தேசத்து ஜனத்தொகையில் 100-க்கு 2 பங்கெனப்படும். ஜப்பானிய மாணவர்களின் தொகையோ 43,881. அதாவது ஜப்பானிலிருந்து குடியேறிய மக்களில் 100-க்கு 10 பங்காவார்கள். உயர்தரக் கல்வி கொரியா மாணவர்களுக்குப் பலவித காரணங்களையிட்டு மறுக்கப்பட்டும் ஜப்பான் மாணவர்களுக்கு விருப்பமுடன் கொடுக்கப்பட்டும் வருவதால் கல்லூரிகளில் தற்போது 257 கொரியர்களும் 520 ஜப்பானியர்களும் காணப்படுகிறார்கள். பொதுவாக தேசமெங்கும் அளவிற்கு அதிகமான போலீஸ் ஸ்டேஷன்களே காணப்படுகின்றன. உண்மையில் கொரியாவில் கல்விச்சாலை செல்லக்கூடிய மாணவர்களில் 10-க்கு ஒருவர் வீதம்கூடப் படிப்பதற்குப் போதுமான பள்ளிக்கூடங்களில்லை.

## அநியாயத் தடைகள்

கலாசாலை வாசகப் புத்தகங்கள் யாவும் ஜப்பானிய பாஷையிலேயே ஏற்றப்படல் வேண்டும். அவைகளைக் கொரியா மக்கள் எவரும் வெளியிடவோ விற்கவோ கூடாது. கொரியாவின் தலைநகரமாகிய சௌவல் (Souel) என்னுமிடத்தில் அரசாங்கத்தைப் பங்கு சேர்த்த ஓர் ஜப்பானியக் கம்பெனி "கொரியன் பப்ளிஷிங் கோ" என்ற விலாசமிட்டுக் கொரியாவிலுள்ள ஐந்து லக்ஷம் மாணவர்களுக்கும் புத்தகங்கள் வெளியிட்டு வருகின்றது. 1929-ம் வருடம் ஏப்ரல் மாதம் சௌவலிலுள்ள கலாசாலைக் குழு ஒன்று இதனையிட்டு வெளியிட்ட அறிக்கை

யில், இதர புத்தகங்களைவிட வாசகப் புத்தகங்கள் 100-க்கு 10 பங்கு மேலே அதிகமாகக் காண்கிறதென்றும் 'கொரியன் பப்ளிஷிங் கம்பெனி' ஒவ்வொரு ஆண்டிலும் 6 லக்ஷம் ரூபாய் லாபம் பெறுகிறதென்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வீடுகளில் வைத்துக் கல்வி போதிப்பது சட்டப் பிரகாரம் தடுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் ஒவ்வொரு மாதமும் கலாசாலை சம்பளத்தைக் கட்டாயமாகச் செலுத்திவிட வேண்டும். அவ்விதம் கட்டுவதற்குத் தவறிய மாணவர்கள் பள்ளிக்கூடங்களிலிருந்து விலக்கப்படுவதன்றி, கல்விச்சாலை அதிகாரிகள் போலீஸ் உதவிகளுடன் அவர்கள் வீடுகள் புகுந்து பரிசோதிப்பதுமல்லாமல், வரவேண்டும் தொகைக்குப் போதுமான வீட்டுச் சாமான்களை எடுத்து ஏலமிட்டு அத் தொகையை ஈடு செய்து வருகிறார்கள்.

கொரியாவின் தேச சரித்திரம் கலாசாலைகளில் சேர்க்கப்படவில்லை. தேசத்தின் கலைவளர்ச்சிக் கேதுவாகிய எத்தகைய சங்கமோ அல்லது கூட்டமோ கூட வேண்டுமாயின் போலீஸ் அதிகாரிகளின் அனுமதிபெற வேண்டும். சட்டங்களை மீறி மாணவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசவோ அல்லது துண்டுப் பிரசுரங்கள் வெளியிடவோ செய்வார்களாயின் அவர்கள் உடனே கைதியாக்கப்படுகிறார்கள். இது சம்பந்தமாக 1928-ம் ஆண்டு நவம்பர் 10உ கொரியா தேசமெங்கும் 57 கலாசாலைகளில் 2048 மாணவர்கள் கலாசாலைகளினின்றும் நீக்கப்பட்டதாக 'சைனா டுமாரோ' (China To-morrow 5 th march 1930) என்னும் பத்திரிகை கூறுகின்றது. ஒரு வருடம் செல்லவும் இவ்விதம் வெளியேற்றப்பட்ட மாணவர்களின் தொகை இரட்டிப்பும் அடைந்தது. ஆகவே ஜப்பானில் கொடுமை பொறுக்க இயலாது, மாணவர் குழப்பம் சென்ற 1929-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் எதிர்பாராதவாறு வலுவடைந்து விட்டதாக அறிகிறோம். கொரியா மாணவர்கள் சுதந்திர வேட்கை யுற்றுப் பெருங் கிளர்ச்சி செய்து ஜப்பானியர்களை எதிர்த்து வருகிறார்கள்.

## ஜப்பானியர்களின் இறுமாப்பு

கொரியாவின் அறிக்கைப்படி இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மாணவர்களின் இப்புதிய இயக்கம் ஆரம்பத்தில் சௌவல் நகரத்து ரெயில்வே நிலயத்தில் ஜப்பானிய மாணவர்கள் தமது இறுமாப்பின் காரணமாகக் கொரியர்களை மிக இழிவாகப் பேசியதே மூலகாரணமெனக் கொள்ளப்படுகிறது. குழப்பம் ஏற்பட்டதும் வழக்கம்போல் போலீஸ் அதிகாரிகள் ஜப்பானியர்களுக்குத் தகுந்த பாதுகாவலளித்துக் கொரியர்களைப் பலவிதமாகத் துன்புறுத்தலானார்கள். போலீஸ் தடியடிகள் மிகத் தாராளமாகப் பிரயோகிக்கப்பட்டன.



பலர் படுகாயப்பப்பட்டு வருந்தினர். அநேகர் சிறை புகுத்தப்பட்டனர். சிறை பட்டவர்களது நண்பர்கள் சிலர் அரசாங்கத்தின் கொடுமை சகிக்க இயலாது நகரத்தின் தெருக்களில் பெருத்த ஆரவாரம் செய்து அரசாங்கத்தைப் பகிரங்கமாகக் கண்டித்தனர். எனவே இச்சிறு இயக்கம் திடீரென வலுப்பட்டு மாணவர்களின் பொதுக் கூட்டமும் வேலை நிறுத்தமும் தேசமெங்கும் பரவி, கொரியா மக்களைத் தட்டி எழுப்பி விட்டது. கலாசாலைகள் யாவும் மூடப்பட்டு எங்கணும் மாணவர்கள் கைதி செய்யப்பட்டு வருகிறார்கள். மாணவர்களின் மனோ உறுதியையும் அரிய தியாகத்தையும் தேச பக்தியையும் கண்ணுற்ற தொழிலாளர்களும் வியாபாரிகளும் இப்புதிய இயக்கத்தில் கலந்து கொள்ளவே கொரியா தேசம் மக்களின் ஒன்றுபட்ட சுதந்திர இயக்கத்தை இப்பொழுது கண்டு வருகிறதெனக் கூறலாம். ஜப்பானியப் போலீஸ் அதிகாரிகள் சிறை புகுத்தப்பட்டிருக்கும் மாணவர்களில் 15 பேர்கள் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கெனச் சதியாலோசனைக் கூட்டத்தில் கலந்திருக்கிறார்களென்றும் அவர்கள் ஜப்பானிய அரசாங்கத்தாரால் மரண தண்டனைக்குள்ளாவார்களென்றும் அறிவித்து வருகின்றனர். ஆனால் குழப்பம் ஆரம்பமானது முதல் இதுவரை கைதியாகப்பட்டவர்களின் உண்மையான தொகை சரிவரக் கிடைக்கவில்லை. என்றாலும் சீனப் பத்திரிகைகளில் "ஹானலூலூ" என்னும் இடத்திலிருந்து கிடைத்திருக்கும் செய்தியிலிருந்து ஜனவரி மாதம் 30-ம் தேதிவரை 17000 மாணவர்களுக்கு மேல் கைதி செய்திருப்பதாக வெளியாயிருக்கின்றன. தவிரவும் ஹானலூலுவில் நியமிக்கப்பட்டிருக்கும் "ஹவ்வே—கொரியன் தேசிய சங்கம்" என்னும் ஸ்தாபனத்தின் காரியதரிசியாகிய மிர். ஹென்ரி-கிம் என்பார் கொரியா குழப்பத்தின் காரணமாக 78 கொரியர்கள் கொல்லப்பட்டு விட்டனர் என்று ஷாங்கேயிலுள்ள கொரியா தேசிய வாதிகளிடமிருந்து தமக்கு விவரம் கிடைத்திருப்பதாக அறிவிக்கிறார்.

## கொரியா மக்கள் கேட்பது.

எவ்விதமாயினும் கொரியா குழப்பம் என்றுமில்லாப் புதிய வடிவில் உருக்கொண்டு நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. வட மஞ்சூரியாவில் செல்வாக்கும் அதிகாரமும் அடைந்து வரும் ருஷியாவைச் சேர்ந்த பொதுவுடமைக்காரர்களின் பூரண ஆதரவைக் கொரியா பெற்று வருகிறதென்றும் சீனாவிற்கு விரோதமாக அனுப்பப்பட்ட ருஷியாவின் கிழக்குப் பிரதேசத்துச் செந்துருப்புக்கள் (The Far Eastern Red Army) பெரும்பாலும் கொரியர்களாலேயே ஆக்கப்பட்டிருப்பதால் இவ் வியக்கம் சடுதியில் சலனப்படுவது சாத்தியமில்லையென்றும் ஷாங்கேயிலிருந்து வெளிவரும் "சைனா வீக்லீ ரெவியூ" என்னும் பத்திரிகை அபிப்பிராயப்படுகிறது. இந்

# தமிழ் நாடக மேடை.

(ஸ்ரீ ஆண்டிக்கு, ஸ்ரீமதி கமலா தேவி சட்டோபாத்தியாயரின் நிருபம்.)

"நாடக மேடையை உத்தாரணம் செய்வதற்கேற்ற நிர்மாணத் திட்டத்தின் உண்மையான ஒரே அடிஸ்தானம், தாங்கள் கையேந்தி நடாத்தி வரும் அரங்க மேடை ஆராய்ச்சி மந்திர முறையேயாம். நாடக வளர்ச்சியும் அரங்க மேடை வளர்ச்சியோடு ஒரே சமயத்தில் நடைபெற வேண்டும். ஏனெனில், அவ்விரண்டும் ஒன்றையொன்று அடிப்படையாகவே முற்றிலும் சம்பந்தமுடையதாலேயே. இவ் வகைக்காகத் தென் நாட்டிலுள்ள இலக்கிய நிபுணர்களைக்கொண்டு தற்கால ஐரோப்பிய ஆங்கிலேய நாடக இலக்கிய முறைகளைத் தழுவி சிறியதாகவும் சாதுரியமாகவுமுள்ள நாடகங்களை யியற்றத் தாங்கள் பிரேரேபிக்க வேண்டும். அத்தகைய நாடகங்கள் புராண சம்பந்தமாகவோ, சமுதாய மாகவோ, அல்

---

நிலைமைகளின் உண்மைகளை ஒருவாறு கண்டுகொண்ட ஜப்பானிய அரசாங்கமும் கொரியாவில் புதிய சீர்திருத்தங்கள் அமைக்கும் பொருட்டு மிகத் தீவிர முயற்சிகள் எடுத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. கொரியர் மக்களும் ஜப்பானிய அரசாங்கத்திடம் சில நிபந்தனைகளை வெளியிட்டிருப்பதாகவும் அறிகிறோம். அவைகளிற் சில பின்வருமாறு:— கொரியா மக்கள் கலாசாலைகளில் ஆசிரியர் பதவிகளுக்கும் தலைவர் பதவிகளுக்கும் அருகரல்லர் என்ற அநீத முறைகளை அகற்ற வேண்டும். தேச சரித்திரம் பொருளாதார நூல்கள் சட்ட நூல்கள் சமூக நூல்கள் ஆகிய தேசீயக் கலைகள் யாவும் மக்களுக்கு ஊட்டப்படல் வேண்டும். ஜப்பானியப் புத்தகங்களை யகற்றிவிட்டுக் கொரியாப் புத்தகங்களை ஏற்படுத்துதல் வேண்டும். அரசியல் இயக்கங்களில் மாணவர்கள் கிரிமினல் குற்றத்திற் காளாகாதவாறு சேர்ந்து கொள்வதில் பூரண உரிமையளிக்கப்பட வேண்டும். போலீஸ் அதிகாரிகளின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டும். மாணவர்களின் அரசியல் ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஜப்பான் அரசாங்கம் இவைகளைக் கவனித்துத் தகுந்த ஏற்பாடுகள் செய்யும் பொருட்டுக் கொரியாவில் ஜப்பானிய ராஜப் பிரதிநிதியாக இருந்துவரும் அட்மைரல் பாரன் செயிட்டோ (Admiral Boron Saito) என்பாரை ஜப்பானிற்கு அழைத்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. எவ்விதமாயினும் தங் நலமும் தற்சுதந்திரமும் பேணிவரும் ஆதிக்க வலியும் கொண்ட ஜப்பானின் அதிகார அரசாங்கத்தினிடம் கொரியா பெறப்போகும் தேச நலன்களை எதிர்காலமே நிச்சயிக்க வேண்டும்.

---



ஸ்து கற்பனை சக்திக்கேற்றவாறோ உள்ள விஷயங்களைக் கையாண்டாலும், சுற்றி வளைப்பில்லாமலும் கருத்தைத் தவறவிடாமலும் சுருக்கமாகவும் இருக்க வேண்டும். பழைய பஞ்சப்பாட்டுகளை அறவே ஒழித்திடவும் வேண்டும்.

தாங்கள் எழுதி வரும் நாடகங்களெல்லாம் இத்தகைய புதிய முறைப்படி இருப்பதுபற்றி நான் களிப்படைகிறேன். தங்களுடைய நாடகமொன்றின் முன்னுரையில், தாங்கள் மஹா கவி இப்ஸனுடைய பெயரைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். உண்மையில் அம்மஹான் உலகத்தில் எப் பாகத்திலிருந்து தோன்றும் ஆசிரியனுக்கும் சற்குருவாக அமையத் தக்கவரேயாவார்.

தென்னாட்டில் அதாவது தமிழகத்தில், தற்பொழுதுள்ள முக்கிய குறை யாதெனில், நடிப்பதற்கேற்ற உயரிய நாடகங்களில்லாமையே. உண்மை உயர்தர இலக்கிய அபிவிருத்தி இயக்கங்கூட அங்கில்லாமலிருப்பதுவே அதற்கும் காரணமாகும். தமிழ் மக்களுடைய மனதை ஆங்கில பாஷை பயங்கரமாகப் பற்றிப் பிடித்திருக்கிறதை நோக்கின், எனக்குப் பரிதாபமாகத்தானிருக்கின்றது. நாடக இலக்கிய உத்தாரணக் கிளர்ச்சி தோன்றியிருக்கும் ஆந்திர நாட்டிற்குத் தாங்கள் சென்று பார்ப்பீர்களாயின் ஆங்குள்ள வித்தியாசத்தை நன்கு காணலாம். அந் நாட்டில் அனேகவிதமான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மகாராஷ்டிர நாடகமும் முற்றிலும் முன்னேற்றமடைந்துவிட்டது; கூர்ஜரம் அதைப் பின்பற்றியே செல்லுகின்றது.

இலக்கிய உத்தாரணத்துடன் ஓர் பொது கலாபி விருத்தி இயக்கமும் தோன்ற வேண்டியதும் அத்தியாவசியமாகும். ஏனெனில் எல்லாவித இன்பக் கலைகளும் ஓரே மூலாதாரக் கொள்கையைக் கொண்டவையும், ஒன்றையொன்று பாதிக்கத் தக்கவையுமேயாம். ஆனால் இவ் விஷயத்திலும் தென்னாடு அடிப்படையிற்றானிருக்கிறது. ஆந்திர தேசத்தில் பிரத்தியேகமாகக் கலாநிலைய மொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், வங்காள தேசம் இந்த விஷய முக்கிய நிபந்தனைகளை யனைத்தையும் சரிவரச் செய்து முடித்தாற்றான் நாடகாரங்க விஷயமாகவும் அது இந்தியாவிலேயே முதன்மை ஸ்தானத்தை வகிக்கின்றது. வங்காள தென்னிந்தியாவைவிட அது அரை நூற்றாண்டு முன் சென்றுவிட்டது. டன்மையில் தாகூர் குடும்பத்தார் இந்திய நாடகத்திற்கு அரங்க மேடைக்கு மியற்றியிருக்கும் உழைப்பு மிகவும் போற்றற்பாலது.

தாங்கள் கூட்டுவிக்க விரும்பும் அகில இந்திய நாடக மகாசபையை நான் என் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அப்பொழுது

தான் இந்தியாவின் மற்ற பாகங்களில் நடைபெற்று வரும் வேலைகளைப்பற்றித் தமிழகத்துக்கும் ஒருவித நிர்ணயம் ஏற்படும். தாங்கள் தீவிர முயற்சி யெடுத்து சர்வ பாஷைப் பிரதிநிதித்துவமுடைய ஒரு மகா நாட்டைக் கூட்டுவீர்களானால், இதன் பயனாகத் தமிழ் நாட்டிலக்கியமே உயர்வு பெற்றுவிடும்.

நாங்கள் (யானும் என் கணவரும்) சென்னையிலும் பிற தமிழ் நகரங்களிலும் பல முறை நாடகங்களை நடித்திருக்கின்றோம். பிரசார வேலையாகவும் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறோம். என் அறிவுக் கெட்டியவரையில் தென்னாட்டில் ஒரு சபையாவது புதிய முறையைத் தழுவி நாடகம் நடத்தவோ ஆராய்ச்சி செய்யவோ இல்லை யென்று உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் சொல்வேன். சென்னை சுகுண விலாச சபையும் பங்களூர் அமட்யூர் நாடக சபையும் என்னதான் உயர்ந்த வாய்ப் பேச்சுப் பேசிடினும் காரியத்தில் நன்கு தோற்றுக் கிடக்கின்றன. போதாக் குறைக்கு யாதேனும் புதிய இயக்கம் தோன்றினாலும் அவைகளைக் கவனிப்பதுவுமில்லை. பங்களூர் சபையார் எங்களது இயக்கத்தை ஒரு எதிர் இயக்கமாகக்கூடக் கருதி யிருக்கிறார்கள். இச் சம்பவங்களெல்லாம் தென்னாட்டிலுள்ள கல்வியாளர் எனப்படுவோரின் விரக்தியைத் தான் காட்டுகின்றது.

இதற்கு மாறாக அடுத்திருக்கும் பம்பாய் மாகாணத்தைப் பாருங்கள்! அங்குள்ள பெயர் பெற்ற நாடகத் தொழில் புரிந்து வரும் கம்பெனியார்கூடத் தாமாகவே வந்து எங்களுக்கு வேண்டிய உதவியைப் புரிந்ததுடன், எங்களுடைய திரைகளையும் காட்சி சாமானங்களையும் விலைக்கு வாங்கிக்கொண்டு, நாடக நடிக முறைகளிற் சிலவற்றையும் எங்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள்.

நானிதைக் கூறத் துணிவது ஏனெனில், தற்காலம் தென்னிந்தியாவிலுள்ள எந்த நாடக சபையிடமிருந்தாவது தாங்கள் ஒருவித குணாகரமான முன்னேற்ற விஷயத்தையும் கற்றுக்கொள்ளப் போவதில்லை யென்ற என் சொந்த அனுபவத்தைத் தெரியப்படுத்தும் பொருட்டே. நாடகாபிநயத்தின் உயர்வு தாழ்வைப்பற்றி அபிப்பிராயம் கூறுகிறதிற்குத் திறமையற்றவரிட மிருந்து ஆராய்ச்சி விஷயமாக என்னவிதமான உதவியை எதிர்பார்க்க முடியும்? ஆகவே, தாங்கள் இவ்வித உயர்ந்த பெயர் மட்டிலும் படைத்த சபைகளை நாடிச் செல்வதைவிட உயரிய நோக்கமும், விசாலக் கொள்கையும், மிகுந்த அனுபவமும் வாய்ந்த கலைஞர்களை நாடுவதே நலம்.

ஆகவே, தங்களுடைய நாடக ஆராய்ச்சி மேன்மையைப்பற்றி அறிந்தவுடன் எனக்கு மிகுந்த ஆனந்தமும் ஆவலும் உண்டாயிற்று.



என் புருஷரும் அதன் நடிக முறையைச் சென்ற வருடம் நேரில் பார்த்திருக்கிறாராகையால், மிகுந்த சந்தோஷமடைந்திருக்கிறார். தாங்களும் ஐரோப்பிய நாடக மேடை இயக்கங்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பீர்களென்றே நினைக்கிறேன். என் கணவரிடம் நமது "தேசியத் தலைவர்க"ளில் அனேகர் மேனாட்டாரிடமிருந்து நாடக விஷயமாக யாது கற்றுக்கொள்ளத் தக்கதிருக்கிறது? என்று கேட்டார்கள். இத்தகைய மதம் பிடித்த துரபிமானங்கள் நம் நாட்டுக்கே கேட்டைத்தான் விளைவிக்குமென்பேன்.

தற்கால ருஷ்ய நாடக மேடை, ஐரோப்பிய மேடைகளுக்கே தலைமை வகித்து வருகின்றது. ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் மிகுந்த ஆச்சரியகரமான ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றன. ஸ்ரீ. சட்டோபாத்யாயர் திரும்பி வரும்பொழுது அனேக திட்டங்களையும் முறைகளையும் கொண்டு வருவார். தாங்களும் இவ் விஷயத்திற்கேற்ற இன்னும் அதிகமான நூல்களையும் பிரசுரங்களையும் மற்ற விவரங்களையும் சேகரித்து வைப்பீர்களென்று நம்புகிறேன்.

தாங்கள் செய்து வரும் ஆராய்ச்சிகளைப்பற்றி அப்பொழுதுக்கப்பொழுது எனக்கு அறிவித்துக்கொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன். தங்களுடைய சிற்றரங்க மேடை இயக்கம் என்னை பரவசப்படுத்திவிட்டது. தங்களைப் போன்று ஒருவரேனும் உண்மை உழைப்போடு, தடபுடலின்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதை நினைத்து நான் மிகுந்த களிப்படைகின்றேன். ஸ்ரீ. சட்டோபாத்யாயர் பல தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து அனேக விஷய விவரங்களைச் சேகரித்திருக்கிறார். சாவகாசமேற்படும் பொழுதெல்லாம் யானும் என்னாலியன்ற அளவு முயற்சி செய்துகொண்டுதானிருக்கிறேன். வருங்காலத்தில் நாமனைவரும் நமது முயற்சிகளை ஒருமைப்படுத்தி அரும் பெரும் காரியங்களை நடாத்துவோமாக!"

---

குறிப்பு:—

திருவனந்தபுரத்தில் ஸ்ரீ. "ஆண்டி"யால் ஸ்தாபிக்கப்பட்ட "கலா மண்டல விழா"வுக்குச் சென்று பார்வையிட்ட பின்பு, ஸ்ரீமதி கமலா தேவியார் அன்னாருக்கு எழுதிய நீண்ட கடிதங்களின் சில பாகங்களை மொழிபெயர்த்துண்டு வரைந்திருக்கிறோம்.

உயர் திருமகள் கமலா தேவியார், நமது ஸ்ரீமதி சரோஜினி தேவியாரவர்களின் சகோதரர் ஸ்ரீமான் ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயாவின் மனைவியாவர். இவ்வம்மையார் தேசத் தொண்டு செய்ததின் பயனாக இப்பொழுது சிறைவாசம் செய்துகொண்டிருக்கிறார்.

ஆசிரியர், "பாரதி."

# டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம்.

ஸ்ரீமான் மாத்ரு பூதம் அய்யரவர்கள், B. A.

ஐரோப்பாக் கண்டத்தில் எல்லாத் தேசங்களிலும் கூட்டுறவு இயக்கம் பல துறைகளிலும் தழைத் தோங்கி நடந்துகொண் டிருக்கிறது. டென்மார்க்கு தேசமானது ஐரோப்பாக் கண்டத்தில் மிகச் சிறிய தேசமாகும். அதன் ஜனத்தொகை 35 லக்ஷம்தான். அதாவது, மதுரை ராமனாதபுரம் இவ் விரண்டு ஜில்லாக்களையும்விட குறைந்த ஜனத்தொகை உடையது. இத் தேசம் கடற்கரை யோரத்திலுள்ளது. இந் நாடு பள்ளத்திலும் சமுத்திரம் உயரத்திலுமிருப்பதால் அடிக்கடி சமுத்திரம் பொங்கி ஊரெல்லாம் வெள்ளத்தால் சேதப்பட்டு விடுவதை நீக்க, அத் தேசத்தினர் மிக மிகப் பிரயாசையால் சமுத்திர ஜலம் ஊருக்குள் வரா வண்ணம் 'டைக்ஸ்' என்று சொல்லப்படும் பெரிய பெரிய அணைகள் கட்டி வெள்ளச் சேதத்தைத் தடுக்கின்றனர்.

இத் தேசத்தின் பொருளாதார நிலையோ ஒரு காலத்தில் மிகக் கேவலமான ஸ்திதியிலிருந்தது. நில வளப்பக் குறைவால் அதிக மகசூல் விளையாமல் சாப்பாட்டிற்குப் பிற தேசத்தி லிருந்து தானியம் வரவழைக்க வேண்டி யிருந்தது. இந் நிலையுற்றிருந்த நாடு தற்போது கூட்டுறவு இயக்கத்தின் பயனால் நாடெங்கும் சங்கங்கள் ஸ்தாபித்து தேசத்தின் பொருளாதார நிலையை உயர்த்திப் பல்வேறு வழிகளில் முன்னேறிக் கொண்டிருக்கும் டென்மார்க்கின் சரிதையைப் படிக்கப் படிக்க வியப்பைத் தருவதாகும்.

ஒரு காலத்தில் அமெரிக்கா தேசத்திலிருந்து இந் நாட்டிற்குக் கப்பல் கப்பலாய் கோதுமை வரவழைத்தனர். இதைக் கண்ட உள்ளூர் விவசாயிகள் திகைத்து நின்றனர். அமெரிக்க தேசத்துச் சரக்குடன் தங்கள் சரக்குப் போட்டி போட வழியில்லை. ஆனால், விடா முயற்சியின் பயனாகத் தேசத்து ஜனங்களும் அரசாங்கத்தாரும் சேர்ந்து ஒத்துழைத்ததின் நிமித்தம் நாடு முழுமையும் பல்வகை ஐக்கிய (கோவாப்ரேடிவ்) சங்கங்கள் ஸ்தாபிக்கப் பெற்று,



விவசாயிகளுக்கு வேண்டிய எண்ணற்ற சாதனங்களும் அதன் மூலமாய் வழங்கப்பட்டு அவர்களின் செல்வ நிலை சீக்கிரத்தில் உயர்த்தப்பட்டது. நமது இந்தியா தேசத்தைப் போலவே இத் தேசத்திலும் சிறிய பட்டாதார்கள் அநேகருளர். 1925-ம் வருஷத்தில் 2 லக்ஷம் பட்டாதார்க ளிருந்தனர்களாம். இவர்கள் எல்லோருக்கும் பயன்படும்படியாய் அதே வருஷத்தில் பத்தாயிரம் கூட்டுறவு சங்கங்களிருந்தன. ஆனால் இந்தியாவைப்போ லல்லாமல் இவைகளில் பணமுதவி செய்யும் (கிரெடிட்) சங்கங்கள் மிகக் குறைவாகவே யிருந்தன. பாக்கி சங்கங்கள் சம்சாரிகளுக்கு விதை, உரம், உழவு கருவிகள் விலைக்குக் கொடுக்கும், கால் நடைகளுக்கு வேண்டிய தானியங்கள் விற்கும், நிலத்தில் விளைந்த பொருள்களை விற்கும் சங்கங்களாகவும் பசுக்களின் பாலைக் கடைந்து வெண்ணை எடுக்கும் சங்கங்களாகவும் பலவகைப்பட்டதாகும். இவ் விதம் விவசாயிக்கு வேண்டிய சௌகரியங்கள் பலவற்றையும் பல காலத்திலும் இவை போன்ற சங்கங்கள் கவனித்து வந்ததால், விவசாயிகள் தங்கள் விவசாயத்தையே கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வேறு கவலைகளின்றிக் காலங் கழித்து வந்தார்கள்.

ஒவ்வொரு விவசாயியும் விளைபொருள்களை விற்கும் சங்கத்தில் அங்கத்தினரா யிருப்பின் விளைந்த பொருள்களை உடனே அச் சங்கத்தில் சேர்த்துவிட்டுப் பருவத்தின் விலையில் $\frac{9}{10}$ பங்கு பெற்றுக்கொண்டு தன் கால் நடைகளைக் கவனித்து வளர்த்து வருவான். இச் சங்கங்கள் விளை பொருள்களைத் தாமதப்படுத்திக் காலத்தில் மொத்தமாக நல் விலைப்படுத்தி அதனால் வரும் இலாபத்தை எல்லோருக்கும் விதித்துக் கொடுக்கும். விவசாயி முன்னேற்றமடைய இது வொரு பெரிய சாதனத்தை அளித்ததாகும். நம் தேசத்திலோ இம்மாதிரி சங்கங்களில்லாமல் விவசாயிகள் கடன் மாத்திரம் வாங்கிக்கொண்டு அவைகளைப் பிரயோஜன மில்லாத செலவுகள் செய்து, திருப்பிக் கொடுக்க வழியில்லாமல், விளை பொருள்களையும் உடனுக்குடனேயே மிகக் குறைந்த விலைக்கு விற்றுப் பெருத்த கஷ்டமடைந்து வருகிறார்கள்.

டென்மார்க்கு தேசத்தில் கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்கு அளிக்கும் மற்றோர் சௌகரியம் போற்றத் தக்கது. சாகுபடி யில்லாத காலங்களில் நம் தேசத்தில் விவசாயிகள் வீண் காலம் கழித்து வருகிறார்கள். காமதேனுவான பசுக்களை அத் தேசத்தினர் மிகுந்த ஜாக்கிரதையுடன் ரக்ஷித்து வருவதினால் பால் சுரந்து ஐஸ்வரியம் பொங்கி வருகிறது. பசு மாடுகளை

நன்றாய்ப் போஷித்தும், நல்ல காளைகளைக் கொண்டு அவைகளின் வர்க்கத்தைப் பெருக்கியும், கறந்த பால்களிலிருந்து சுகாதார முறைகளில் பச்சைவெண்ணெ எடுத்தும் வியாபாரம் செய்து வருகிறார்கள். இம்மாதிரி, பாலில் வெண்ணெ எடுக்கும் தொழிற் சங்கங்கள் மாத்திரம் இந் நாட்டில் 900 இருப்பதும், அவைகளில் 686 கூட்டுறவு சங்கங்கள் இருப்பதும் அத் தேசத்தினரின் சாமர்த்தியத்தையும் அறிவையும் விளக்கிக் காட்டுகின்றது. இதுவன்றி, கால்நடைகளுக்குத் தீவனம் விற்கும் சங்கங்களும் அங்கு ஏராளமா யிருக்கின்றன.

இங்கு விவசாயிகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் வளர்த்து முட்டை எடுத்தும், இறைச்சி விற்றும் பெரும் முதல் சம்பாதிக்கிறார்கள். டென்மார்க்கு தேசம்தான் இங்கிலாந்தி விருப்பவர்களுக்குக் காலை போஜனம் அளிக்கிறது என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி கூட்டுறவுச் சங்கங்களால் செய்யும் வியாபாரம் நாட்டில் செய்யப்படும் மொத்த வியாபாரத்தில் எவ்வளவு பங்கிருக்கிறதென்பது கீழ்க்கண்ட எண்களால் தெரியவரும்.

| | விபரம் | | மொத்த வியாபாரத்தில் 100ல் பங்கு |
|---|---|---|---|
| 1. | பால், வெண்ணெ வியாபாரம் | | 90 |
| 1. | கசாப்பு | ,, | 70 |
| 3. | உரம், விதை | ,, | 25 |
| 4. | வாத்து, கோழி முட்டை | ,, | 22 |
| 5. | கால்நடை அபிவிருத்தி | | 15 |

இச் சிறிய தேசம் வருஷா வருஷம் ஐக்கிய ராஜ்ஜியத்திற்கு (United Kingdom = இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து) வெண்ணெ, இறைச்சி, முட்டைகள் மாத்திரம் 30 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறதென்றால், ஒழிந்த நேரத்தில் விவசாயிகள் சம்பாதிக்கும் வியாபாரத்தின் வருமானம் நன்கு விளங்கும்.

1925 வருஷத்தில் மாத்திரம் டென்மார்க்கு தேசத்திலுள்ள எல்லாக் கூட்டுறவு சங்கங்களும் 5410 லக்ஷம் டாலர்களுக்கு வியாபாரம் செய்திருக்கின்றது.

இத் தேசத்தில் கூட்டுறவு இயக்கம் பரவியதற்கு ஒரு காரணமுண்டு. இந்தியாவைப் போல் சங்கங்களை நடத்துவதற்கு சட்டத்தில் அமுல் நடத்த அதிகாரம் வெகுவாகக் கிடையாது. ஆனால், அச் சங்கங்களில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நிபந்தனைகள் சட்டத்தின் அதிகாரம் போல் நடத்தப்பட்டு வருகிறது. தங்களை உயர்த்திக்கொண்டு முற்போக்கு அடையவேண்டிய வழிகளைத் தாங்களே தேடிக்கொண்டு

# ஆசிரியர் குறிப்புகள்.

## புதிய போஷகர்கள்

இதுவரையிலும் எவ்விதத்திலும் எம்மைப்பற்றிக் கேட்டிராத-அறிந்திராத, "பாரதி"ப் பத்திரிகையைக் கண்டறியாத-படித்தறியாத-கேள்விப்பட்டறியாத, வேறு ஜில்லாவாசிகளான வேறு குல திலகர்களான ஸ்ரீமான் ஆ. ஆத. இராமனுதத் தேவரவர்களும் (மிராஸ்தார், ஆதியாகுடி, புளியல் போஸ்ட், இராமநாதபுரம் ஜில்லா), ஸ்ரீமான் நா. பூ. வேலுத் தேவரவர்களும் (மிராஸ்தார், சிறுகல்லூர், திருவேகம்பத்து போஸ்ட், இராமனுதபுரம் ஜில்லா), ஸ்ரீமான் பி. மு. முத்துவேல் உடையார் அவர்களும் (மிராஸ்தார், அதங்குடி, புளியல் போஸ்ட், இராமனுதபுரம் ஜில்லா), "பாரதி"யை முதலாவது படித்தவுடன், அதன் அறிய தொண்டையும் போக்கையும் தியாகத்தையும் நன்கு தெரிந்து, அதன் போஷகர்களாக முன்வந்து எமக்கு உதவியையும் ஊக்கத்தையும் அளித்திருக்கிறார்கள். இப் பிரபுக்களைப் போற்றி அநேக வந்தனங்கள் அளிக்கிறோம்.

எம்மை முற்றும் அறியாதவர்களா யிருப்பினும், "பாரதி"யின் அருமையையும் ஆற்றலையும் அவசியத்தையும் அறிந்து போஷகர்களாகச் சந்தோஷத்துடன் இக் கனவான்கள் முன்வந்ததைப்பற்றி இங்குப் பிரத்தியேகமாய்க் குறிப்பிடாம லிருக்க முடியவில்லை. இம்மாதிரியான கட்டுப்பாடாய்ச் சங்கங்களை நடத்தி வருகிறார்கள். அங்கத்தினர்களுக் குள்ளிருக்கும் சகல சண்டை சச்சரவுகளையும் பஞ்சாயத்துக்களிலேயே தீர்த்துக்கொண்டு வருகிறார்கள். வருஷா வருஷம் பள்ளிக்கூடங்களில் கூட்டுற வியக்கத்தைப் பற்றிப் போதனை செய்யப்படுவதுடன், விவசாயக் கல்லூரிகளில் விசேஷப் பயிற்சியும் அளித்து வருகிறார்கள். விவசாயிகள் முன்னேற்ற மடைதற்கு அவர்களின் அக்ஞான இருளை அகற்ற வேண்டுமென்ற கருத்தைக் கொண்டு, கிராமாந்திர ஜனங்களுக்கென்று அவர்கள் ஓய்வு நேரத்தில் பிரத்தியேகமான பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு உலக ஞானம் பரப்பப்படுகின்றது.

இத்தகைய வழிகளில், மிகவும் கேவலமான நிலைமையிலிருந்த டென்மார்க்கு தேசத்தினர் கூட்டுறவு இயக்கத்தினால் தங்களையும் தம் தேசத்தையும் உயர்த்தி க்ஷேமமுற்று வாழ்ந்து வருவதைக் கண்டு, நாமும் அவற்றைப் பின்பற்றி மேன்மையடைவோமாக.

பத்திரிகாபிமானிகள் ஊருக்கு ஒருவரேனும் இருப்பரேல், நமது நாடு இப்பொழுது இந் நிலையில் இருக்காது. எமது தாலுகாவிலும் எமது ஜில்லாவிலும் வதியும் கனதனவான்களும், தமிழ் நாட்டுப் பிரபுக்களும் இப் பத்திரிகாபிமானச் சீமான்களைப் பின்பற்ற வேண்டுகிறோம்.

## முகம்மதிய சகோதரர்கள்

அநேக இந்திய முகம்மதிய சகோதரர்கள் தேச பக்தியின் மேலீட்டால், தேசீயத்தில் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்களென்று அறிந்து மகிழ்கிறோம். ஒரு தேசம் அந் நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தம் என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தியாவிலேயே ஒருவரைப் பிறர் ஒருவரும், ஒரு சமூகத்தாரைப் பிற ஒரு சமூகத்தாரும் சந்தேகித்துப் பகைத்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஆகையினால், இஸ்லாமிய சகோதரர்கள் அனைவரும் தேச விடுதலையில் ஒன்றுபட்டு உழைப்பதே முறையாகும். அதனையே விரும்புகின்றோம்; வேண்டுகின்றோம்.

## கிராமங்களின் விழிப்பு

கிராமத்தார்கள் தங்களின் நிலையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். கிராம ஜனங்கள் தேசீயத்தில் அதிகமாகப் பின்பற்றுவதே இதற்கு உதாரணமாகும். பிரசங்கங்களினாலோ, பிரச்சாரங்களினாலோ கிராமத்தார்களுக்கு இப்பொழுது புதிய உணர்ச்சி தோன்றிவிடவில்லை. காலத்தின் மாறுபாட்டால் கிராமங்கள் விழித்தெழ ஆரம்பித்திருக்கின்றன. இந்த ஜனங்களுக்கு இத் தருணத்தில் புத்தி புகட்டத் தேசீயவாதிகளும், உழைப்பதற்குத் தேசீயத் தொண்டர்களும் முன்வந்திருக்கிறார்கள். கிராமத்தார்க்கு அறிவுப் பசியும் சுதந்திர தாகமும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. கிராமங்களின் விழிப்பே இந்தியாவின் விடுதலைக்கு முதலாவது அறிகுறியாகும்.

## ஜெயகர்-சாப்ரூ ராஜி முயற்சி

சத்யாக்ரகப் போர் ஓங்கி வளர்ந்து வருகிறதேயன்றி அடக்கு முறையால் அடங்கி ஒடுங்கி விடவில்லையென்று கண்ட இராஜப் பிரதிநிதி இர்வின் பிரபு அவர்கள், திருவாளர்கள் ஜெயகர், ஸர். தேஜ் பகதூர் சாப்ரூ ஆகிய இரு பிரபல மிதவாதக் கனவான்களின் ராஜியாகும் விருப்பத்திற்கிணங்கி, சிறையில் தலைவர்களைக் கண்டுபேசி ஓர் முடிவுக்கு வருமாறு மனமொப்பி அனுமதித்துள்ளாரென்னும் செய்தி யாவரையும் மகிழ்விப்பதாயிருக்கிறது. இந்தியர் யாவரும் எப்பொழுதும் சமாதானத்துடனேயே வாழ்வதை அன்று முதல் இன்று வரையும் இனிமேலும் விரும்புபவர்களாயிருக்கிறார்களென்பதை அறியாத குற்றத்தினாலேயே வீணான மனஸ்தாபங்களும் கஷ்ட நஷ்டங்களும் விளைகின்றன. ஆளுவோரும் ஆளப்படுவோரும் தங்கள் தங்கள்



போக்கைச் சிறிது மாற்றியும் விட்டுக்கொடுத்தும் வருவதால் முழுகிப்போவதொன்றுமில்லை. பூரண சுயேட்சையே விருப்பம் என்று லாகூர் காங்கிரஸில் தீர்மானித்தாலும், லண்டன் சர்வகக்ஷி மகாநாட்டின் அடிப்படையான நோக்கம் குடியேற்ற நாட்டந்தஸ்துத் திட்டம் வகுப்பதாகவே யிருப்பதாயிருக்க வேண்டுமென்று குறைந்த அளவில் விரும்பியதைக் கூட உல்லங்கனஞ் செய்து, தகுந்த சந்தர்ப்பத்தில் பிரஜைகளின் மனதைக் கவராது அடக்கு முறையாலும் அவசரச் சட்டங்களாலும் பல தியாகிகளையும் பெரியோர் முதல் பள்ளிப் பாலர்—சின்னஞ் சிறுமிகள் ஈறாகச் சிறையில் தள்ளிவிட்டதால் கண்ட பயனென்ன? தேசத்தின் மூலை முடுக்கிலும் சுதந்தரத் தாகம் பெருகி, கஷ்ட நஷ்டங்கள் எங்கும் பரவி, வியாபாரச் சீர்கேடு நிறைந்து, அரசாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் பொருள் நஷ்டத்தையும் மனக் கசப்பையும் ஒருங்கே கொணர்வதற்குத்தானோ அடக்கு முறையும், அவசரச் சட்டங்களும்? இப்பொழுதேனும் அரசாங்கம் இது விஷயத்தை யறியத் துடங்கியதற்குச் சந்தோஷப்படுகின்றோம்.

நாட்டின் விருப்பம் எப்படியோ அப்படியே அரசாங்கமும் இருக்க வேண்டும் என்பதை மறப்பதாலோ அல்லது மறைப்பதாலோ குறுகிய நோக்கம் நிறைவேறிவிடுமா? ஒத்து வாழ்ந்தால் ஆங்கிலர்—இந்தியர் என்ற வித்யாசம் தலைகாட்ட விடமுண்டோ. இன்னும் இவ்விதக் கூடா வழக்கங்களும் நியாயமில்லா முறைகளும் கைக்கொள்ளுவதானால், நாகரீகர்—நாகரீக அரசாங்கம் என்று சொல்வதற்குப் பொருள்தானென்ன? மண்ணாசைப் பேய், பிரிட்டிஷாரை இன்னும் விலாங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தால், அஃது பேராசைப் படுகுழிக்கே கொண்டு செல்லும் என்பதை ஏன் அறியக் கூடாது? இதனை யுணர்ந்தே நேர்மையான ஆங்கில மேதாவிகளும்—கனவான்களும் இந்தியாவை அடக்கி ஆள்வதைக் கண்டித்து—வருந்தி வருகின்றார்கள். அவர்கள் சுயநலத்தை ஒதுக்கிப் பர நலங்கொண்டு சொல்லும் நியாய முறையைப் பெரிதும் ஏற்காது போயினும், அரசாங்கம் ஒரு சிறிதேனும் அனுசரிக்க வேண்டுவது அவஸ்யமாகும். ஆங்கிலக் கனவான்களின் இக் கொள்கையைப் பின்பற்றிய கூட்டத்தார்களில் ராஜி முயற்சிக்குச் செல்லும் திரு. ஜெயகரும் ஸர். சாப்ரூவும் பிரதானமானவர்கள். நாட்டில் பகைமையும் துவேஷமும் வளர்ந்துவிட்டால், இதனை அணைப்பது மிகக் கஷ்டமாய் முடிவதோடு இதன் முடிவு எங்குக் கொண்டு விடும் என்பதையும் அறிவதற்கில்லை. ஆகையினாலேயே, இச் சந்தர்ப்பத்தை நழுவ விடக் கூடாதென்பதைக் கருதி இவர்கள் இதில் தலையிட்டிருக்கிறார்கள். இவர்களின் இந் நன் முயற்சிக்கு இர்வின் பிரபுவும் தனது ஆதரவைக் காட்டி வேண்டிய உதவியும் செய்திருப்பதற்கு வந்தனம் செலுத்துகிறோம். தகுந்த சந்தர்ப்பத்தில் சரியாக நடந்து பின் சிறிது மாற்றமோ கூட்டவோ நேரிடினும், அது அவ்வளவாகப் பாதிப்பைக் கொடுத்து விடாது. இதனை நன்குணராமலே அதிகாரச் செருக்கால், செல்வத் திமிரால், மண்ணாசைப் பேயால் பீடிக்கப்பட்டு அகன் இஷ்டப்படி நடப்பது இக் காலத்திற் கொவ்வாததும் ஜெயம் பெறாத வீண் காரியமுமாகும். இவைகளை உணர்ந்த பல தேச அறிஞர்கள், இந்தியாவின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யுமாறு அவ்வப்பொழுது, அரசாங்கத்திற்கு அறிவுறுத்தி வருகின்றதை அரசாங்கம் கவனிக்காதிருந்துவிட முடியாது. நிற்க.

ஏரவாடா சிறைக்குச் சென்று மகாத்மா காந்தி யடிகளைக் கண்ட இவ்விரு தலைவர்களும் மகிழ்ச்சி யுற்ற தோற்றத்தினர்களாகவே காணப்படுகிறார்களென்று தெரிகின்றது. ஆனால் மேலும் இவர்கள், பண்டிதர்கள் மோதிலால் நேரு ஜவஹர்லால் நேரு ஆகிய இருவர்களையும் சந்திக்காது முடிவுக்கு வர வழியில்லாததினால், மகாத்மாவிடம் கடிதம் வாங்கிக்கொண்டு அவர்களையும் கண்டு, பின் ஏரவாடாவில் மகாத்மா—ஜெயகர்—சாப்ரூ மூவருமாக ஓர் திட்டமான முடிவிற்கு வருவர். இம் மூவரின் முடிவான திட்டத்தை எதிர்பார்த்திருக்கும் இர்வின் பிரபுவும் ஒப்புக்கொள்ள வேண்டும்; ஒப்புக்கொள்ளுவாரென்றே நினைக்கின்றோம். தற்போதைய ராஜி நடை முறையை வெளிப்படுத்தாமல் இரகஸ்யமாகவே காக்கப்படுவதால், சிறையில் பேசிய விஷயம் இன்னதென்று நிச்சயிக்க முடியவில்லை யாகையினால், காத்திருக்கத்தான் வேண்டியதா யிருக்கிறது. ஆயினும் சிரமத்திற்குத் தகுந்த பலன் உண்டென்பதை மறுக்க முடியாது. இந்த ராஜி முயற்சி பயன் பெற முயற்சிக்கும் லார்டு இர்வின், திருவாளர்கள் ஜெயகர்—ஸர். சாப்ரூ இவர்கள் முயற்சி சித்தி பெற வல்லான் தாளடி போற்றி வணங்குகின்றோம்.

## தபால் நிலையங்களில் புஸ்தக விற்பனை

அர்ஜெண்டைன் குடியாட்சி நாட்டில், தபால் நிலையங்களில் புஸ்தகங்கள் விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் அந் நாட்டு மக்கள் அதிக அதிகமாய் அநேக புஸ்தகங்களை வாசிக்கப்போகிறார்கள்; இம் முறையானது புஸ்தக ஆசிரியர்களுக்கும் பிரசுரர்களுக்கும் உதவியா யிருப்பதுடன், மூலை முடுக்குக் கிராமங்களில் வாழும் ஜனங்களுக்கும் எவ்வளவோ வசதியாயிருக்கிறது; அதிகமாக வாசிப்பவர்கள் உண்டாகப் போகிறதால், அங்குக் கல்வி அறிவு அதிகமாகப் பரவப் போகின்றது. அத் தபால் ஆபீசுகளில் புதிய புஸ்தகங்களின் விளம்பரங்களும் புஸ்தக ஜாப்தாவும் இருக்கின்றன. புஸ்தக வாசிப்பில் ஆசை ஏற்படும் பொருட்டு ஜெர்மன் தேசத்தில் சில பிரசுரர்கள் புஸ்தகங்களை ஜனங்களுக்கு விநியோகிக்கிறார்களென்றும் அறிகிறோம்.

இந்தியாவில் இவ்வாறு செய்தால் இந்தியர்கள் கணக்கற்ற புஸ்தகங்களை அதிகச் சிரமமின்றி, வாசித்து மகிழ்ந்து அறிவை அடைவார்கள். இத் தேசத்தில் தபால் ஆபீசுகளில் புஸ்தக விற்பனை ஏற்பட்டால், இந்தியர்களுக்குக் கல்வி விஷயத்தில் எவ்வளவோ உதவியா யிருக்கும். இதனை நமது சர்க்காரா கவனிக்கப்போகிறது? இல்லை. ஆயினும், நாமே இதனைக் கவனித்து வேண்டியது செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டு-முயற்சி செய்து பயன்பெற வேண்டும். இதற்காக ஓர் சாரார் முயன்றாலும் போதுமானது. இதனைச் செய்ய நம்மவரிற் பலர் மிகத் தகுதியுள்ளவர்களா யிருக்கிறார்கள். எனினும் முன் வந்து முயற்சிப்பார்களா? என்பதைப் பின்னர்தான் சொல்லமுடியும்.



## கிறிஸ்தவ சகோதரர்களுக்கு

இந்தியாவில் 2550 லக்ஷம் இந்துக்களும் 700 லக்ஷம் இஸ்லாமியர்களும் 50 லக்ஷம் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். இந்தியாவிலே பிறந்து இந்தியாவிலே வளர்ந்து இந்தியாவிலேயே வாழ்ந்து வரும் இந்தியக் கிறிஸ்தவச் சகோதரர்களில் அநேகர், தமது தாய் நாட்டை மறந்து, தங்கள் மற்ற சகோதரர்களையும் புறக்கணித்து மூன்றாவது கட்சியான அயல் நாட்டாருடன் சேர்ந்திருப்பது சரியன்று. இத் தேசத்தில் மற்ற இந்தியர்களைப் போன்று கிறிஸ்தவர்களும் மற்றும் சிறு சிறு பிரிவினர்களும் என்றும் வசிக்க வேண்டியவர்களே. இவர்கள் பெரிய தொகையினரான இந்துக்களையும் முகம்மதியர்களையும் சந்தேகித்து இப்படிச் செய்வது சரியல்ல. இந்தியாவில் ஆதியில் உண்டான சிரியன் கிறிஸ்தவர்கள் 18-ம் நூற்றாண்டு முதல் இந்து சமஸ்தானமாம் திருவாங்கூரில் சமாதானமாய் வாழ்ந்து வருகிறார்கள். அயல் நாட்டு ஆட்சியிலும் நாகரீகத்திலும் மூழ்கி யிருப்பதின் காரணமென்ன? கிறிஸ்தவர்களோடு அரசாங்கத்தார் பேசும்பொழுது "உங்கள் துரைத்தனம்", என்று பேசுவதற்காகவா இங்ஙனம் நடக்க வேண்டும்?

நாட்டுக்கேற்ற சுதேச நடை உடை பாவனை பழக்க வழக்கம் அபிலாசை முதலியவைகளுக்கெல்லாம் பரதேசிக் குருக்கள் பிடிக்காமல், சுதந்திர சமத்துவ உணர்ச்சிகொண்டு சில கிறிஸ்தவச் சகோதரர்கள் ஒன்றுகூடிச் சுதேசக் கிறிஸ்தவர்கள் சங்கம் ஒன்று ஏற்படுத்தி யிருப்பதைக் கவனியுங்கள். அன்னியர்கள் நம்மை எவ்வளவோ வெறுக்கிறார்கள். நமது சுதேசத்தைச் சேர்ந்தவரான திரு. ருத்ரா அவர்களுக்காக திரு. அறிஞர்—ஆசிரியர்—அன்பர் ஆண்ட்ரூஸ் அவர்கள் பரிந்து பேசி கௌரவம் கொடுத்ததின் காரணமாகவும், வேறொரு சபைக் கோவிலில் ஆராதனை நடத்தியதற்காகவும் அவரைச் சேர்ந்த சபையார் அவரை விரும்பாமற் போகவே, திரு. ஆண்ட்ரூஸ் அதிலிருந்து விலகிக் கவிச் சக்ரவர்த்தி ரவீந்திரநாத் தாகூரது ஆச்சிரமத்திலிருந்து கொண்டு பொதுநலத் தொண்டாற்றி வருகிறார். கிறிஸ்தவ பாதிரிகளில் சிலர் நமது தேசாபிவிருத்திக்கும், சுதேச பாஷாபி விருத்திக்கும் உழைத்திருக்கிறார்கள். உழைக்கிறார்களென்பதை நாம் என்றும் மறுக்க மாட்டோம். அவர்களுக்கு இந்தியாவின் வந்தனங்கள்.

கிராமங்களாலேயே நமது தேசம் ஆக்கப்பட்டிருக்கிறது. இங்கு சுமார் 2,800 இலட்சம் ஜனங்கள் 7½ இலட்சம் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். 100-க்கு 90 பேர்கள் கிராமங்களிலேயே இருக்கிறார்கள். கல்வியிலும் பொது அறிவிலும் செல்வத்திலும் சுகத்திலும் கிராமத்தார்கள் மிக மிகத் தாழ்வா யிருக்கிறார்கள். சுயராஜ்யமா

யிருப்பின் இவர்கள் இவ்வளவு தாழ்மையா யிருக்கமாட்டார்கள். 40 லட்சம் ஜனத்தொகை கொண்ட ஸ்வீடன் தேசம், 20 லட்சம் ஜனப் பெருக்குள்ள நார்வே நாடு, 30 லட்சம் பேர்கள் வாழும் டென்மார்க்கு தேசம் இன்று சுதேச ஆட்சியால் எவ்வளவு மேன்மையா யிருக்கின் றன பாருங்கள்! ஜனத்தொகையில் நமது தமிழ் நாட்டைக் காட்டி லும் நார்வே தேசம் 10 மடங்கும், டென்மார்க்கு தேசம் 6 பாகமும் குறைந்திருப்பினும் அவைகளின் அபிவிருத்தியே சாலச் சிறந்ததா யிருக்கிறது. அந்நிய ஆட்சியால் நாம் நாளுக்கு நாள் மிக மிகத் தாழ்ந்துகொண் டிருக்கிறோம். இவைகளை யுணர்ந்த பம்பாய் கிறிஸ்தவ சோதரர்கள் ஒரு முகமாக தேசிய விடுதலைக்கு ஆதரவு கொடுத்தும் சேர்ந்தும் உழைத்தும் வருகிறார்கள். இதுபோலவே கிறிஸ்தவச் சகோதரர்களனைவரும் சேர்ந்து இந்தியாவின் விடுதலை முயற்சியில் பிரவேசிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தங்கள் அன்புக் கிறிஸ்தவ மதத்திற்குக் குற்றங் குறை வருமென்றோ தீங்கு வருமென்றோ சந்தேகிக்க வேண்டாம். இந் திய மக்களுக்குத் தலைவராய் விளங்கும் காந்தியடிகள் ஏசுநாதாது உப தேசங்களில் அப்படியே மூழ்கிக் கிடப்பவர். "கிறிஸ்து நாதரைப் போல ஜீவியுங்கள்; மலைப் பிரசங்கத்தின் படி நடவுங்கள்" என்று உபதேசிக் கும் மகாத்மாவைப் பின் பற்றித் தேச விடுதலைக்காக உழைக்க ஏன் தயங்கிக்கொண் டிருக்கவேண்டும்? "உங்கள் தேசத்தில் கிறிஸ்துவின் சாயலை அணிந்து, அவரைப்போல் ஜீவிக்க உங்களுக்கு ஆசையுண்டா னால் தாராளமாய் இந்தியாவுக்கு வாருங்கள்" என்று நமது கவிச் சக்ரவர்த்தி ரவீந்திரநாத் தாகூர் ஒரு கிறிஸ்தவப் பாதிரியாருக்கு எழுதியிருக்கிறார். இதனைச் சிறிது கவனிக்கில் கிறிஸ்தவர்கள் சந்தே கங்கொள்ளச் சிறிதும் நியாயமில்லை யென்றே சொல்லவேண்டும்.

ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இன்னும் மற்ற மதஸ்தர்களுக்கும் இந்தியா தாய் நாடு. நம்மில் சிலர் இந்த இரகசியத்தை அறியாது போயினும், மற்ற தேசவாசிகள் ஒரே முகமாக ஏகோபித்து நம் அனைவரையும் "இந்தியர்" என்று சொல்வ தைக் கண்டேனும் இதுபரியந்தம் கொண்டிருந்த கொள்கையை மாற்றி "இந்தியா ஓர் வீடு. இதில் வசிக்கின்ற உரிமை யுடையவர்கள், இந்தி யர்கள்" என்ற உயர்ந்த எண்ணத்தோடு ஒற்றுமை யடையுங்கள்; விழித்தெழுங்கள்; தேசப்பணியில் இடம் பெறுங்கள். ஏழைகளைப் பாருங்கள்; கிறிஸ்து நாதரை நினையுங்கள்; அவரைப் பின்பற்றுங் ள்; நாட்டை விடுவிக்க உடனே ஓடிவந்து வேலை செய்யுங்கள்.

19853